கல்கி



KALKI ஏப்ரல் 1, 1951 4 அணா



துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 150-50 TM


கதையுலகிலே புதியபாதை!
காதலும் மர்மமும் கலந்த சமூகச்சித்திரம்
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
ஓர் இரவு
விரைவில் வருகிறது
AVM
புரொடக்ஷன்ஸ்
கதை, வசனம்:
C.N. அண்ணாத்துரை, M.A.,


1851
A CENTURY OF SEWING SERVICE
SINGER SEWING MACHINES
1851 · 1951
1951
அறிமுகப்படுத்துதல்
சிங்கர் சேவையின்
மற்றோர் நூற்றாண்டு
100 ஆண்டுகளாக உலகமெங்கும் தலைமை வாய்ந்தது
LAS. (B)

அஜந்தாவின் புராதன அழகு



அஜந்தா தோன்றிய நாள் முதலாக இந்தியக் கலைஞன் மிகவும் அழகானதும், கலை அம்சம் பொருந்தியதும், பகட்டானதுமான ஆடைகள் நெசவு செய்து இருக்கிறான். அவைகள் இந்தியப் பெண்மணிகளை தொன்று தொட்டு அலங்கரித்து வந்து இருக்கின்றன.

இங்கே வரைந்து இருக்கும் பெண்மணியின் சித்திரம் அஜந்தா சித்திரங்களை பின்பற்றி வரையப்பட்டிருக்கிறது. இவள் கி. பி. 6ம் நூற்றாண்டில் வசித்த பெண். அவள் அணிந்து இருக்கும் ஆடை நெசவின் அழகையும், துணியின் நாகரீகத்தையும் வெளியாக்குகிறது.

கடாவ் மில் தங்களுடைய பிரிண்டெட் வாயில்களை இன்றைய இந்திய பெண்மணிகளுக்கு அளிக்கும் போது இந்தியக் கலைஞனின் சிறந்த கைத்திறமையைப் பின்பற்றி அதே கவர்ச்சிகரமான அமைப்பையும் வர்ண அழகையும் வெளியிட முயற்சி செய்கிறது.

இன்றும் கடாவ் அழகிய வாயில்களில் பிரதிபலிக்கிறது.

கடாவ்
வாயில்கள்

தி கடாவ் மில்ஸ், பைகுலா, பம்பாய், 27, ஆபீஸ் : லக்ஷ்மி பில்டிங், பலார்டு பியர், பம்பாய். ஜவுளிக்கடை : மூல்ஜி ஜேதா மார்கட், கோவிந்த் சௌக், பம்பாய் — 2.

AMIL.



குளிர்ந்த பானமாக அல்லது சூடாகப் பருகினாலும் ஓவல்டின் எந்த சமயத்திலும் ருசி மிகுந்த, போஷாக்கு அளிக்கும் பானம். உஷ்ண வேளையில் ஓவல்டின் கலந்த குளிர்பானம் புத்துணர்வளிக்கிறது. இரவில் தூங்குவதற்கு முன் ஓவல்டின் சூடாகக் குடித்தால் ஆழ்ந்த சுகமான நித்திரையைத் தருகிறது; மறுநாள் புதிய ஜீவசக்தியும் ஏற்படுகிறது. ஓவல்டினில் சுத்தமான பசுவின் [illegible], பழுத்த பார்லி மால்ட், சிறந்த கொக்கோ, இயற்கை உணவுகள், பாஸ்படைட்கள், பி & டி விட்டமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விட்டமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினை விடச் சிறந்தது வேறு கிடையாது. டாக்டர்கள் [illegible] சொல்கின்றனர். போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: ஜேம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.,

ஓ வ ல் டி ன்

குளிர்ந்த அல்லது சூடான
பானம் — எதுவும் ருசியானதே



OV.327



அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'

"Of all the toilet creams that I have used, I unhesitatingly prefer Oatine Cream as being the pleasantest and most satisfactory for improving the complexion."

Kanan Devi

OATINE

SNOW AND CREAM



Make sure seal is unbroken

02


எதிர்பாருங்கள்
சௌதாமினி
தமிழ்
1949ல் சென்னை அரசாங்கத்தின் பரிசைப் பெற்ற
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனி தயாரித்தது
கண்ணாம்பா · எம்.கே.ராதா ·
எஸ்.வரலக்ஷ்மி · ஏ.நாகேஸ்வர ராவ்
டி.ஆர்.ரஜனி · டி.ஆர்.ராமச்சந்திரன்
நடித்தது
டைரக்ஷன்
கே.பி.நாகபூஷணம்

பொருள் அடக்கம்

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 10
இதழ் 35

1951 ஏப்ரல் 1

விக்ருதி ஆண்டு
பங்குனி 19உ

நிகழ்ச்சிச் சித்திரம்	சாஸ்திரி ...	10
பாகிஸ்தான் கபிட்சம்?	... ...	11
நன்மை வந்தெய்துக!	... ...	12
ஓடு பிசாசே! ஓடு!	... ...	13
கொடுக்கில் விஷம்!	... ...	14
இளங்கோவின் துறவு (அட்டைப்பட விளக்கம்)	... ...	15
பொன்னியின் செல்வன்	கல்கி	17
அக்கப்போர்	... ..	28
ஆரோக்கிய ரகசியம்	வி. என். குமாரஸ்வாமி ..	29
குக்குறுவான்	மா. கிருஷ்ணன்	31
விளக்கேற்றினர்	நா. ராமச்சந்திரன் ..	32
மத்திய கேந்திரம்	ஜெயமணி	35
புது வாழ்க்கை	பாது ...	37
போலீஸ் விளையாட்டு	சாமா ..	41
குதிரை வியாபாரி (பாப்பா மலர்)	அக்ஷயம் ...	42
விச்சுவின் சாமர்த்தியம்!	விஜயம் ...	45
இன்ஸ்பெக்டர் சாய்	கே. எம். முன்ஷி—ரா. வீ. .	46
பதிலுக்குப் பதில்!	பி. எஸ். மணி ...	52
கம்பர் தரும் காட்சி	டி. கே. சி. ...	53
மண் கூஜா	எஸ். வி. எஸ். ...	55
கை வண்டிக்காரன்	சுகி ...	58

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பழுத்தால்....
கோவா
"காலம் நமக்குச் சாதகமாகவே இருக்கிறது. புதுச்சேரி, கோவா முதலிய பிரதேசங்கள் கூடிய சீக்கிரத்தில் பாரத தேசத்துடன் ஐக்ய மாகி விடும்."
—டாக்டர் கேஸ்கர்
நீங்கள் கேட்டீர்களா!
"இனி நம்முடைய குழந்தைகளுக்கு ஒரே வர்ணத்தில் தீட்டிய பூகோளச்சித்திரங்கள் கொடுக்க வேண்டும்."
— ஆஸாத்
பாட்டியின் அலங்காரம்
"ஜஸ்டிஸ் கட்சியைப் புதுப்பித்து ஒரு பெரிய அரசியல் கட்சியாக உருவாக்குவதற்குச் சாதகமான சூழ்நிலை நிலவுகிறது."
—பி.டி.ராஜன்
SHASTRY

கல்கி

பாகிஸ்தான் சுபிட்சம்?

கண்கட்டு வித்தைகளில் பல ரகம் உண்டு. அவற்றில் இலக்கங்களின் கண்கட்டு வித்தையும் ஒன்று. உதாரணமாகப் பார்ப்போம்:

பாகிஸ்தானின் 1951—52-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தின்படி அந்த நாட்டின் வருமானம் 159·85 கோடி ரூபாய்; செலவு 139·11 கோடி ரூபாய்; மிச்சம் 20·74 கோடி ரூபாய்.

பாரத நாட்டின் 1951—52-ம் வருஷத்திய வரவு செலவுத்திட்டத்தின்படி வருமானம் 369·89 கோடி ரூபாய்; செலவு 375·43 கோடி ரூபாய்; பற்றாக் குறை 5·54 கோடி ரூபாய்.

மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள் பாகிஸ்தானில் சுபிட்சம் தாண்டவமாடி வருவதாகவும் பாரதநாட்டில் சுபிட்சம் குறைந்து வருவதாகவும் முடிவு செய்யலாம்.

ஆனால் இத்தகைய புள்ளி விவரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் சுபிட்ச நிலைமையை நிர்ணயிக்க முடியாது.

ஆங்கில நாட்டின் சர்க்கார் தயாரித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை காணப்படுகிறது. அமெரிக்காவிலே அதிகச் செலவைச் சமாளிப்பதற்காகச் சர்க்கார் அபரிமிதமாக வரிகள் விதிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து மேற்படி இரு நாடுகளிலும் சுபிட்சம் நிலவவில்லை என்று சொல்ல முடியுமா?

ஒரு நாட்டு அரசாங்கத்தின் வருமானம் எந்தெந்த இனங்களின் மூலம் வருகிறது என்று பார்க்க வேண்டும். அப்படிக் கிடைக்கும் வருமானம் எந்தெந்த இனங்களில் செலவாகிறது என்றும் பார்க்க வேண்டும்.

நாட்டின் தொழில் வளத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் பெருக வேண்டும். நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு உகந்த முறையில் செலவினங்கள் நடைபெற வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியானால் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை விழுவதினால் தீங்கு ஒன்றும் விளையாது. மக்களின் நலத்தில் சர்க்கார் கண்ணுங் கருத்துமாயிருப்பதற்கு அது அறிகுறியாயிருக்கலாம்.

பாகிஸ்தான் சர்க்காருக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் வருமானப் பெருக்கம் அசாதாரண காரணங்களினால் ஏற்பட்டது. சென்ற மகாயுத்தத்தின் போது இந்தியாவில் பணப் புழக்கம் கிடுகிடுவென்று ஏறிற்று அல்லவா? அது போன்றதுதான். கொரியா யுத்தம் காரணமாகப் பாகிஸ்தானில் விளையும் மூலப் பொருள்களுக்குக் கிராக்கி அதிகம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் சர்க்கார் வருமானமும் அதிகமாகியிருக்கிறது. மறுபடியும் உலக நிலைமையில் மாறுதல் காரணமாக மூலப் பொருள்களின் விலை திடுதிடுவென்று இறங்கக்கூடும். அப்போது பாகிஸ்தான் நிலைமை நெருக்கடியாகி விடும். இதை யறிந்துதான் பாகிஸ்தான் சர்க்கார் இந்தியாவுடன் வியாபார உடன்படிக்கை செய்து கொள்வதில் அவ்வளவு சிரத்தை காட்டினார்கள்.

* * * *

இதைப்போலவே பாகிஸ்தானின் ரூபாய் மதிப்பு அதிகமாக இருப்பதையும் இந்தியாவின் ரூபாய் மதிப்பை இந்திய சர்க்கார் குறைத்திருப்பதையும் ஒப்பிட்டு நாம் மனச்சோர்வு அடைய வேண்டியதில்லை.

கோதுமை, சணல், பருத்தி போன்ற மூலப் பொருள்கள் பாகிஸ்தானில் உற்பத்தியாகின்றன. இவற்றுக்குத் தற்சமயம் வெளிநாடுகளில் கிராக்கியிருக்கிறது. ஆகையால் பாகிஸ்தானுக்கு ரூபாய் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஆனால் இந்தியாவின் நிலைமை வேறு. இந்தியா அதிக விலை கொடுத்து உணவுப் பொருள் உள்பட வேறு பல சாதனங்களையும் மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இறக்குமதிக்கு ஈடாகச் சிற்சில பொருள்களை நாமும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தாக வேண்டும். இப்படி ஏற்றுமதி செய்வதில் பிறநாடுகளுடன் போட்டி போட்டாக வேண்டும். இதற்கு இந்தியாவின் ரூபாய் மதிப்பைக் குறைத்து வைத்துக் கொள்வதுதான் நல்லது. இல்லாவிடில் நமது ஏற்றுமதி வியாபாரம் குறைந்து விடும். இறக்குமதியாகும் சரக்குகளுக்குப் பணம் கொடுப்பது கடினமாகும்.

*   *   *   *

அரசாங்க வருமானம் எந்த முறையில் செலவிடப்பட்டு வருகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், இந்திய சர்க்காரின் வருமானம் பெரும்பாலும் நாட்டின் செல்வப் பெருக்கத்துக்கும் மக்களின் சுபிட்சத்துக்கும் செலவிடப் படுவதைப் பார்க்கலாம்.

இந்த சுபிட்சத் திட்டங்களை நிறைவேற்றுவதில் சிற்சில ஊழல்கள் ஏற்படுவது உண்மையே. ஆனால் அவற்றை எடுத்துக் காட்டவும் கண்டிக்கவும் நமக்குப் பூரண உரிமை இருக்கிறது.

ஆக்க வேலைத் திட்டங்களுக்காக மாகாணங்கள் போட்டி போட்டுக் கொண்டு வற்புறுத்தும் கோடிக்கணக்கான தொகைகளை இந்திய சர்க்கார் கொடுத்து வருகிறார்கள்.

பாகிஸ்தான் சர்க்காரோ மாகாணங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய தொகைகளையும் கொடுப்பதில்லை என்று கிழக்கு வங்காள முதன் மந்திரி ஓலமிட்டிருக்கிறார்.

சென்ற சில மாதங்களாகப் பாகிஸ்தானில் தங்கி அங்குள்ள நிலைமையை நேரில் பார்த்த வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள், ''லாகூரில் பட்டினியும் சாவும் மலிந்து கிடக்கின்றன'' என்று கூறியுள்ளனர். பாகிஸ்தான் பார்லிமெண்டிலும் சில அங்கத்தினர் பாகிஸ்தான் மக்களிடையே வறுமை மிகுந்து வருவதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

எனவே, பாகிஸ்தான் பட்ஜெட்டில் இருபது கோடி ரூபாய்க்கு மேல் மிச்சம் காட்டப் பட்டிருப்பதிலிருந்து அங்கு பாலும் தேனும் வழிந்தோடுவதாக நினைக்க வேண்டியதில்லை. இந்தியாவின் பட்ஜெட்டில் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதைக் குறித்தும் நாம் கலங்க வேண்டியதில்லை.

வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக் குறையிருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். பொது மக்களின் வாழ்க்கையில் பற்றாக் குறையில்லாமல் செய்வதே இந்திய சர்க்காரின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும்.

நன்மை வந்தெய்துக!

தாய் நாட்டின் தவப்புதல்வரும் காந்தி மகானின் அந்தரங்கத் துணைவருமான பாபு ராஜேந்திர பிரஸாத் முன்னம் பல முறை சென்னைக்கு வந்திருக்கிறார். சென்னை நகரமும் அவரைச் சிறப்பாக வரவேற்றிருக்கிறது.

ஆனால் நாளது ஏப்ரல் 6-உ நமது சென்னை மாநகருக்கு பாபு ராஜேந்திர பிரஸாத் வரவில்லை; சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதி விஜயம் செய்கிறார். ஆகையால் முன்னைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்புக்களுடனும் குதூகலத்துடனும் சென்னை நகர வாசிகள் அவரை வரவேற்க வேண்டும்.

நாட்டை இன்று பலவகை இன்னல்கள் பிடித்திருப்பது உண்மைதான். பசி, பட்டினி, பற்றாக்குறை எங்கும் கோர தாண்டவமாடுகின்றன. பஞ்சம் எட்டி எட்டிப் பார்த்து ''வரட்டுமா! வேண்டாமா!'' என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. பலவகைக் கட்டுப்பாடுகளின் காரணமாக மக்கள் அனுபவிக்கும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சர்க்கார் அதிகாரிகள் ''பழைய பெத்தானே பெத்தான்!'' என்ற மனோபாவத்துடன் இருப்பதால் அந்தத் தொல்லைகள் அதிகமாகின்றன.

இவையெல்லாம் இயற்கையின் விபரீதத்தினாலும் நம்முடைய பிரதிநிதிகள் சட்டசபையிலும் மந்திரி சபையிலும் வீற்றிருந்து தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றாததினாலும் ஏற்பட்டவை. நம்முடைய முயற்சியினால் நிவர்த்தி செய்து கொள்ளக் கூடியவை.

ஒரு தேசத்துக்கு நேரக்கூடிய கஷ்டங்களுக்கெல்லாம் மேலான கஷ்டம் அடிமைத்தனம்.

மக்கள் அடையக்கூடிய பேறுகளிலெல்லாம் மேலான பேறு சுதந்திரம். நஷ்டத்திலெல்லாம் பெரிய நஷ்டம் தன்மான நஷ்டம்.

முப்பது வருஷம் காந்தி மகானின் தலைமையில் போராடி அன்னியர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டோம்; பூரண சுதந்திரம் பெற்றோம்; தன்மானத்தை நிலைநாட்டினோம். நாம் அடைந்த சுதந்திரத்துக்குச் சின்னமாக

விளங்குகிறார் ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத். நம்முடைய தன்மானத்தின் பாதுகாவலராகவும் இன்று திகழ்ந்து வருகிறார். அவருக்கு மனமார்ந்த வரவேற்புக் கூறுகிறோம்.

நம் பாரத நாட்டின் ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் அவர்களோடு, இத் தென்னாட்டுக்குச் சகலவித "நன்மைகளும் வந்தெய்துக!" என்று வாழ்த்துகிறோம்.

ஓடு பிசாசே! ஓடு!

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலையிலோ இரவிலோ சென்னைப் பட்டணத்திலிருந்து தெற்கே போகும் பாதைகளில், உருவம் இல்லாத, உயிர் இல்லாத, ஒரு கரிய பயங்கரப் பிராணி விழுந்தடித்து ஓடிக்கொண்டிருந்ததை வெளியூர்க்காரர்கள் யாராவது பார்த்திருக்கலாம். அது என்ன அபூர்வ பிராணி, எதற்காக இப்படிப் பீதியடைந்து தெறிகெட்டு ஓடுகிறது என்று வியந்திருக்கலாம்.

அப்படிப் பார்த்தவர்களும், வியந்தவர்களும், அது பற்றிக் கேள்விப்பட்டவர்களும், அவ்வாறு ஓடிய பிராணிதான் திராவிடஸ்தான் பிசாசு என்பதை உணர்ந்து கொள்க!

அன்றைக்கு ஸ்ரீ தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியாரும், ஸ்ரீ சின்ன அண்ணாமலையும் சேர்ந்து அஹிம்சா தர்ம முறையில் அந்தப் பிசாசைப் போட்ட போட்டினால் பீதி யடைந்துதான் அந்தப் பிராணி அவ்விதம் ஓட்டம் எடுத்தது.

வழியில் எங்கேயாவது அப் பிசாசு நிற்குமா அல்லது நேரே தென் குமரிவரைக்கும் சென்று இந்து மகா சமுத்திரத்தில் விழுந்து முழுகி விடுமா என்பது தமிழகத்தில் ஆங்காங்குள்ள தமிழர்களின் ஆற்றலைப் பொறுத்தது.

* * *

திராவிடஸ்தான் இயக்கம் பொய்மை, பகைமை, வசை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. "பொய்மை தானாகவே அழிந்து போகாதா! அதை எதிர்ப்பதற்கு ஓர் இயக்கம் வேண்டுமா!" என்ற ஐயம் சிலருக்கு உண்டாகலாம்.

"முடிவில் பொய் அழியும்; உண்மையே வெற்றி யடையும்" என்பதில் ஐயமில்லை. ஆயினும் ஒரு பொய்யைக் கிளப்பிவிட்டால் அதை உண்மை துரத்திச் சென்று பிடிப்பதற்குள் எத்தனையோ தீமைகளை அது செய்துவிடுகிறது! ஹிட்லர் ஆட்சியில் கெபல்ஸ் செய்த பொய்ப் பிரசாரம் சிலகாலம் நடந்து வந்தபடியால் அறிவாற்றலில் இணையில்லாத ஜெர்மானிய மக்கள் எப்படிப்பட்ட அதோ கதியை அடைந்து, இப்போது எத்தகைய பரிதாப நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயந்தான்.

"பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே! மெய்போலும்மே!"

என்று நம் தமிழ் நாட்டு முதியோர் இரண்டு தடவை அழுத்திச் சொல்லி யிருக்கிறார்கள்.

திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் சொல்வன்மையும் எழுத்து வன்மையும் பெற்றவர்களா யிருப்பதினால் அவர்களுடைய பிரசாரத்தை மக்கள் பலர் நம்பி ஏமாந்து போகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

திராவிடஸ்தான் இயக்கத்தினர் சுதந்திர பாரத நாட்டிலிருந்து திராவிடஸ்தான் என்ற ஒரு தனிச் சுதந்திர நாட்டைப் பிரித்து அமைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இது ஒரு நாளும் நடவாத காரியம். ஏனெனில், மலையாளிகளும் ஆந்திரர்களும் கன்னடக் காரர்களும் திராவிடஸ்தான் இயக்கத்தில் ஒரு நாளும் சேரமாட்டார்கள். அந்த நாடுகளில் சென்று திராவிடக் கழகத்தார் இம்மாதிரி பேச்சைப் பேசவே முடியாது.

தமிழ் நாட்டை மட்டும் தனிச் சுதந்திர நாடாகப் பிரிப்பது நடவாத காரியம் என்பதோடு, நகைப்புக்கும் இடமானது.

இமயமலை முதல் குமரிமுனை வரையில் பாரத நாடு ஒரே நாடு. புத்தரும் அசோகரும் காந்தியும் நேருவும் பிறந்த நாட்டிலிருந்து தமிழர்கள் தனியே பிரிந்து போகவேண்டுமா! அதற்குக் காரணமும் இல்லை; அவசியமும் இல்லை.

உலக சரித்திரத்தையும் தற்போதைய நிலைமையையும் சிறிதேனும் எண்ணிப் பார்ப்பவர்கள் பத்து ஜில்லாக்களடங்கிய ஒரு பிரதேசம் தனிச் சுதந்திர நாடாக விரும்புவது எத்தகைய அறிவுடைமை என்பதை உணர்வார்கள். (சிறிய நாடாகிய கொரியா படும் பாட்டைப் பார்த்த பிறகாவது இந்த உண்மையை நாம் உணர வேண்டாமா!)

அத்தகைய காரிய சாத்தியமற்ற நகைப்புக்குரிய பயனில்லா இயக்கத்தை நடத்துவோர் அவ்வியக்கத்தின் பெயரால் சாதி, இனத் துவேஷத்தை மூட்டி வருகிறார்கள். அதற்குக் கருவியாக, மூத்தமிழோடு சேராத நாலாவது தமிழாக, வசைத் தமிழ் என்னும் புதுத் தமிழ்ப் பகுதியை வளர்த்து வருகிறார்கள்.

சாதி — இனத் துவேஷங்களை யார் மீது வளர்க்க முயல்கிறார்களோ, அவர்களுக்குச் சில சில்லறைத் தொந்தரவுகள் அதனால் சிலகாலம் ஏற்படலாம்.

ஆனால் யார் அந்த முயற்சிகளைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு ஒன்றுக்குப் பத்து மடங்கு அதிக தீங்கு விளைவது நிச்சயம். துவேஷம் என்னும் தீயை யார் மூட்டுகிறானோ, அவனை அது எரித்து விடும் என்பதற்கு உலக சரித்திரத்தில் ஆயிரம் உதாரணங்கள் இருக்கின்றன. எந்த நாட்டிலும் பிறந்த உயர்ந்தோர்கள், ... மகான்கள், — இதை வற்புறுத்திச் சொல்கிறார்கள்.

துவேஷிக்கப் படுகிறவனைவிடத் துவேஷிப்பவனே அதிக தீங்கை அடைவான்.

அதோடு, அவனைச் சுற்றிலுமுள்ள சமூகமும் ஓரளவு தீமைக்கு உள்ளாகும்.

* * *

திராவிடக் கழகத்தாரால் ஏற்படும் மற்ற தீமைகளை யெல்லாம் காட்டிலும் மிக முக்கிய

மானது, அவர்களால் தமிழ் மக்களின் பழமையான பண்பாட்டுக்கு ஏற்படும் தீங்குதான்.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தழைத்து வளர்ந்து வந்திருக்கும் தமிழரின் பண்பாடு,—தெய்வ நம்பிக்கை, பெரியோர் வழிபாடு, கற்பு, ஒழுக்கம், சிற்பம், சித்திரம், கவிதை, காவியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. நானிலத்தில் நல்லது எங்கிருந்தாலும் அதை ஏற்றுத் தன்னுள் சேர்த்துக்கொள்வது தமிழர் பண்பாட்டின் சிறப்பான இயல்பு. தெய்வ வழிபாட்டு முறைகளிலும், சமூகப் பழக்க வழக்கங்களிலும் கருத்து வேற்றுமைக்கு இடங் கொடுக்கும் சகிப்புத் தன்மை தமிழர்களின் இரத்தத்தில் ஊறிய அரும் பெரும் குணமாகும். இதைச் சங்கப் புலவர்கள் முதல் பாரதியார் — தேசிக விநாயகம் பிள்ளை வரையில் வளர்ந்த தமிழ் இலக்கியத்தில் நன்கு காணலாம்.

உலகத்தின் முன்னிலையில் தமிழர்களுக்கு இணையில்லாத சிறப்பை அளிக்கக்கூடிய இத்தகைய தமிழர் பண்பாட்டையும் அதன் சிறப்பான இயல்புகளையும் திராவிடக் கழகப் பிரசாரம் அடியோடு அழிக்கப் பார்க்கிறது. ''பெரியோரிடம் மரியாதை வேண்டாம், ஆலய வழிபாடு வேண்டாம், ஒழுக்கம் வேண்டாம், பழந் தமிழ் இலக்கியங்களும் கலைச் செல்வங்களும் வேண்டாம்'' என்று அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பிரசாரம் செய்கிறார்கள். கரிக்கட்டியைக்கொண்டு சுவர்களில் எழுதப்படும் பயங்கரங்கள் இவர்களுடைய மனப்பான்மையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. வெளி நாடுகளிலிருந்து தெய்வத் தமிழகத்தைப் பார்க்க வருகிறவர்கள் இந்தச் சுவர் இலக்கியங்களைப் பார்த்து அவற்றின் கருத்தைத் தெரிந்து கொள்வார்களானால், ''தமிழகத்தைப் போல் கேடான பண்பாடுடைய நாடு உலகில் வேறு இல்லை'' என்ற முடிவுடனேதான் திரும்பிச் செல்வார்கள்.

இவ்வாறு தமிழகத்துக்கும் தமிழரின் பண்பாட்டுக்கும் திராவிடஸ்தான் கூட்டத்தினால் ஏற்பட்டு வரும் தீங்குகளை எதிர்த்துப் போராடுவதற்கு திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், திரு ம. பொ. சிவஞான கிராமணியார் போன்ற வீரத் தமிழ் அறிஞர்கள் முன்வந்திருப்பது குறித்துத் தமிழ் மக்கள் பெருமகிழ்ச்சி அடைய வேண்டும். அவர்களுடைய சிறந்த முயற்சிக்குத் தமிழ் நாடெங்கும் மக்கள் பூரண ஆதரவு நல்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

கொடுக்கில் விஷம்

தேளுக்குக் கொடுக்கில் விஷம் இருக்கிறது என்றால், அதைப் பற்றிப் புகார் சொல்லிப் பயன் இல்லை! ஏனெனில், தேளின் இயற்கை அது!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் இயற்கையும் அதுவேதான்! அவர்களுக்கும் கொடுக்கில் விஷம் இருக்கிறது! இந்தியாவை விட்டு விட்டு வெளியேறிய போதிலும், அவர்களுடைய பிரித்தாளும் விஷம புத்தி போனதாகத் தெரியவில்லை.

பாகிஸ்தானில் நடந்த குட்டிச் 'சதியாலோசனை'யைப் பற்றிச் சென்ற மாதத்தில் ஒரு திடுக்கிடும் செய்தி வெளியாயிற்று அல்லவா! அதற்கு லண்டன் ''டைம்ஸ்'' பத்திரிகை ஒரு திடுக்கிடும் வியாக்யானம் செய்து ஒரு திடுக்கிடும் முடிவையும் வெளியிட்டிருக்கிறது!

மேஜர் ஜெனரல் அக்பர் கான் இராணுவச் சதியில் ஈடுபட்டதற்குக் காரணம், காஷ்மீர் பிரச்னைதானாம்! பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் காஷ்மீர் பிரச்னையில் மிதவாதியாக நடந்து கொள்கிறாராம். இது ஜெனரல் அக்பர் கானுக்குப் பொறுக்கவில்லையாம். ஆகையால் கம்யூனிஸ்ட் ருஷியாவுடன் சேர்ந்து சதி செய்யத் தலைப்பட்டு விட்டாராம்!

இதிலிருந்து வெளியாகும் நீதி என்ன வென்பதை லண்டன் ''டைம்ஸ்'' பத்திரிகை அபார தீர்க்க தரிசனத்துடன் எடுத்துச் சொல்லுகிறது:—''ஐக்கிய நாடுகளின் சபையானது உடனே காஷ்மீர் பிரச்னையைத் தீவிரமாக ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு பாகிஸ்தானுக்கு நியாயம் பிறப்பிக்க வேண்டும்!''

அதாவது காஷ்மீரைத் தூக்கி எடுத்துப் பாகிஸ்தான் கையில் ஒப்புவித்துவிட வேண்டும்! இல்லாவிட்டால், பாகிஸ்தானில் ஜனப் அக்பர்கான் போன்ற தீவிர வாதிகளின் கட்சி வலுத்துவிடும்! பாகிஸ்தான் ருஷியாவுடனேயே சேர்ந்தாலும் சேர்ந்து விடும்!

நியாயமோ, அநியாயமோ அதைப் பற்றிச் சிறிதும் கவலையில்லை! பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் ருஷியாவுடன் சேரக்கூடாது! அதற்கு உசிதமான முறையில் காஷ்மீர் பிரச்னையை உடனே தீர்த்து வைக்க வேண்டும்!

இப்படி லண்டன் ''டைம்ஸ்'' பத்திரிகை எழுதியிருப்பதிலிருந்து, பிரிட்டிஷார் எந்த நோக்கத்துடன் காஷ்மீர் பிரச்னையைப் பார்க்கிறார்கள் என்பது தெரிய வரும்.

* * *

பிரிட்டிஷாரைப் போலவேதான் அமெரிக்கரும் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவின் பஞ்சத்தைத் தீர்க்கத் தானிய நன்கொடை அனுப்புவது பற்றி அமெரிக்காவில் நடந்துவரும் வாதப் பிரதி வாதங்கள் இதை நன்கு விளக்குகின்றன.

''கொரியா விஷயத்தில் கம்யூனிஸ்ட் சைனாவை ஆதரிக்கும் இந்தியாவுக்கு ஏன் தானியம் அனுப்ப வேண்டும்!'' என்று ஒரு கட்சியார் ஆட்சேபிக்கிறார்கள்.

''இந்தியாவில் பஞ்சக் கொடுமை அதிகமானால் ஜனங்கள் கம்யூனிஸ்டுகள் ஆகிவிடுவார்கள்! ஆகையால் தானியம் உடனே அனுப்ப வேண்டும்'' என்று இன்னொரு கட்சியார் வற்புறுத்துகிறார்கள்.

இந்தியாவின் பஞ்சத்துக்கு உதவி செய்ய வேண்டும் என்பது அமெரிக்கர்களுக்கு முக்கியமான விஷயம் அல்ல;—சைனா விஷயமும்

கம்யூனிஸம் பரவாமலிருப்பதுந்தான் முக்கியமான விஷயங்களாகி விட்டன!

ஆகவே, காஷ்மீர் பிரச்னை விஷயத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் பாகிஸ்தான் சார்பிலேயே இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை அல்லவா!

பாகிஸ்தானில் அமெரிக்கர்களுக்கு நாலு இடத்தில் விமான ராணுவ தளங்கள் கொடுக்கச் சம்மதித்துப் பாகிஸ்தான் பிரதமர் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாய் ''பாகிஸ்தான் டைம்ஸ்'' ஆசிரியர் வெளியிட்டிருக்கிறார்.

இதன் உண்மை எப்படியானாலும், காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை இச் செய்தியிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

இந்நிலைமையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் எத்தகைய தகராறு ஏற்பட்டாலும் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் பாகிஸ்தான் பக்கம் நிற்பார்கள் என்றே எதிர்பார்க்க வேண்டும். அதற்குத் தக்கபடி இந்திய சர்க்காரும் இந்திய மக்களும் தங்கள் வருங்காலத் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

பாகிஸ்தான் இராணுவச் சதிக்கும் காஷ்மீர் பிரச்னைக்கும் லண்டன் ''டைம்ஸ்'' சம்பந்தம் கற்பிக்க முயல்வது எவ்வளவு அபத்தமானது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சதியில் சம்பந்தப்பட்டதாகக் கைது செய்யப்பட்ட முக்கியஸ்தர்களில் ஒருவர் ஜெனரல் அக்பர்கான். இவர் காஷ்மீர் பிரச்னை ஆரம்பமான சமயத்தில் மூந்திரிக்கொட்டை மாதிரி தம் சொந்தப் பொறுப்பிலே காஷ்மீரத்தின் மீது படை எடுத்துச் சென்றவர்.

மற்றொரு முக்கியஸ்தர் ''பாகிஸ்தான் டைம்ஸ்'' ஆசிரியரான ஜனாப் பெயிஸ் அகமது. இவர், காஷ்மீர் மீது பாகிஸ்தான் படை எடுத்தது அநியாயம் என்று வற்புறுத்தி எழுதி வந்தவர். பாகிஸ்தானிலேயே இவர் ஒருவர் தான் இவ்விதம் பத்திரிகையில் துணிந்து கண்டித்து எழுதியவர்.

ஆகவே, காஷ்மீர் விஷயமாக முற்றும் மாறுபட்ட கொள்கை யுடையவர்கள் லியாகத் அலிகானுக்கு எதிரான மேற்படி சதியில் சேர்ந்ததாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதிலிருந்து, மேற்படி சதிக்குக் காரணம் அதிகாரப் போராட்டமும் கோஷ்டிப் பூசலுமே தவிர, காஷ்மீர் பிரச்னைக்கும் இதற்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது என்று திட்டமாக ஏற்படுகிறது.

ஆயினும், பொறுப்பு வாய்ந்த ''லண்டன் டைம்ஸ்'' பத்திரிகை அவ்விதம் சம்பந்தம் கற்பிக்க முயல்வதிலிருந்து என்ன தெரிகிறது! சொல்லவும் வேண்டுமோ!

இளங்கோவின் துறவு

வஞ்சி மூதூர் அரண்மனை மணி மண்டபத்தில் சேர மன்னன் கொலு வீற்றிருந்தான். அவன் வீராதி வீரன். இமயமலை வரைக்கும் படையெடுத்துச் சென்று வெற்றிக் கொடி நாட்டி விட்டு ஜயபேரிகை முழக்கத்துடன் திரும்பி வந்தவன். ஆகையால், 'இமய வரம்பன் சேரலாதன்' என்று சரித்திரத்திலும் காவியத்திலும் புகழ் பெற்றவன்.

சேரலாதனுக்கு அறிவாற்றலிலும், வீர சௌரியத்திலும் சிறந்த இரு புதல்வர்கள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் செங்குட்டுவன். இளையவன், இளங்கோ.

சேர மன்னன் தன் இரு புதல்வர்களுடனும் ஆஸ்தான மண்டபத்தில் வீற்றிருக்கையில் நிமித்திகன் ஒருவன் வந்தான். அரசகுமாரர்கள் இருவரையும் பார்த்து விட்டு, அவர்களில் இளையவனே அரச பீடத்தில் வீற்றிருப்பான் என்று சொன்னான். சோதிடம், ஆருடம், சாமுத்திரிகா லட்சணம் ஆகியவற்றில் நம்பிக்கை அந்த நாளிலும் மக்கள் மனதில் குடி கொண்டிருந்தது. எனவே, நிமித்தகனுடைய ஆருடத்தினால் இராஜ குடும்பத்தில் கலகம் விளையுமோ என்று பலரும் அஞ்சினார்கள். சேரலாதனுடைய உள்ளத்தில் கவலை உண்டாயிற்று. செங்குட்டுவனின் உள்ளம் கொதித்திருக்க வேண்டும்.

தம்பியாகிய இளங்கோவின் உள்ளத்திலோ கோபம் கொதித்தெழுந்தது. நிமித்தகனை நோக்கி, ''அரசகுலத்தின் முறைமைக்கு மாறாக இவ்விதம் சொன்னாயே! நீயும் ஆயிற்று. உன் சோதிடமும் ஆயிற்று!'' என்று சொல்லி விட்டுச் சபையிலிருந்து எழுந்து சென்றான். பின்னர் சபையும் கலைந்தது.

சேரலாதனும் செங்குட்டுவனும் மண்டபத்தில் தனியாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ''தம்பிதான் அரசாளட்டுமே!'' என்றான் செங்குட்டுவன். ''அது முறைமையாகாதே!'' என்றார் தந்தை. ''வெகுண்டு எழுந்து போன இளங்கோவைக் காணோமே! எங்கே போயிருப்பான்!'' என்று இருவரும் கவலைப் பட்டார்கள்.


சற்று நேரத்துக்கெல்லாம் தம்பி திரும்பி வந்தான். முற்றும் அவன் உருமாறி வந்தான். தலையை மொட்டையடித்துக் கொண்டிருந்தான். பட்டுப் பீதாம்பரங்களையும் அணிமணி பூஷணங்களையும் கழற்றி எறிந்து விட்டுத் துறவிகளுக்குரிய காவி உடை தரித்திருந்தான். ஆனால் அவன் திருமுகத்தில் ஒரு புதிய ஜோதி சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

''தந்தையே! வெகுகாலமாக நான் இந்த உலக வாழ்க்கையைத் துறந்து துறவியாக வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதை இன்று நிறைவேற்றினேன். அருள்புரிக!'' என்றார் இளங்கோ வடிகள்.

தந்தை சேரலாதர் துறவு பூண்ட புதல்வனை மார்புறத் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

தமையன் செங்குட்டுவன் ''இத்தகைய தியாக புத்தியும் சகோதர வாஞ்சையும் இவ்வுலகில் உண்டா!'' என்று எண்ணி அளவிலா வியப்பு அடைந்தான்.

இந்த அற்புதக் காட்சியை இந்த வாரத்து நமது அட்டைப் படம் சித்திரிக்கிறது.



இளங்கோவடிகள் துறவறம் பூண்டு நிமித்தகனுடைய ஆருடத்தை அப்போதைக்குப் பொய்யாக்கி விட்டாரேனும், பிற்காலத்தில் நிமித்தகனுடைய வாக்கு எதிர்பாராத விதத்தில் உண்மையாயிற்று. சேர நாட்டை மட்டும் அல்ல ;—சோழ, பாண்டிய நாடுகள் உள்ளிட்ட தமிழகத்தையே அவர் தமது ஆட்சிக்கு உட்படுத்தினர். அழிவென்பதே இல்லாத அமர சாம்ராஜ்யத்தைத் தமிழகத்தில் ஸ்தாபித்தார். ''சிலப்பதிகாரம்'' என்னும் தமிழ்ப் பெருங் காப்பியத்தை இயற்றித் தமிழகத்தை இன்றளவும் ஆண்டு வருகிறார்.

* * *

''சிலப்பதிகாரம்'' இயற்றப்பட்ட காலம் ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் என்று அறிஞர் பலர் முடிவு கட்டியிருக்கிறார்கள். ''இல்லை; ஆயிரத்து இருநூறு ஆண்டுகள்தான் ஆயின'' என்று சொல்வோரும் உண்டு. அந்தக் காவியத்தின் காலத்தை அதற்குப்பின்னால் கொண்டுவருவோர் யாரும் இல்லை.

சிலப்பதிகாரத்தின் கதா பாத்திரங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்பது நிச்சயமான செய்தி.

அவ்வளவு பழமையான காலத்தில் தமிழகத்தின் சமூக வாழ்வு எப்படியிருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் நன்கு எடுத்துக் கூறுகிறது. தமிழகம் அந்நாளில் எவ்வளவு சிறந்த பண்பாடு அடைந்திருந்தது, ஆடல்பாடல் முதலிய கலைகளில் எவ்வளவு மகோந்நதத்தை அடைந்திருந்தது, அரசியல் நெறி எவ்வளவு உயர்வாயிருந்தது, வளம்பெருகிச் செல்வம் கொழித்து மக்கள் எவ்வளவு ஆனந்த வாழ்க்கை நடத்தினார்கள், அற நெறியை எப்படிப் போற்றினார்கள் என்பதை யெல்லாம் சிலப்பதிகாரத்தின் மூலம் கண்டறியலாம்.

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங் கணுமே பிறந்ததில்லை...''

என்று பாரதியார் கூறிய மூவரில் கம்பரையும் வள்ளுவரையும் இக்காலத் தமிழர்கள் போற்றி விழாக்களும் கொண்டாடி வருகிறார்கள். இப்போது இளங்கோவுக்கும் யோகம் பிறந்திருக்கிறது. சிலப்பதிகார மகாநாடுகளும் இளங்கோ விழாக்களும் ஆரம்பமாகி யிருக்கின்றன.

சென்ற வாரத்தில் சென்னை நகரில் சிலப்பதிகார மகாநாடு மிகச் சிறப்பாக நடந்தது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கோலாகலமாகக் கூடி இளங்கோவடிகளின் பழந் தமிழ்க் காவியத்தைப் போற்றி மகிழ்ந்தார்கள்.

சிலப்பதிகாரக் கதாநாயகர்கள் பிறந்து வளர்ந்த பூம்புகார் இருந்த இடத்தில் இன்று காவேரிப்பூம்பட்டினம் என்னும் சிறிய கிராமம் இருக்கிறது. சுற்று வட்டாரத்தில் வளம் மிக்க திருவெண்காடு முதலிய கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த தமிழன்பர்கள் சிலருடைய முயற்சியினால் வருகிற ஜூன் மாதம் முதல் வாரத்தில் சிலப்பதிகார மகாநாடு பூம்புகார் இருந்த பிரதேசத்திலேயே நடைபெறப் போவதை அறிந்து மகிழ்கிறோம். தமிழகத்தின் சிறந்த தமிழறிஞர்கள் பலரும், இம் மகாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கப் போகிறார்கள். பழைய நாட்களில் பூம்புகாரில் நடந்த இந்திர விழாவை நினைவூட்டும் முறையில் சிலப்பதிகார மகாநாடு நடைபெறும் என்று நம்புகிறோம்.

பொன்னியின் செல்வன்

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

நீர்ச் சுழலும் விழிச் சுழலும்

கல்கி

கடவுள் படைத்த ஆதி மனிதன் ஒரு மலையின் சாரலில் வசித்தான். மழைக்கும் காற்றுக்கும் அவனுக்கு மலைக் குகை அடைக்கலம் தந்தது. வன விருட்சங்கள் அவனுக்குத் தேவையான கனி வர்க்கங்களை உணவாக அளித்தன. காட்டு மிருகங்கள் அவனைக் கண்டு நடுநடுங்கின. வானத்துப் பறவைகளைப் போல் அவன் சுயேச்சையாக ஒரு குறைவும் இல்லாமல் வாழ்ந்து வந்தான். ஆயினும் அவனுடைய உள்ளத்தின் உள்ளே ஏதோ ஒரு குறை,—இனந் தெரியாத ஒரு வகைத் தாபம்,—இடைவிடாமல் குடி கொண்டிருந்தது. ஏதோ ஒரு காந்த சக்தி அவனைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு அரிய பொருளை,—இதுவரை பார்த்தும் அநுபவித்தும் அறியாத இன்பத்தை,—அவனுடைய இதயம் தேடிக் கொண்டிருந்தது. பகலில் அதைப் பற்றிக் கற்பனை செய்தான்; இரவில் அதைப் பற்றிக் கனவு கண்டான். "எனக்காகவே படைக்கப்பட்ட அந்த அற்புதப் பொருளை,—கற்பகக் கனியை,—என்னைக் கவர்ந்திழுக்கும் காந்தத்தை, எங்கே காண்பேன்? எப்போது காண்பேன்?" என்று அவன் இதயம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஆதி மனிதனைப் படைத்த அதே சமயத்தில் இறைவன் ஆதி ஸ்திரீயையும் படைத்தார். மலையின் மற்றொரு பக்கத்துச் சாரலில் அவள் வசித்து வந்தாள். பசிக்கு உணவும், தாகத்துக்குச் சுனை நீரும், தங்கியிருக்க மலைக் குகையும் அவளுக்கு இருந்தன. வெளிப்படையாகப் பார்த்தால் ஒரு குறைவும் இல்லை. ஆனால் உள்ளத்தினுள்ளே ஒரு தீப்பிழம்பு ஜுவாலை விட்டு அவளை எரித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சக்தி அவளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. அச் சக்தி எங்கிருந்து அவளை இழுக்கிறது, எந்தத் திசையை நோக்கி இழுக்கிறது என்பது ஒன்றும் தெரியவில்லை.

ஆதி மனிதனுக்கும் ஆதி ஸ்திரீக்கும் இடையில் ஒரு பெரிய மலை ஓங்கி நின்று ஒருவரை யொருவர் சந்திக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

வெயிற் காலத்தில் ஒரு நாள் இயற்கை நியதி காரணமாகக் காட்டில் தீ மூண்டு நாலா புறமும் பரவத் தொடங்கியது. மலையைச் சுற்றி நெருப்பு அதிவேகமாகப் பரவி வந்தது. மனிதனும் ஸ்திரீயும் காட்டுக்குள் போனால் ஆபத்துக் குள்

ளாவோம் என்று உணர்ந்து மலைமேல் ஏறினார்கள். மலையின் உச்சியில் அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்தார்கள். பார்த்த கண்கள் பார்த்த படி கண் கொட்டாமல் நின்றார்கள். காட்டுத் தீயை மறந்தார்கள். எதற்காக மலை உச்சியில் ஏறினோம் என்பதையும் மறந்தார்கள். பசி தாகங்களை அடியோடு மறந்தார்கள். இத்தனை காலமும் தாங்கள் உயிர் வாழ்ந்ததெல்லாம் இந்த ஒரு சந்திப்புக்காகவே என்பதை உள்ளுணர்வினால் அறிந்தார்கள். தங்களைக் கவர்ந்திழுத்த இனந் தெரியாத சக்தி இதுதான் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். தங்களில் ஒருவரிடம் உள்ள குறையை இன்னொருவரால் இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை அறிந்தார்கள். இவ்விதம் ஒன்று சேர்ந்து விட்டவர்களை இனிப் பிரிக்கக் கூடிய சக்தி உலகில் வேறொன்றும் கிடையாது என்பதையும் உறுதியாக உணர்ந்தார்கள்.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த படைப்புக் கடவுளான பிரம்ம தேவர் தாம் ஆரம்பித்த வேலை நல்ல முறையில் தொடங்கி விட்டது என்பதை அறிந்து பரிபூரணத் திருப்தி அடைந்தார்!

மேற்கூறிய ஆதிமனிதனையும் ஆதி ஸ்திரீயையும் ஒத்திருந்தார்கள் அந்த நேரத்தில் நம் வல்லவரையனும் குந்தவை தேவியும். இப் பூவுலகில் தாங்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த நிமிஷத்துக்காகவே, — இந்தச் சந்திப்புக்காகவே,—என்பதை அவர்களுடைய உள்ளுணர்ச்சி உணர்த்தியது. ஆனால் ஆதி மனிதனையும் ஆதி ஸ்திரீயையும் போலின்றி இவர்கள் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அல்லவா? ஆகையால் தங்களுடைய பரஸ்பர அந்தஸ்தில் இருந்த வேற்றுமையை அவர்கள் மறக்க முடியவில்லை. முழுதும் உணர்ச்சி வசப்பட்டு மனதைக் கட்டுக்கடங்காமல் அவர்கள் விட்டுவிடவில்லை. ஒரு கணம் ஒருவரை யொருவர் பார்த்துக் கண்ணோடு கண் சேர்வதும், அடுத்த கணத்தில் தங்கள் கண்களைத் திருப்பி அக்கம் பக்கத்திலிருந்த பூ, மரம், பட்டுப் பூச்சி, ஓடை முதலியவற்றைப் பார்ப்பதுமா யிருந்தார்கள்.

ஈசான சிவ பட்டர் தொண்டையைக் கனைத்த பிறகுதான் இருவரும் ஏதோ ஒரு முக்கியமான காரியம் பற்றி இங்கே சந்தித்திருக்கிறோம் என்பதை ஞாபகப் படுத்திக் கொண்டார்கள்.

"நீர் என்னைத் தனிமையில் பார்க்க வேண்டுமென்று ஈசான பட்டரிடம் தெரிவித்தது உண்மையா?" என்று குரலைக் கடுமைப் படுத்திக்கொண்டு இளைய பிராட்டி வினவினாள்.


அந்தக் குரலின் கடுமையும் அதிகார தோரணையும் வந்தியத் தேவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது.

"தாம் யார் என்று தெரிந்தால் அல்லவா தமது கேள்விக்கு விடை சொல்லலாம்? ஈசான பட்டர் என்னைத் தவறான இடத்துக்கு அழைத்து வந்து விட்டாரோ என்று ஐயுறுகிறேன்!" என்றான் அந்த வீர வாலிபன்.

"எனக்கும் அவ்வித சந்தேகம் உண்டாகிறது. நீர் யாரைப் பார்க்க விரும்பினீர்?"

"சோழர் தொல் குலத்தின் மங்கா மணி விளக்கை, சுந்தர சோழ மன்னரின் செல்வத் திருமகளை, ஆதித்த கரிகாலருக்குப் பின் பிறந்த சகோ





தரியை, அருள்மொழிவர்மரின் அருமைத் தமக்கையை, இளையபிராட்டி குந்தவை தேவியைப் பார்க்க வேண்டுமென்று ஈசான சிவ பட்டரிடம் சொன்னேன்......."

குந்தவைப் பிராட்டி புன்னகை பூத்து "அவ்வளவு பெருமையையும் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருப்பவள் நான்தான்!" என்றாள்.

"அப்படியானால், குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங் கரையிலும் நான் பார்த்த நாரீமணி தாங்கள் இல்லைதானே?" என்றான் வல்லவரையன்.

"ஆமாம், ஆமாம்! அந்த இரண்டு இடத்திலும் அவ்வளவு மரியாதைக் குறைவாகத் தம்மிடம் நடந்து கொண்டவளும் நானேதான். அந்த நாகரிகமில்லா மங்கையை மறுபடியும் இவ்வளவு சீக்கிரத்தில் சந்திப்போம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டீர்!"

"மறுபடியும் சந்திப்பதாகச் சொல்வது பொருத்தமில்லை, தேவி!"

"ஏன்?"

"விட்டுப் பிரிந்திருந்தால் அல்லவா மறுபடியும் சந்திப்பதாகச் சொல்லலாம்? தாம் என் மனதை விட்டு ஒரு கணமும் அகலவில்லை......"

"தொண்டை மண்டலத்தார் இவ்வளவு சமத்காரமாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"எல்லாப் பெருமையையும் சோழ நாட்டிற்கேதான் கொடுப்பீர்களாக்கும். வேறு நாடுகளுக்கு ஒரு பெருமையும் தரமாட்டீர்கள் போலிருக்கிறது."

"ஆம்; என்னிடம் அந்தக் குற்றம் இருப்பது உண்மைதான். உமக்கு எங்கள் சோழ நாட்டைப் பிடிக்கவில்லையாக்கும்!"

"பிடிக்காமல் என்ன? நன்றாய்ப் பிடித்திருக்கிறது. ஆனால் இச்சோழ நாட்டில் இரண்டு பெரும் அபாயங்கள் இருக்கின்றன. அவற்றை எண்ணினாலே எனக்குப் பயமாயிருக்கிறது...!"

"சோழநாட்டு வீரர்களின் வாளும் வேலும் அபாயகரமான ஆயுதங்கள்தான்! அயல் நாட்டவர்கள் இங்கே ஜாக்கிரதையாகவே வர வேண்டும். முக்கியமாக, ஒற்றர் வேலை செய்வதற்கென்று வருவோர்......"

"இளவரசி! அந்த இரு அபாயங்களை நான் குறிப்பிடவில்லை. வாளும் வேலும் என்னிடமும் இருக்கின்றன. அவற்றை உபயோகிப்பதற்கும் நான் நன்கு அறிவேன்......"

"உமது வேலின் வன்மையைத்தான் அரிசிலாற்றங் கரையில் அன்று பார்த்தேனே? செத்துப் போன முதலையை உமது வேல் எத்தனை வேகமாய்த் தாக்கியது? ஒரே தாக்குதலில் உள்ளே அடைத்திருந்த பஞ்சையெல்லாம் வெளிக் கொண்டு வந்து விட்டதே?"

"அம்மணி! சோழ நாட்டு மாதரசிகள் செத்த முதலையைக் கண்டு பயந்து சாகும் வீர நாரீமணிகள் என்பதை நான் அறியேன். சோழநாட்டு வீரர்கள் செத்த முதலையைத் தாக்கும் சுத்த வீரர்கள் என்றும் எனக்குத் தெரியாது. உயிருள்ள முதலையாக்கும் என்று எண்ணி வேலை எறிந்தேன். அது என் தவறும் அன்று; என் வேலின் தவறும் அன்று!......"

"அந்த அசட்டு முதலையின் தவறுதான்! வாணர் குலத்தில் பிறந்த வீர வந்தியத்தேவர் வேலோடு வரும்

வரையில் காத்துக் கொண்டிராமல் முன்னதாகவே செத்துப் போய் விட்டதல்லவா? அதற்கு நன்றாய் வேணும் இந்த அவமானம்!...... வேறு எந்த இரு அபாயங்களைப் பற்றிச் சொன்னீர்?"



"இந்தச் சோழ நாட்டு நதிகளில் புது வெள்ளம் வரும்போது உண்டாகும் சுழல்கள் அபாயமானவை; அவற்றை ஒருபோதும் நம்பவே கூடாது. என்னைத் திண்டாடித் திணறும்படி செய்துவிட்டன!"

"வெள்ளச் சுழலில் நீர் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்? தண்ணீரில் காலையே வைக்க மாட்டீர் என்றல்லவா உம்மைப் பார்த்தால் தோன்றுகிறது?"

"வேதாளத்துக்கு வாழ்க்கைப்பட்டு முருங்கை மரத்தில் ஏறமாட்டேன் என்றால், முடிகிற காரியமா? சோழ நாட்டுக்கு வந்த காரணத்தினால், நதி வெள்ளத்தில் முழுகிச் சுழலிலும் சிக்கும்படியாகி விட்டது! என்னோடு துணைக்கு வந்த ஒரு அசட்டுப் பிள்ளையின் பிடிவாதத்தினால் அப்படி நேர்ந்தது! கேளுங்கள், தேவி! அந்தப் பிள்ளை ஒரு சின்னஞ் சிறிய பொய் சொல்ல முடியாது என்றான். அதனால் வந்த வினை......"

"நீர் சொல்லுவது பிதிராக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது."

"சொல்கிறேன். தங்களுடைய அருமைச் சகோதரரின் ஓலையுடன் தூதனாக வந்த என்னைத் தஞ்சைக் கோட்டைத் தலைவர் சிறிய பழுவேட்டரையர் 'ஒற்றன்' என்று குற்றஞ் சாட்டிப் பிடித்து வர ஆட்களை ஏவினார். வந்த காரியம் பூர்த்தியாவதற்குள் சிறைப்பட நான் விரும்பவில்லை. ஆகையால் நான் தஞ்சையில் தங்கியிருந்த வீட்டுச் சிறுவனை வழிகாட்ட அழைத்துக் கொண்டு கிளம்பினேன்......"

"தஞ்சை நகரில் யாருடைய வீட்டில் தங்கினீர்?"

"கோட்டைக்கு வெளியிலே பூக்காரப் பெண்மணி ஒருத்தியின் வீட்டில் தங்கினேன். அந்த அம்மாள் ஊமை......"

"ஓகோ! அவளுடைய பெயர்?..."

"அந்த அம்மாளின் பெயர் தெரியாது; ஆனால் அவளுடைய பிள்ளையின் பெயர்மட்டும் எனக்குத் தெரியும். அவன் பெயர் சேந்தன் அமுதன்......"

"நான் நினைத்தது சரிதான்; மேலே சொல்லுங்கள்!"

"என் குதிரை மேல் அச் சிறுவனையும் ஏற்றிக் கொண்டு இந்தப் பழையாறை நகரை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அதற்குள் பழுவேட்டரையரின் ஆட்கள் சிலர் எங்களை நெருங்கி வந்து விட்டார்கள். நான் வந்த காரியம் முடிவதற்குள் அவர்களிடம் பிடிபட விரும்பவில்லை. குடமுருட்டி ஆறு வந்ததும் அச் சிறுவனிடம், 'நான் இங்கே இறங்கிக் கொள்கிறேன், தம்பி! நீ பாட்டுக்குக் குதிரையை விட்டுக்கொண்டு போ! உன்னை நான் தான் என்று அவர்கள் தொடர்ந்து துரத்தி வருவார்கள். உன்னைப் பிடித்த பிறகு ஏமாறுவார்கள்! நான் எங்கே என்று அவர்கள் கேட்டால் ஆற்றில் விழுந்து முழுகிப்போய் விட்டதாகச் சொல்!' என்றேன். அந்தப் பையனோ அரிச்சந்திரனுடைய சந்ததியில் வந்தவன் போலிருக்கிறது. 'நீங்கள் முழுகாதபோது எப்படி முழுகி விட்டதாகப் பொய் சொல்லுவேன்?' என்றான். அந்தப் பிள்ளை பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாமற் பொருட்டு, அவனைக் குதிரையில் சேர்த்துக் கட்டி விட்டு, நான் நதியில் குதித்து முழுகி விட்டேன். அம்மம்மா! இந்தச் சோழ நாட்டு நதிகளில், அதுவும் கரை ஓரங்களில், எப்பேர்ப்பட்ட நீர்ச் சுழல்கள்! அவற்றில் அகப்பட்டுக் கொண்டு நான்

பெரிதும் திண்டாடிப் போனேன். கடைசியில், கரை ஓரத்தில் இருந்த மரத்தின் வேர் ஒன்றைப் பிடித்துக் கொண்டு கரையேறி உயிர் பிழைத்து வந்தேன். தேவி! நீர்ச் சுழலில் நான் அகப்பட்டுக் கொண்டு சுழன்று சுழன்று சுழன்று மதிமயங்கி மூச்சுத் திணறிக் கஷ்டப்பட்டபோது என்ன கண்டேன், எதை நினைத்துக் கொண்டேன் என்று எண்ணுகிறீர்கள்?"

"நான் எவ்விதம் அறிவேன்? ஒரு வேளை கஜேந்திர மோட்சத்தை நினைத்துக் கொண்டிருக்கலாம்......"

"இல்லை, இல்லை; என்னைப்போலவே அந்த நீர்ச்சுழலில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய சில கயல் மீன்களைக் கண்டேன். அந்தக் கயல் மீன்கள் இந்தச் சோழநாட்டுப் பெண்களின் கண்களை நினைவூட்டின. நதியின் நீர்ச்சுழலில் அகப்பட்டுக் கொண்டவனாவது எப்படியோ தப்பிப் பிழைக்கலாம்; ஆனால் இந்தச் சோழ நாட்டுப் பெண்களின் விழிச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவன் ஒருகாலும் தப்பிப் பிழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டேன்!......"

"இம்மாதிரி பெண்களைக் குற்றம் கூறிப் பழி சொல்வதில் சிலருக்கு ஒரு பெருமை; தாங்கள் செய்யும் தவறுக்குப் பெண்களின் மீது குற்றம் சொல்வது ஆண் பிள்ளைகளின் வழக்கம்..."

"அந்த வழக்கத்தைத்தான் நானும் கைப்பற்றினேன். அதில் என்ன தவறு?" என்றான் வந்தியத்தேவன்.

அச் சமயம் அரண்மனைக்குள்ளேயிருந்து இனிய குழலோசை கேட்டது. அதைத் தொடர்ந்து தண்டைச் சிலம்புகளின் கிண்கிணி ஒலியும் மத்தளத்தின் முழக்கமும் கலந்து வந்தன. பின்னர், இளம் பெண்களின் இனிய குரல்கள் பல சேர்ந்து ஒலித்தன. சிலப்பதிகாரக் காவியத்தில் உள்ள பின்வரும் ஆய்ச்சியர் குரவைப் பாடலைப் பாடினார்கள்:—

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள்வருமேல் அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

பாடல் முடியும் வரையில் குந்தவையும் வந்தியத்தேவனும் அதன் இனிமையில் ஈடுபட்டுத் தம் வசமிழந்து நின்றார்கள். மறுபடியும் வாத்திய முழக்கத்துடன் ஆடல் தொடங்கியதற்கு அறிகுறியாகத் தண்டைச் சதங்கைகளின் ஒலி எழுந்தது.

"அரண்மனையில் குரவைக் கூத்து நடக்கிறது போலும்! கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து ஒன்று பார்த்தேன். அது முற்றும் வேறுவிதமாயிருந்தது!" என்றான் வல்லவரையன்.

"ஆம்; என் தோழிகள் குரவைக் கூத்துப் பயில்கிறார்கள். சீக்கிரத்தில் என்னைக் காணாமல் தேடத் தொடங்கி விடுவார்கள். தாம் வந்த காரியம் என்ன?" என்று இளைய பிராட்டி குந்தவைதேவி கேட்டாள்.

"இதோ நான் வந்த காரியம்; தங்கள் தமையனாரின் ஓலை; எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி, நீர்ச் சுழல்கள் — விழிச் சுழல்களிலிருந்து காப்பாற்றி, இதைக் கொண்டு வந்தேன்!" என்று வல்லவரையன் கூறி ஓலையை எடுத்து நீட்டினான்.

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

விந்தையிலும் விந்தை!

குந்தவைப் பிராட்டி வந்தியத் தேவன் நீட்டிய ஓலையைப் பெற்றுக் கொண்டு படித்தாள். அது வரையில் நெரிந்த புருவங்களுடன் சுருங்கியிருந்த அவள் முகம் இப்போது மலர்ந்து பிரகாசித்தது.

வல்லவரையனை நிமிர்ந்து நோக்கி, "ஓலையைக் கொடுத்து விட்டீர். இனி என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டாள் குந்தவைதேவி.

"தங்களிடம் ஓலையைக் கொடுத்ததுடன் என் வேலையும் முடிந்து விட்டது. இனி, நான் ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான்."

"உமது வேலை முடியவில்லை; இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது."



"தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லை, தேவி!"

"உம்மிடம் அந்தரங்கமான வேலை எதையும் நம்பி ஒப்புவிக்கலாம் என்று இதில் இளவரசர் எழுதியிருக்கிறாரே? அதன்படி நீர் நடந்து கொள்ளப் போவதில்லையா?"

"இளவரசரிடம் அவ்விதம் ஒப்புக் கொண்டு தான் வந்தேன். ஆனால் என்னை நம்பி முக்கியமான வேலை எதுவும் ஒப்புவிக்க வேண்டாம். தங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்."

"உமது கோரிக்கை எனக்கு விளங்கவில்லை. ஒன்றை ஒப்புக் கொண்ட பிறகு பின்வாங்குவதுதான் வாணர் குலத்தின் மரபா?"

"பழம் பெருமை பேசுவது வாணர் குலத்தின் மரபு அன்று; ஒப்புக் கொண்டு பின்வாங்குவதும் வாணர் குலத்து மரபு அன்று."

"பின்னர், ஏன் தயக்கம்? பெண் குலத்தின்பேரில் கொண்ட வெறுப்பா அல்லது என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா?" என்று இளவரசி கூறி இளநகை புரிந்தாள்.

ஆகா! இது என்ன கேள்வி? கடலுக்குச் சந்திரனைப் பிடிக்காமல் போகுமா? பிடிக்கவில்லையென்றால்



ஆயிரம் அலைக் கைகளையும் நீட்டிப் பூரண சந்திரனை ஏன் தாவிப் பிடிக்க முயல்கிறது? நீல வானத்துக்குப் பூமா தேவியைப் பிடிக்கவில்லையென்று யார் சொல்லுவார்கள்? பிடிக்காது போனால், இரவெல்லாம் ஆயிரமாயிரம் நட்சத்திரக் கண்களினால் இந்தப் பூமியை உற்று உற்றுப் பார்த்து ஏன் பூரித்துக் கொண்டிருக்கிறது? மேகத்துக்கு மின்னலைப் பிடிக்காதிருக்குமா? பிடிக்கவில்லையென்றால், தன்னைப் பிளந்து கொண்டு பாய்ந்தோடும் மின்னலை அப்படி ஏன் இறுகத் தழுவி மார்போடு அணைத்துக் கொள்கிறது? வண்டுக்கு மலர் பிடிப்பதில்லையென்பது உண்டா? அங்ஙனமானால், ஏன் ஓயாமல் மலரைச் சுற்றி வட்டமிட்டு மதி மயங்கிவிழுகிறது? விட்டில் பூச்சிக்கு விளக்கைப் பிடிக்கவில்லையென்றால் யாரேனும் நம்புவார்களா? அவ்வாறெனில், ஏன் அந்த விளக்கின் ஒளியில் விழுந்து உயிரை விடுகிறது? தேவி! நல்ல கேள்வி கேட்டீர்! தம்மை எனக்குப் பிடிக்கவில்லையென்றால், தமது கடைக் கண் பார்வை என்னை ஏன் இப்படித் திகைக்க

வைக்கிறது? தமது இதழ்களின் ஓரத்தில் விளையாடும் இளநகை என்னை ஏன் இவ்விதம் சித்தப் பிரமை கொள்ளச் செய்கிறது?... இவ்வளவு எண்ணங்களும் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் தோன்றின. ஆனால், நாவினால் சொல்லக்கூட வில்லை.

"ஐயா! என்னுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லவில்லையே? வாணர் குலத்தில் பிறந்த வீர புருஷன் கேவலம் ஒரு பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று தயக்கமா? இளவரசர் தம்மிடம் இந்த ஓலையைக் கொடுத்த போது இதில் எழுதி யிருப்பதைப் பற்றிச் சொல்லவில்லையா?" என்று இளவரசி மீண்டும் வினவினாள்.


"தேவி! இளவரசர் விருப்பத்தை நன்கு தெரிந்து கொண்டுதான் புறப்பட்டு வந்தேன். ஆனால் நல்ல வேளையில் என் யாத்திரையைத் தொடங்கவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால் வழியெல்லாம் விரோதிகளைச் சம்பாதித்துக் கொண்டு வந்தேன். உற்ற நண்பனையும் பகைவன் ஆக்கிக் கொண்டேன். நாலா புறத்திலும் பகைவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாம் இடும்பணியை நான் நிறைவேற்றுவதாக எப்படி உறுதி சொல்ல முடியும்? இதனால்தான் தயங்குகிறேன். என்னால் தங்கள் காரியம் கெட்டுப் போகக்கூடாதல்லவா?" என்று சொன்னான் வல்லவரையன்.

"யார் யார் அந்தப் பகைவர்கள்? எனக்குத் தெரிவிக்கலாமா?" என்று குந்தவை கவலை தொனித்த குரலில் கேட்டாள்.

"பழுவேட்டரையர்கள் என்னை வேட்டையாடிப் பிடிக்க நாலா புறமும் ஆட்களை ஏவியிருக்கிறார்கள். என் உயிர் நண்பனாயிருந்த கந்தமாறன் நான் அவனை முதுகில் குத்திக்கொல்ல முயன்றதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவ வேஷதாரி ஒருவன் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். பழுவூர் இளைய ராணி நந்தினிதேவி என் மீது ஒரு மந்திர வாதியை ஏவி விட்டிருக்கிறாள். எந்த நிமிஷத்தில் யாரிடம் நான் அகப்பட்டுக் கொள்வேனோ, தெரியாது..."



வெள்ளத்திலிருந்து கரையேறித் தப்பிய அன்றிரவு மந்திரவாதியுடன் நேர்ந்த அநுபவம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. பகலில் பிரயாணம் செய்வதின் அபாயத்தை எண்ணி மூங்கில் காடுகளிலும் வாழைத் தோப்புக்களிலும் அவன் பொழுது போக்கினான். இரவில் நதிக் கரையோடு நடந்து சென்றான். வெகு தூரம் நடந்து களைத்து இரவு மூன்றாம் ஜாமத்தில் ஒரு பாழடைந்த பழைய மண்டபத்தை அடைந்தான். வெளியில் நிலாமதியம் பட்டப் பகல்போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துக்குள்ளேயும் சிறிது தூரம் நிலா வெளிச்சம் புகுந்து பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. வெளிச்சமாயிருந்த பகுதியைக் கடந்து இருளடைந்த பகுதிக்குச் சென்று வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்த சமயத்தில் வெகு சமீபத்திலிருந்து ஆந்தையின் அகோரமான குரல் வந்தது. பழுவூர் இளைய ராணியுடன் லதா மண்டபத்தில் பேசிக்கொண்டிருந்த போது அதே மாதிரி ஆந்தைக் குரல் கேட்டது அவனுக்கு நினைவு வந்து திடுக்கிட்டு எழுந்தான். உள்ளே இருட்டின பகுதியிலிருந்து இரு சிறிய ஒளிப் பொட்டுக்கள் அவனை உற்று நோக்கின. வெளியிலே போய்விடலாம் என்று எண்ணி இரண்டு அடி நடந்தான். வெளியிலிருந்து யாரோ உள்ளே வரும் காலடிச் சத்தம் கேட்டது. இடிந்து விழுந்து



கரடு முரடாயிருந்த தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதன் மறைவில் நின்றான். வெளியிலிருந்து வந்தவன் முகம் நிலா வெளிச்சத்தில் கொஞ்சம் தெரிந்தது. பழுவூர் ராணியைப் பார்க்க வந்த மந்திரவாதிதான் அவன் என்பதைத் தெரிந்து கொண்டான். மந்திரவாதி அந்தத் தூணை நோக்கியே வந்தான். தான் அவ்விடம் மறைந்திருப்பது அவனுக்குத் தெரியாது என்றும், தன்னைக் கவனியாமல் மண்டபத்துக்குள்ளே போய் விடுவான் என்றும் வந்தியத் தேவன் நினைத்தான். ஆனால் தூணின் அருகில் வரும் வரையில் மெள்ள மெள்ளப் பூனை போல நடந்து வந்த மந்திரவாதி திடீரென்று கோரமான குரலில் ஒரு கூச்சல் போட்டுக் கொண்டு வந்தியத்தேவனுடைய கழுத்தை ஒரு கையினால் பிடித்து நெறித்தான். "எடு! அந்தப் பனை இலச்சினை மோதிரத்தைக் கொடு! கொடுக்காவிட்டால் உன் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன்!" என்று கத்தினான்.

வந்தியத் தேவனுடைய கழுத்து முறிந்து விடும்போலிருந்தது; அவனுடைய விழிகள் பிதுங்கி வெளிவந்து விடும்போலிருந்தது; மூச்சுத் திணறியது. எனினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். அந்தப் பழைய தூணை ஒரு கையினால் அழுத்திக் கொண்டு ஒரு காலைத் தூக்கிப் பூரண பலத்தையும் பிரயோகித்து ஒரு உதை விட்டான். மந்திரவாதி ஓலமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான். அதே சமயத்தில் அந்தப் பழைய தூண் சரிந்து விழுந்தது. மேலே கூரையிலிருந்து பொல பொலவென்று கற்கள் விழுந்தன. வௌவால் ஒன்று பட பட வென்று சிறகை அடித்துக் கொண்டு வெளியே சென்றது. அதைத் தொடர்ந்து வந்தியத் தேவனும் வெளியேறினான். ஓடப் பிடித்தவன் சிறிது தூரம் வரையில் திரும்பிப் பார்க்கவே யில்லை. பின்னால் யாரும் தொடர்ந்து வரவில்லையென்று நிச்சயமான பிறகுதான் நின்றான். அந்த இரவு அநுபவத்தை நினைத்தாலும் வந்தியத்தேவனுடைய உடம்பெல்லாம் இப்போது கூட கிடுகிடு வென்று நடுங்கியது.

அந்தப் பயங்கர நினைவுகளுக் கிடையில், "ஐயா! காஞ்சியிலிருந்து தாம் புறப்பட்டு எத்தனை காலமாயிற்று?" என்று குந்தவை கேட்டது அவனுடைய காதில் விழுந்து அவனுக்கு மனத் தெளிவை அளித்தது.

"ஒரு வாரமும் ஒரு நாளும் ஆயிற்று, தேவி!" என்றான்.

"இதற்குள் இவ்வளவு பகைவர்களை நீர் சம்பாதித்துக் கொண்டது விந்தையிலும் விந்தைதான். இவ்வளவு அதிசயமான காரியத்தை எப்படிச் சாதித்தீர்?"

"அது பெரிய கதை, தேவி!"

"இருந்தால் பாதகமில்லை. சொல்லலாம். அந்த விவரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு தான் தமக்கு நான் இடவேண்டிய பணியை இடக்கூடும்."

இவ்வாறு இளவரசி கூறிவிட்டு, ஈசான சிவ பட்டரை அருகில் அழைத்து, "படகோட்டி எப்படிப் பட்டவன்?" என்று கேட்டாள்.

"இரண்டு காதும் நல்ல செவிடு; இடி இடித்தாலும் கேளாது, தாயே!"

"ரொம்ப நல்லது. படகிலேறிக் கொஞ்ச தூரம் ஓடையில் போய்விட்டு வரலாம், வாருங்கள்! இவருடைய கதையை முழுதும் நான் கேட்க வேண்டும்!" என்றான்.

வல்லவரையன் புளகாங்கிதம் அடைந்தான். சோழர் குலத் திருமகளோடு ஒரு படகில் செல்லும் பாக்கியம் எளிதில் கிட்டுவதா? அதைப் பெறுவதற்கு ஏழு ஜன்மங்களில் தான் தவம் செய்திருக்க வேண்டாமா? படகில் ஏறிய பிறகு எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் கதையை நீட்டி வளர்த்திச் சொல்லவேண்டும்! சுருக்கமாக முடித்து விடக் கூடாது! அவசரம் என்ன? அரிதில் பெற்ற பாக்கியத்தை எளிதில் கை நழுவ விட்டு விடலாமா?

வந்தியத் தேவனுக்கு அவசரமில்லை தான். ஆனால் படகு ஓடையில் நகர்ந்து அவன் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் நடந்ததைச் சொல்லத் தொடங்கியது முதல் குந்தவைக்கு நிமிஷத்

துக்கு நிமிஷம் அவசரமும் பரபரப்பும் அதிகமாகி வந்தன. "மேலே என்ன?" "அப்புறம் என்ன?" என்று கேட்டுத் துரிதப் படுத்தி வந்தாள். வந்தியத்தேவன் அவனுடைய தீர்மானத்தின் படி கூடிய வரையில் கதையை வளர்த்தினான். எவ்வளவு நீண்ட கதையாயினும் முடிவு ஒன்று வந்து தானே ஆகவேண்டும்? கதை முடிந்த போது படகும் திரும்ப ஓடைப் படித் துறைக்கு வந்து சேர்ந்தது.

படகிலிருந்து அவர்கள் இறங்கிப் பூங்காவுக்குள் வந்த போது, அரண்மனையில் இன்னும் குரவைக் கூத்து நடந்து கொண்டதற்கு அறிகுறியாக இசைக் கருவிகளும் தண்டைச் சிலம்புகளும் ஒலித்தன. பின்வரும் சிலப்பதிகார வரிப் பாடலும் கேட்டது:—

"பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக்கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார் தம்
கண்ணென்ன கண்ணே!

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணா வென்னா நாவென்ன நாவே!"

இதைக்கேட்ட வல்லவரையன் "கஞ்சனார் மிக்க வஞ்சனாரா யிருக்கலாம்! ஆனால் எனக்கு நேற்றுப் பேருதவி செய்தார்!" என்றான்.

"அது என்ன? கம்ஸன் உமக்கு என்ன உதவி செய்திருக்க முடியும்?" என்று இளைய பிராட்டி கேட்டாள்.

"நான் இந்த நகரத்துக்குள் புகுவதற்குக் கம்ஸன்தான் உதவி செய்தான்!" என்றான் வந்தியத்தேவன். பிறகு, அந்த உதவியின் வரலாற்றையும் கூறினான்.

பழையாறைக்குத் தான் வந்து சேர்வதற்குள்ளாகவே பழுவேட்டரையரின் ஆட்கள் வந்திருப்பார்கள் என்று வந்தியத் தேவன் ஊகித்திருந்தான். நகரத்தின் நுழை வாசல்கள் தோறும் அவர்கள் காத்திருப்பார்கள். சந்தேகம் ஏதேனும் தோன்றினால் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். அவர்களிடம் சிக்காமல் பழையாறை நகருக்குள் பிரவேசிப்பது எப்படி?—இந்தக் கவலையுடன் அந்த மாநகரின் பிரதான வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அரிசிலாற்றங் கரையில் வந்தியத்தேவன் நின்றிருந்தபோது நாடக கோஷ்டி ஒன்று வந்தது. கண்ணன், பலதேவன், கம்ஸன் முதலிய வேஷக்காரர்கள் வந்தார்கள். அவர்களில் கம்ஸன் மட்டும் மரத்தினாலான முகத்தைத் தரித்திருந்தான். வந்தியத் தேவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாடக கோஷ்டியுடன் பேச்சுக் கொடுத்தான். கம்ஸன் வேஷம் போட்டவனுக்கு ஆட்டத்திறமை அவ்வளவு போதாது என்றான். கம்ஸ வேஷக்காரன் இவனுடன் சண்டைக்கு வந்தான். வந்த சண்டையை இலகுவில் வல்லவரையன் விடுவானா? "உன்னைவிட நான் நன்றாக ஆடுவேன். பார்க்கிறாயா?" என்று சொல்லி முகமூடியைப் பலவந்தமாகப் பிடுங்கிவைத்துக் கொண்டு ஆடினான். அச்சமயம் அவனுடைய ஆரவார தடபுடலைப் பார்த்தவர்கள் அவனை மெச்சினார்கள். அவன் ஆடியதுதான் அதிக பொருத்தமாயிருந்தது என்றும் சொன்னார்கள். கம்ஸ வேஷக்காரன் கோபித்துக் கொண்டு போய் விட்டான். "அவன் போனால் போகட்டும்; நானே உங்களுடன் நகரத்துக்குள் வந்து ஆடுகிறேன்" என்று வந்தியத்தேவன் ஒப்புக் கொண்டான். நாடக கோஷ்டியார் மகிழ்ச்சியுடன் அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு சென்றார்கள்.

பழையாறை வீதிகளில் ஆட்டம் பாட்டமெல்லாம் முடிந்த பிறகு வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் சொல்லி அனுப்பியபடி வடமேற்றளி ஆலயத்துக்குச் சென்று ஈசான பட்டரைச் சந்தித்துப் பேசினான். அவர் அவனைக் கோயிலைச் சுற்றியிருந்த சமணர் முழையில் இருக்கச் செய்து, இளவரசி குந்தவைப் பிராட்டியிடம் முன்னால் தெரிவித்துவிட்டு ஓடை வழியாக அழைத்து வந்தார்.

இந்த விவரங்களைக் கேட்ட இளவரசி வந்தியத்தேவனை வியப்பினால் மலர்ந்த கண்களைக் கொண்டு பார்த்து, "வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் கருணை இந்தச் சோழர் குலத்துக்குப் பரிபூரணமாக இருக்கிறது. ஆகையினாலேதான் இந்தச் சங்கடமான நிலைமையில் தம்மை

எனக்கு உதவியாகத் தேவி அனுப்பி வைத்திருக்கிறுன்!'' என்றுன்.

"அரசி! இன்னும் தாம் எந்த விதப் பணியும் எனக்கு இடவில்லையே? என் பூரண ஆற்றலைக் காட்டக்கூடிய சமயம் இன்னும் கிட்டவில்லையே!'' என்றுன் வல்லவரையன்.

"அதைப் பற்றிக் கவலை வேண்டாம். இது காறும் தமக்கு நேர்ந்திருக்கும் அபாயங்கள் எல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடிய அளவு அபாயம் நிறைந்த வேலையைத் தரப் போகிறேன்!'' என்றுள்.

வந்தியத்தேவன் உள்ளம் பொங்கி உடல் பூரித்து நின்றுன். அந்தப் பெண்ணரசி இடும் பணியை நிறைவேற்றுவதற்காக ஏழு கடல்களைக் கடந்து செல்லவும், ஆயிரம் சிங்கங்களுடன் ஆயுதம் இன்றிப் போர் செய்யவும், மேரு பர்வதத்தின் உச்சியில் ஏறி விண் மீன்களைக் கையினுல் பறித்து எடுத்துக் கொண்டு வரவும் அவன் சித்தமானுன்.

அரண்மனை நந்தவனத்தின் மத்தியில் பளிங்கினுல் ஆன வஸந்த மண்டபம் ஒன்று இருந்தது. அதை நோக்கிக் குந்தவை நடந்தாள். பட்டரும் வந்தியத் தேவனும் இளவரசியைத் தொடர்ந்து சென்றுர்கள்.

மண்டபத்துக் குள்ளிருந்த மணி மாடம் ஒன்றிலிருந்து குந்தவை ஒரு சிறிய பனை ஓலைத் துணுக்கையும் தங்கப் பிடி அமைத்த எழுத்தாணியையும் எடுத்தாள். ஓலைத் துணுக்கில் பின் வருமாறு எழுதினுள்:

"பொன்னியின் செல்வ! இந்த ஓலை கண்டதும் உடனே புறப்பட்டு வரவும். விவரங்கள் இது கொண்டு வருகிறவர் சொல்லுவார். இவரைப் பூரணமாக நம்பலாம்."

இவ்விதம் எழுதி அடியில் ஆத்தி இலை போன்ற சிறிய சித்திரம் ஒன்று வரைந்தாள். ஓலையை வந்தியத்தேவன் கையில் கொடுப்பதற்காக நீட்டிய வாறு, "சிறிதும் தாமதியாமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு ஈழ நாட்டுக்குச் செல்ல வேண்டும். இளவரசர் அருள்மொழி வர்மரிடம் கொடுத்து அவரைக் கையோடு அழைத்து வர வேண்டும்!'' என்றுள்.

வந்தியத்தேவன் ஆனந்தத்தின் அலைகளினுல் மோதப்பட்டுத் தத்தளித்தான். நெடுநாளாக அவன் கொண்டிருந்த மனோரதங்கள் இரண்டில் ஒன்று நிறைவேறி விட்டது. சோழர் குல விளக்கான இளைய பிராட்டியைச் சந்தித்தாகி விட்டது. அவர் மூலமாகவே இரண்டாவது மனோரதமும் நிறைவேறப் போகிறது. இளவரசர் அருள்மொழி வர்மரைச் சந்திக்கும் பேறு கிடைக்கப் போகிறது.

"தேவி! என் மனதுக்குகந்த பணியையே தருகிறீர்கள். ஓலையை எடுத்துக் கொண்டு இப்போதே புறப்படுகிறேன்!'' என்று சொல்லி ஓலையைப் பெற்றுக் கொள்வதற்காக வலக் கரத்தை நீட்டினுன்.

குந்தவை ஓலையை அவனிடம் கொடுத்த போது காந்தள் மலரையொத்த அவளுடைய விரல்கள் வந்தியத்தேவனுடைய அதிர்ஷ்டக் கையைத் தொட்டன. அவனுடைய மெய் சிலிர்த்தது; நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. ஆயிரம் பதினுயிரம் பட்டுப் பூச்சிகள் அவன் முன்னுல் இறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. ஆயிரம் பதினுயிரம் குயில்கள் ஒன்று சேர்ந்து இன்னிசை பாடின. மலை மலையான வண்ண மலர்க் குவியல்கள் அவன் மீது விழுந்து நாலா பக்கமும் சிதறின.

இந்த நிலையில் வந்தியத்தேவன் தலை நிமிர்ந்து குந்தவை தேவியைப் பார்த்தான். என்ன வெல்லாமோ சொல்ல வேணும் என்று அவனுடைய உள்ளம் பொங்கியது. ஆனுல் அதைச் சொல்லும் சக்தி உயிரற்ற வெறும் வார்த்தைகளுக்கு ஏது?

சொல்ல வேண்டியதை யெல்லாம் அவனுடைய கண்களே சொல்லின. அச்சமயம் வந்தியத் தேவனுடைய கண்கள் புனைந்துரைத்த கவிதைகளுக் கிணையான காதற் கவிதைகளைக் காளிதாஸனும் புனைந்ததில்லை. 'முத்தொள்ளாயிரம்' இயற்றிய பழந்தமிழ்க் கவிஞர்களும் இயற்றியதில்லை யென்றுல் வேறு என்ன சொல்ல வேண்டும்?

வஸந்த மண்டபத்துக்கு வெளியில் எங்கேயோ சற்று தூரத்தில் காய்ந்த இலைச் சருகுகள் சலசல வென்று சப்தித்தன. ஈசான சிவ பட்டர் தம் குரலைக் கனைத்துக் கொண்டார்.

வந்தியத்தேவன் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தான்! (தொடரும்)

அக்கப்போர்

"தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையருக்குப் பாதுகாப்பு." —ஒரு செய்தித் தலைப்பு

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையருக்குப் பாதுகாப்பு, கறுப்பர்களுக்குக் காப்பு என்பது தான் உலகப் பிரசித்தி பெற்ற செய்தி ஆயிற்றே!

★

"மொழித்துவேஷத்தைக் களையவேண்டும்." —ஒரு மந்திரி

அத்துடன் சிலர் போடும் வேஷத்தையும் களைய வேண்டும்!

★

"டிராமில் மோதியதால் ஒருவர் மரணம்." —ஒரு செய்தித் தலைப்பு

டிராம் மோதியல்ல, டிராமில் மோதிக் கொண்டதால் தான் அவர் மரணமடைந்தார்!

★

"இந்திய மந்திரவாதிகள் சிலர் செய்யும் கண் கட்டு வித்தைகள் பிரிட்டிஷ்காரர்களுக்குப் பெரும் புதிராக இருக்கின்றன." —ஒரு லண்டன் செய்தி

சில வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் இந்தியாவில் செய்துவந்த கண் கட்டு வித்தைகள் இந்தியருக்குப் பெரும் புதிராகத்தான் இருந்தன.

★

"சோஷலிஸ்டுத் தலைவர்கள் சிலர் மரண வரி விதிக்க வேண்டுமென்கிறார்களாம்."

யார் யாருக்கு மரண வரி விதிக்கலாம் என்ற 'லிஸ்டு' இந்தச் சோஷலிஸ்டுகளிடம் தயாராக இருக்கிறது போலிருக்கிறதே!

★

"அரிசி மில்களை ஒழிக்க வேண்டும்." —ஒரு அசெம்பிளி மெம்பர்

அரிசியை ஒழித்து விட்டால் அரிசி மில் தானாகவே ஒழிந்து போய்விடுகிறது என்கிறார் ஒரு ரேஷன் கார்டுக்காரர்.

★

"பஞ்ச லீலையைச் சித்திரம் மூலம் விளக்கும் சுவரொட்டிகள் சென்னை முழுதும் ஒட்டப்பட்டிருக்கின்றன." —செய்தி

ரொட்டி இல்லாத குறையை இந்தச் சுவரொட்டிகள் எப்படி ஈடு செய்யும்!

★

"உப்பு உற்பத்தி அதிகரித்திருக்கிறது." —ஒரு செய்தி

"அதுதான் போலிருக்கிறது என் மனைவியின் சமையலில், இப்பொழுதெல்லாம், உப்பு அதிகம் கரிக்கிறது" என்கிறார் ஒரு குடும்பஸ்தர்.

★

"கல்யாண வீட்டில் தீ விபத்து." —ஒரு செய்தித் தலைப்பு

கல்யாணப் பெண்ணின் நாத்தி, ஓரகத்தி இவர்களை யாரும் சந்தேகித்திருக்க மாட்டார்கள் என எண்ணுகிறோம்!

"திருப்பதி யாத்திரையைப் பற்றின சினிமாப் படம் ஒன்றைத் திருப்பதி தேவஸ்தான நிர்வாகிகள் தயார் செய்து இருக்கிறார்கள்." —ஒரு செய்தி

இந்தப் படத்தைப் பார்ப்பதற்கு அதிகக் கட்டணம் ஏற்படுத்திப் பக்தர்களை 'மொட்டையடிக்க' மாட்டார்களே!

★

"சப் கலெக்டர் வீட்டில் நகை களவு." —நெல்லூர் செய்தி

சப் (எல்லா) நகைகளும் களவு போயிருக்காதென நம்புகிறோம்!

★

"ஜனாதிபதி ட்ரூமன் மாதிரி ஜனாதிபதி ரூஸ்வெல்டின் கொள்கையை மாற்றி இருக்கக் கூடாது." —ஸம்னர் வெல்ஸ்

ஜனாதிபதி பதவி கை மாறினவுடன் கொள்கையும் மாறுவது இயற்கைதானே!

★

"காசியில் பட்டுத் தொழிலாளிகள் ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள்." —செய்தி

பட்டுத் தொழிலாளிகள் மிகவும் சிரமப் பட்டு வந்தாலும் இதுவரை ஸ்ட்ரைக் செய்யாமல் இருந்ததற்குத் திருஷ்டிப் பட்டுவிட்டது போலும்!

★

"பார்லிமெண்டுக்கு அருகில் சிலர் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்து குழப்பம் விளைவிக்க முயன்றனர்." -டில்லிச் செய்தி

கொல்லன் தெருவில் ஊசி விற்க முயன்ற கதையாக அல்லவா இருக்கிறது!

★

"சர்க்கரை கையிருப்பு சென்ற வருஷத்திலிருந்ததைவிட இந்த வருஷம் 10 லட்சம் மணங்கு குறைவாக இருக்கிறது!" —செய்தி

சர்க்கரை உற்பத்தி இந்த லட்சணத்தில் போய்க் கொண்டிருந்தால் உருப்படுவது எப்படி!

★

"யுத்தத்தில் வெற்றி காண அணுகுண்டு பயன்படுமானால் அதை வீச நான் தயங்க மாட்டேன்." —ஐஸன்ஹோவர்

அணுகுண்டு வீச்சு பற்றிய விஷயம் வாய் வீச்சுடன் நிற்கும் வரையில் உலக மக்களுக்கு அணுவளவும் பயமில்லை!

★

"அதிக வருமானம் தரக்கூடிய மரண வரியை ஏன் போடவில்லை!" —சட்டசபையில் ஒரு மெம்பர் கேள்வி

அவசரப்பட்டுக் கொண்டு மரண வரியை அல்பாயுஸ் வரியாக்க மந்திரி விரும்பவில்லை போலும்!

★

"ஐக்கிய மகா சபை மக்களை என்றும் ஏமாற்றியதில்லை." —டாக்டர் காரே

காரணம், மக்கள் ஐக்கிய மகாசபை மீது என்றும் நம்பிக்கை வைத்ததில்லை.



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

31. சில சந்தேகங்கள்

நீங்கள் எழுதி வரும் ஆசனங்கள் எல்லாவற்றையும் ஒரே நாளில் செய்யவேண்டுமா? சிலவற்றைச் செய்து விட்டு மற்றவை மறு நாள் செய்யலாமா? அல்லது தினம் ஒரு ஆசனம் வீதம் பழகவேண்டுமா? சௌகரியமாய்ச் செய்யக் கூடிய ஆசனங்களை முதலில் செய்து விட்டு மற்றவைகளைப் பிறகு செய்யலாமா? ஒவ்வொரு ஆசனத்தின் இடையில் எவ்வளவு நேரம் இளைப்பாறலாம்? ஆசனங்களை வரிசைக் கிரமப்படித்தான் பழக வேண்டுமா? அப்படியானால் வரிசைக் கிரமத்தைத் தெரிவியுங்கள். இம்மாதிரி பல கேள்விகளைப் பல அன்பர்கள் கடிதங்கள் மூலமாகக் கேட்டிருக்கின்றனர்.

இதுவரை ஏழு ஆசனங்கள் மட்டும்தான் விவரித்துள்ளேன். அவைகள் எல்லாம் செய்யச் சுமார் பதினைந்து நிமிஷங்கள்தான் ஆகும். தினம் ஒரு ஆசனம் வீதம் பழகக் கூடாது. எல்லாவற்றையும் ஒரே நாளில், அதுவும் ஒரே வேளையில் செய்ய வேண்டியதே. சுலபமாய்ச் செய்ய வருவதை முதலில் செய்து விட்டு, கடினமானதைப் பிறகு செய்ய வேண்டுமென்பதில்லை. இதுவரை சொல்லிவந்த ஆசனங்களில் கூட படிப்படியாய்த்தான் உடலுக்கும், முதுகெலும்புக்கும் பயிற்சி இருக்கிறது. கடினமானதை முதலில் செய்யச் சொல்லவில்லை. ஆசனங்களை வரிசைக் கிரமப்படி பழகுவதுதான் நல்லது. ஒவ்வொரு ஆசனத்துக்கும் இடையில் அரை நிமிஷம் முதல் ஒரு நிமிஷம் வரை ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். தனுராசனம் செய்து முடிந்த பின் சற்று மூச்சு வாங்கும். ஆகையால் இடையில் ஒரு நிமிஷம் முதல் இரண்டு நிமிஷங்கள் வரை ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு ஆசனத்தையும் மூன்று தடவை, ஆறு தடவை என்று செய்யும்போது, ஒவ்வொரு தடவையும் இடையில் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் கிடையாது. தொடர்ந்து செய்ய வேண்டியதே. ஆனால் ஒரு ஆசனம் செய்து முடித்துவிட்டு மறு ஆசனம் ஆரம்பிக்கு முன் மேற்சொன்னபடி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். மிக பலஹீனமானவர்கள் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் வரை ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். தனுராசனத்தில் மட்டும் ஒவ்வொரு பக்கமும் மூன்று தடவை, ஆறு தடவை என்று செய்வதால் பெரு மூச்சு வாங்கும். அதற்கு மட்டும் ஒரு தடவைக்கு மத்தியில் ஒரு நிமிஷம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். சிலர் ஓய்வு எடுத்துக் கொள்ளுவதிலேயே ஆசனங்கள் செய்யும் நேரத்தைவிட அதிக நேரம் எடுத்துக் கொள்வார்கள். பொதுவாய் அதிகம் இளைப்பாறாமல் அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி ஓய்வு நேரத்தைக் குறைத்துச் சுறுசுறுப்பாய் ஆசனங்கள் செய்யவேண்டியது.

நாம் முக்கியமாய் எடுத்துக் கொண்ட ஆசனங்களின் வரிசைக் கிரமங்களாவன:— 1. பத்மாசனம், 2. புஜங்காசனம், 3. சலபாசனம், 4. தனுராசனம், 5. பஸ்சிமோத்தானாசனம், 6. ஹலாசனம், 7. மயூராசனம், 8. சர்வாங்காசனம், 9. மத்ஸ்யாசனம், 10. சிரசாசனம், 11. விபரீத கரணி, 12. யோகமுத்ரா, 13. அர்த்த மத்ஸ்யேந்திராசனம், 14. பாதஹஸ்தாசனம், 15. திரிகோணாசனம், 16. உட்டியாணா, 17. நௌலி, 18. சாந்தி அல்லது சவாசனம்.


இவைகளில் எட்டாவது ஆசனமாகிய சர்வாங்காசனத்தைப் பற்றி இப்பொழுது சொல்ல ஆரம்பிக்கிறேன். முதலிலிருந்து ஏழு ஆசனங்களைச் செய்து வந்தால் உடல் பிடிப்பு விட்டு, இளகி, சர்வாங்காசனமும் மற்றும் மேலே சொன்ன ஆசனங்களையும் செய்யச் சரியாய் வரும். அப்படி இல்லாமல் எடுத்ததும் சிரசாசனம் செய்வது, மயூராசனத்தைப் பழகுவது என்று ஆரம்பித்தால், ஆசனங்களினால் என்ன பலன் உண்டாக வேண்டுமோ அவை பூரணமாகக் கிடைக்காது. சிலருக்குச் சில கஷ்டங்களும் உண்டாகலாம். ஆனால் பழி என்னமோ ஆசனத்தின் மேல் சுலபமாய்ப் போட்டு விடுவார்கள். படிப்படியாய்க் கிரமமாய்ப் பழகுகிறவர்களுக்கு ஒரு வித கஷ்டமும் உண்டாகாது.

பத்மாசனம், புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம் இவைகளில் முதுகெலும்புக்குப் படிப்படியாய்ப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. பத்மாசனத்தில் முதுகெலும்பு நேராய் நிமிர்த்தப் படுகிறது. புஜங்காசனத்தில் முதுகெலும்பின்

கீழ்ப்பாகத்துக்கும், தனுராசனத்தில் முதுகெலும்பின் நடுபாகத்துக்கும் பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறது. ஆக இவைகளில் முதுகெலும்பை மேல்பக்கம் வளைக்கும் பயிற்சி யுள்ளது.

பிறகு ஐந்தாவது பஸ்சிமோத்தானாசனத்திலும், ஆறாவது ஹலாசனத்திலும் முதுகெலும்பு வேறு பக்கம் வளைக்கப் படுகிறது. ஏழாவது மயூராசனத்தில் ஒரு உதவியுமின்றி உடலைக் கைகளில் ஊன்றி நமது சுய முயற்சியினாலேயே உடலைப் பலகையைப் போல் நிறுத்துகிறோம். இப்படிச் செய்யவேண்டுமானால் எடுத்ததும் யாருக்கும் செய்ய வராது. முதலில் சொன்ன ஆசனங்களைச் செய்து. உடலை வசப்படுத்திய பின்தான் செய்ய வரும். அதனால்தான் மயூராசனத்தை எடுத்ததும் புதிதாய்ப் பழகுகிறவர்கள் செய்யக்கூடாது என்று சொன்னேன்.

இதுவரை சொன்ன ஏழு ஆசனங்கள் ஆரம்பப்படிகளைப் போன்றவை. இனி வருபவைகளில் சர்வாங்காசனமும், சிரசாசனமும்தான் மிக முக்கியமானது. அவைகளைப்பற்றிப்போகப்போக எழுதுகிறேன். இந்த ஆசனங்களை யெல்லாம் முடித்து விட்டுக் கடைசியில் சாந்தி அல்லது சவாசனம் கட்டாயம் செய்யவேண்டும். இது வரைக்குமே பல அன்பர்கள் பல ஆசனங்களைச் செய்யத் தொடங்கி, அதில் கண்ட பல நன்மைகளைப் பற்றி எழுதுகின்றனர். ஆனால் ஆசனம் பழகும் அன்பர்கள் அவர்கள் ஓரிரு ஆசனங்கள் மட்டும் செய்தாலும்கூட சவாசனம் செய்யத்தான் வேண்டும். இதன் முழு விவரங்களை இப்பொழுது விவரிக்கப் போனால் பெருகிவிடும். ஆகையால் ஆரம்ப சாதகர்கள் முதலில், விரிப்பில் மல்லாந்து விரைப்பில்லாமல் படுத்துக்கொண்டு, கை, கால்களை சேர்த்து வைத்துக்கொண்டு கண்மூடி மனத்தினால் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். 'ஆரோக்கியம் கிட்டுவதாக' என்று மட்டும் ஐந்து நிமிஷங்கள் வரை ஜபித்துக் கொண்டு படுத்திருங்கள். அதுவே இப்பொழுது போதுமானது.



பாட்டி :—அந்தக் கம்பெனி முதலாளியிடம் போய் உன்னை எப்படியானும் வேலைக்கு எடுத்துக்கொள்ளச்சொல்லு. அப்படி வேலைக்கு எடுத்துக் கொள்ள அவருக்குச் சிரமமாக இருந்தால் 'ஸ்வீகார'மானும் எடுத்துக் கொள்ளுங்கோன்னு சொல்லு...

சிலருக்கு இரவு வேலை, சிலருக்கு மாலை வேலை. சிலருக்கு அதிகாலை வேலை. இப்படிப் பலவிதமாய் ஜீவனோபாயத்திற்காக வேலை செய்யவேண்டி யிருக்கிறது. அப்பேர்ப்பட்ட அன்பர்கள் எல்லோரும், 'எங்களால் தினமும் சரியானபடி ஆசனம் செய்ய முடிவதில்லை. அதிகாலை செய்தால் நல்லதென்று சொல்லுகிறீர்கள். ஆனால் அப்பொழுது வேலைக்குப் போக வேண்டியிருக்கிறதே? இரவில் கண் விழித்தால் காலையில் தூக்கம் வருகிறதே? ஆகையால் மாலையில் செய்யலாமா? மாறி மாறி வேலைக்குப் போகிறவர்கள் சமயம் கிடைக்கும் பொழுது செய்யலாமா?' என்று பல கேள்விகள் கேட்டிருக்கின்றனர்.

காலையில் செய்ய முடியாதவர்கள் மாலையில் செய்யலாம். மாலையில் செய்ய முடியாதவர்கள் காலையில் செய்யலாம். அப்படியும் செய்ய முடியவில்லையானால் ஒரு நாள் காலை, ஒரு நாள் மாலையும் செய்யலாம். விடியற்காலையிலிருந்து இரவு படுக்கும்வரை வேலையுள்ளோர் இன்னும் சற்று முன்னெழுந்து ஆசனங்களைப் போடலாம். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்றபடி நாம் ஆசனம் போட்டுவிட்டுத்தான் மறு காரியம் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டால், எப்படியும் தினம் ஒரு மணி நேரம் கிடைத்துவிடும். இதை நான் என் அனுபவத்திலிருந்தே சொல்லுகிறேன். எவ்வளவோ தாங்க முடியாத வேலைகளுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் என்னால் ஒரு மணி நேரம் ஆசனத்துக்கு என்று ஒதுக்கி விட முடிகிறது. ஆகையால் எப்படியும் ஆசனங்களைச் செய்தே தீருவது என்று சங்கல்பப்படுத்திக்கொண்டால் போதும். நேரம் தானே கிடைக்கும். ஆனால் ஆசனம் செய்வதற்கு முன் வயிறு காலியாய் இருக்கிறதா என்பதை மட்டும் முக்கியமாகக் கவனித்துக் கொண்டால் போதும். கடின ஆகாரமானால் சாப்பிட்ட ஆறு மணி நேரம் வரைப் பொறுத்தும், லேசான ஆகாரமானால் மூன்று மணி நேரங் கழித்தும் ஆசனங்களைச் செய்யலாம். (தொடரும்)

குக்குறுவான்

மா. கிருஷ்ணன்


பங்குனி மாதம் பிறக்க இன்னும் சில நாட்களிருக்கும்போதே இதை நான் எழுதுகிறேன். மாசியின் இராப்பனி ஒருவாறு படிந்து, இருள்காலையும் குளிரற்றிருக்கிறது. நாளுக்கு நாள் வளரும் சூட்டுடன் பகலெல்லாம் வெயில் காய்கிறது. வேனிற் காலம் இங்கு வந்துவிட்டது. இது நிஜமே. இனி இளவேனில் முதிர்ந்து முடியுமட்டும் குளிர்ந்த காற்றும் மப்பும் மந்தாரமான வானங்களும் திரும்பமாட்டா என்பதை எல்லோரும் அறிய தினமும் மத்தியான வெயிலில் குக்குறுவான் விடாது கூவுகிறது.

இந்தப் பறவையைத் தெரியாதவர் யாருமில்லை. ஒருகால் அதன் பெயர் தெரியாமலிருக்கலாம். அதைப் பார்த்தறியாமலுமிருக்கலாம். ஆனால் பிறவிச் செவிடர்களைத் தவிர எல்லோரும் அதன் குரலைக் கேட்டிருப்பார்கள். கோடை காலத்து இடை மத்தியான வெயில் தீயாக விழுகையில் எல்லாப் பிராணிகளும் வெப்பம் தாங்காது நிழலிலொளிந்து நிசப்தமாகவிருக்கும் போது, 'குக்...குக்...குக்...குக்!' என்று ஒரே குரலில் மாறாத லயத்துடன் ஓயாமல் ஒரு பறவை சப்திப்பதைக் கேட்கலாம். தூரத்தில், செம்புகொட்டித் தகடு தட்டும் ஓசையை இதற்கு உவமை கூறுவதுண்டு. இதுதான் குக்குறுவானின் குரல் —இதுபோல் 'குக்...குக்...' என்று கூவுவதால்தான் அதற்கு இந்தப் பெயர் வந்தது.

கோடையில் தமிழ்நாட்டில் எங்கும் குக்குறுவானைக் கேட்கலாம். அதுமட்டும் அது மௌனமாகவிருக்கும். உறுதியாக வெயில் காய ஆரம்பித்ததும் கூவத் தொடங்கும் — பிறகு முதிர்வேனில் ஓயுமட்டும் அதுவும் ஓயாது. சென்னையில் இப் பறவையைச் சகஜமாகக் கேட்கலாம். பல வருஷங்களாக உழைத்து நமக்குத் தமிழ்ப் பேரகராதி (Lexicon) உதவிய சென்னை சர்வகலாசாலைப் பண்டிதர்கள் கோடையில் தினமும் வெப்பத்தோடும் வார்த்தைகளோடும் போராடிப் பேரகராதி இயற்றுகையில், குக்குறுவானின் குரலைக் கேட்காதிருந்திருக்க முடியாது. அப்படியும் 'குக்குறுவான்' என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்டபடி அவர்கள் அகராதியில் பொருள் தந்திருக்கிறது.

"A Green screeching barbet கீச்சென்று ஒலிக்கின்ற பசு நிறமுள்ள பறவை விசேடம்." இதில் விசேடம் பறவையைப் பொறுத்ததில்லை — பொருள் விளக்கத்தைச் சேர்ந்ததே. குக்குறுவான் வம்சத்தைச் சார்ந்த மற்றொரு பறவையின் குரலையும் தமிழ் நாட்டில் கேட்கலாம். இது 'குக்' என்று சொல்லாது. 'குட்டுர்...குட்டுர்...குட்டுர்...' என்று சப்திக்கும். [இதற்குத் தமிழில் தனிப் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. இதைக் 'குட்டுருறுவான்' எனலாம்!] ஆனால் குக்குறுவானோ அதன் தாயாதிகளோ கீச்சென்று ஒலித்து எவரும் கேட்டதில்லை.

மேற்கண்டபடி குக்குறுவான், "பசுநிறமுள்ள பறவை" என்பது உண்மையே. ஆனால் மற்ற வர்ணங்களும் பல கொண்டது. குக்குறுவான் பருத்துத் தடித்தவோர் ஊர்க்குருவி யளவில், மேல்பாகம் பச்சையாகவும் அடிப்பக்கம் மஞ்சள் நிறமாகவும் நெற்றி, மார்பு, கால்கள் மூன்றும் குருதிச் சிவப்பாகவும், தடித்த அலகும், மீசையும் கருத்துமிருக்கும். இத்தனை வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டும், விடாமல் கூவும் சுபாவம் வாய்ந்தும், அப் பறவையைத் தேடியே காணலாம். கூவும்போது தலையை உதறியசைப்பதால் இது எந்த மரத்திலிருந்து கூவுகிறதென்று தெளிவாகத் தெரியாது; சமீபத்திலிருந்தும் சற்றுத் தள்ளியுள்ள மரத்திலிருந்து அதன் குரல் வருவதுபோல் தோன்றும். ஆல், கல்லால், அரசு முதலிய அத்திவகை மரங்களின் இலையடர்ந்த கொப்புகளிலும் அவற்றின் கனிகளிலும் குக்குறுவான் மிகப் பிரியமுள்ளது. தலைக்கு மேலுள்ள ஆலங்கிளையிலுள்ள குக்குறுவானும் இலேசில் தென்படாது. அதன் உருண்ட பச்சை நிற வுடல் இலைகளையும், நெற்றி மார்புச் சிவப்பு பழங்களையும் ஒத்திருக்கும். ஆயினும் உற்றுக் கேட்டு உற்றுப் பார்த்தால் குக்குறுவானை நேரில் கண்டு தெரிந்து கொள்ளலாம்.



இது ஏனிப்படி இடைமத்தியான வெய்யில் பாழ்போகாது வீணாக விடாமல் கூவுகிறது? காரணம் எனக்குத் தெரியாது — குக்குறுவானைக் கேட்டே அறிந்து கொள்ள வேண்டும். அதை விசாரித்தால் "இதிலென்ன ஆச்சரியம், உங்களுக்குள் சொன்னதையே சொல்லிச் சளைக்காது பேசிப் பொழுதை வீண்போக்குபவர் இல்லையா?" என்று அது மறுமொழி கூறலாம்.

விளக்கேற்றினார்

நா. ராமச்சந்திரன்

ஒரு பெரிய வீட்டு முதல் மாடியில் ஒரு சிறிய அறையைப் பதினைந்து ரூபாய் வாடகையில் ஏற்பாடு செய்து கொண்டிருந்தான் ரகுபதி. அந்த அறை அவனுக்குப் பிடித்திருந்தது. சுச்சிதமாக எல்லா வசதிகளும் அதில் அமைந்திருந்தன. தணிகாசலத்திற்குக் கூட அந்த வீடும் அதன் சூழ்நிலையும் ரொம்பவும் பிடித்திருந்தது.

தணிகாசலம்தான், அநாதை ரகுபதியைச் சிறு பையனாக இருந்தபோது, பள்ளிக்கூடச் சம்பளம் கட்டிப் படிக்க வைத்துப் பெரியவனாக்கி, ஒரு உத்தியோகமும் தேடிக் கொடுத்தவர். உத்தியோகம் ஏற்று, தன் காலிலேயே தான் நிற்கும் நிலைக்கு வந்த பிறகுதான், அவன் அவர் வீட்டை விட்டு 'ரூம்' பார்த்துக்கொண்டு வெளியே வந்தான். இவ்வளவு உபகாரம் பண்ணிய தணிகாசலத்திடம் அவனுக்கு ஒரு தனியான மதிப்பு இருந்தது இயற்கைதானே?

நாலைந்து மாதங்கள் சென்றன. ஒரு நாள் இரவு தணிகாசலம் ரகுபதியைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தார். ரகுபதிக்கு ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக அவர் அவனைத் தேடிக் கொண்டு வரும் வழக்கமில்லை.

"ரகுபதி, ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும். அதற்காகவே இங்கு அவசரமாக வந்தேன். வேறொன்றுமில்லை. இவ்வளவு தூரம் நீ முன்னுக்கு வந்தது மட்டும் போதாது. அது பூர்த்தி ஆவதற்கு ஒன்று பாக்கி யிருக்கிறது. நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தார்.

கல்யாணம் என்றவுடன் ரகுபதிக்குத் 'திக்'கென்றது.

தணிகாசலம் மீண்டும் பேச ஆரம்பித்தார். "ரகுபதி, நான் உனக்குச் செய்த உதவிக்கு ஏதாவது பிரதிப் பிரயோசனம் செய்ய நினைத்திருந்தால், நீ என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அவளுக்காக நிச்சயம் ஆகியிருந்த ஒரு இடம் தவறிவிட்டது. என் பெண்ணுக்கு வலது கால் சிறிது ஊனம் என்று அந்தப் பிள்ளை கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டான். 'அந்தத் தேதியிலேயே கல்யாணத்தை முடித்துக் காட்டுகிறேன், பார்' என்று அவர்களிடம் வீராப்புப் பேசி விட்டு வந்துவிட்டேன். நீ கட்டாயம் சம்மதம் தெரிவிக்கவேண்டும்" என்று உணர்ச்சி பொங்கப் பேசினார்.

ரகுபதிக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படிப் பதில் கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. தர்ம சங்கட நிலையில் அவன் அப்போது தவித்துக் கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்று தணிகாசலம் கேட்டவுடன்தான் அவனுக்குச் சுய உணர்வு வந்தது.

"ஸார்! என்னைத் தாங்கள் மன்னித்தே ஆகவேண்டும்! தங்களுக்குக் கடமைப் பட்டவனாகிய நான் இது விஷயத்தில் தங்கள் யோசனையை ஏற்க முடியாதவனாக இருக்கிறேன். அது என் துரதிர்ஷ்டம்தான். ஒரு வாரத்திற்கு முன் உங்களைக் கேட்காமல் ஒரு காரியம் செய்து விட்டேன். என் மாமா ஊரிலிருந்து இங்கு வந்திருந்தார். அவருடைய பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று மன்றாடினார். நான் உங்களைக் கேட்கவேண்டும் என்று சொன்னேன். அப்போது தாங்கள் ஊரில் இல்லாததால் உங்களைக் கண்டு பேச இயலாமல் போய்விட்டது. மேலும் தங்கள் பெண்ணை எனக்குத் தாங்கள் கொடுக்க முன் வரு......" ரகுபதி பேசி முடிக்கவில்லை.

அதற்குள் தணிகாசலத்தின் மீசை துடிதுடித்தது. தேகத்தில் பதட்டம் காணப்பட்டது. "ரகுபதி! பேஷ்! நான் செய்த உதவிக்கு நல்ல கைம்மாறு செய்தாய்! என் பெண் நொண்டி என்று தானே நீயும் கலியாணம் செய்துகொள்ள மறுக்கிறாய்? உன் வீட்டில் அதோ பிரகாசமாய் எரிந்து கொண்டிருக்கிறதே அந்த விளக்கை யார் ஏற்றினது என்று சிந்தித்துப் பார். அப்படிச் சிந்தித்தாயானால் இப்படிப் பேசியிருக்க மாட்டாய்" என்று ரௌத்திராகாரமாகக் கூறிவிட்டு வெளியேறினார்.

ரகுபதிக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. தேகம் முழுவதும் இரத்த ஓட்டமே நின்று விட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பேசாமல் அப்படியே படுக்கையில் சாய்ந்து விட்டான்.

அதற்குப் பிறகு இரண்டொரு தடவை அவர் வீட்டுக்குப் போனபோது ரகுபதியைப் பார்க்கத் தணிகாசலம் மறுத்து விட்டார். ரகுபதிக்கு நடந்த கல்யாணத்திற்குக் கூடத் தணிகாசலம் வரவேயில்லை. எவ்வளவு மன்றாடியும் வர

மறந்து விட்டார். அத்துடனில்லாமல் "ரகுபதியின் வீட்டில் விளக்கேற்றினேன்; இன்று அவன் இந்த நிலையில் இருப்பதற்கு நான்தான் காரணம். அதற்கு அவன் பிரதி உபகாரமாக என் பெண்ணை மணக்கச் சம்மதிக்கவில்லை" என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தார். இதை யெல்லாவற்றையும் கேட்ட ரகுபதியின் மனசு ரொம்பவும் கஷ்டப்பட்டது. தணிகாசலத்தின் மனசு குளிர நாம் நடந்துகொள்ள முடியவில்லையே என்று நெஞ்சம் ஏங்கிற்று.

2

தணிகாசலத்தின் பெண்ணை ரகுபதி கல்யாணம் செய்து கொள்ளாததினால் அவளுக்குக் கல்யாணம் நடக்காமல் போகவில்லை. தணிகாசலம் பிடிவாதமாக அதே தேதியில் அவள் கல்யாணத்தை நடத்திக் காட்டினார்.

குன்றுதோறும் ஆடும் முருகனது மலையடிவாரமொன்றில் கல்யாணம் நடக்க இருந்தது. எல்லாம் செவ்வையாக அமைந்த அந்தக் கல்யாணத்தில், முகூர்த்தம் நடத்தச் சரியான இடம் கிடைக்கவில்லை. கல்யாண காலமாதலால் நான் நீ என்று முந்திக்கொண்டு எல்லாச் சத்திரத்திற்கும் அச்சாரம் கொடுத்து விட்டார்கள். கடைசியில் ஒரு பழைய சத்திரந்தான் மிஞ்சிற்று. பாம்பும் தேளும் மலிந்த அந்தப் பாழடைந்த சத்திரத்தில் கல்யாணத்தை வைத்துக் கொள்ள வேண்டாம் என்று தணிகாசலத்திடம் சொல்லாதவர்கள் கிடையாது. இருந்தும் கல்யாணத்தை அதே தேதியில் நடத்தவேண்டும் என்ற ஒரே பிடிவாதத்தில் அந்தச் சத்திரத்தை ஐந்நூறு ரூபாய்வரை செலவு செய்து சில்லறை ரிப்பேர்கள் செய்து புதுப்பித்தார். தாற்காலிக 'பர்மிட்' வாங்கி மின்சார விளக்கு வசதிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டார்.

கல்யாண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ரகுபதி தனக்கு அழைப்பு வரும் என்று எதிர்பார்த்தது, கடைசியில் வீணாயிற்று. அவனைக் கல்யாணத்திற்குக் கூப்பிடவே இல்லை.

தணிகாசலம் கூப்பிடாமல் போனால் எனக்குப் போக உரிமை இல்லையா? என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டுமே!' என்று நினைத்து ரகுபதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

கல்யாண தினத்தன்று காலை கிளம்பினான் ரகுபதி. ரயில்வே ஸ்டேஷனை அடைந்து சத்திரத்தை விசாரித்துக் கொண்டு போவதற்குள் இருட்டிவிட்டது. கல்யாண வீட்டை அடைந்தவுடன், மணப் பெண்ணும் மணமகனும் ஜோடியாகப் பந்தலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தணிகாசலம் ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். புரோகிதர் 'மொய்ப்பணம்' ஓதிக்கொண்டு இருந்தார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டே ரகுபதி தம்பதிகளுக்கு அருகில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் போய் அமர்ந்து கொண்டான். ரகுபதியைக் கவனித்த தணிகாசலத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'இவனை யார் அழைத்தார்கள்? எதற்காக இவன் இங்கு வந்தான்?' என்று தமக்குள் முணு முணுத்துக் கொண்டார். அவன் முகத்தைப் பார்க்காமல் தம்முடைய முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

ரகுபதி இதையெல்லாம் ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லை. பேசாமல் தான் கொண்டுவந்த பையிலிருந்து ஒரு விலை உயர்ந்த புடவையையும், வேஷ்டியையும் எடுத்துப் புரோகிதர் கையில் கொடுத்து, தம்பதிகளுக்கு மந்திரபூர்வமாக அளிக்கச் சொன்னான்.

இந்தச் செய்கை தணிகாசலத்தின் ஆத்திரத்தை அதிகமாக மூட்டிற்று. ஏதோ சொல்ல அவர் வாயெடுத்தார். அதற்குள் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்குகள் அவ்வளவும் அணைந்து போயின. கொடிப் பொழுதில் எங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

அப்பொழுது யாரோ நிக்குச்சி ஒழிக்கும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து



பாட்டி :—ஏண்டா! சுந்து உன்னை வாத்தியார் முதுகிலே அடிச்சாராமே!

சுந்து :—அதென்னமோ பாட்டி! என் பின்னாலே நடந்த விஷயங்களை யெல்லாம் நான் கவனிப்பதில்லை.

தீக்குச்சியினின்றும் அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு வெளிச்சம் கிளம்பிற்று. அந்த வெளிச்சத்தில் அப்படிக் கிழித்தது யார் என்பது தெரிந்துவிட்டது.

ரகுபதிதான் மின்சார விளக்குகள் அணைந்தவுடன் தன் பையிலிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு தீக்குச்சியைக் கிழித்து எதிரிலிருந்த குத்து விளக்கை ஏற்றினன்! இவைகள் யாவும் இமைக்கும் நேரத்தில் தான் நடந்தன. அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ரகுபதி குத்து விளக்கை ஏற்றியவுடன் ஒரு காகப்பாம்பு துள்ளிக்கொண்டு மணமகன் துடையில் உராய்ந்து கொண்டு வெளியே ஓடிற்று. கல்யாணம் செய்துகொள்ளும் பையன் 'வீல்' என்று கத்திவிட்டான். அதற்குள் மின்சார விளக்குகள் மீண்டும் உயிர் பெற்றன. பிரகாசமாக எரிய ஆரம்பித்தன.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தணிகாசலத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்ததும், ரகுபதி தன்னிடத்தில் வைத்திருந்த தீப்பெட்டியின் உதவியால் அருகில் இருந்த குத்து விளக்கை ஏற்றினதும், அந்த வெளிச்சத்தைக் கண்டு வெகுண்டு, பயந்து ஓடிய சர்ப்பமும் அவர் கண்முன் சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தன. மனச்சாட்சி வேல்கொண்டு இதயத்தைக் குத்துவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"ரகுபதி, நீ இப்போது இங்கு வந்திராது போனால் என் மருமகனின் கதி என்னவாகியிருக்கும்? நீ குத்துவிளக்கை ஏற்றிய காரணத்தினால்தானே பாம்பு வெளிச்சத்தைக் கண்டவுடன் பயந்து ஓடிற்று? நான் அடிக்கடி சொல்லிக் காட்டியதைப் போல் உன் வீட்டில் நான் விளக்கேற்ற வில்லையப்பா! நீதான் என் குலவிளக்கை ஏற்றினாய். இந்தக் குத்து விளக்கை ஏற்றியதின் மூலமாக என் பெண்ணின் வாழ்க்கை ஒளியை ஏற்றி விட்டாய். ரகுபதி, உன்னிடம் நான் தகாத முறையில் நடந்து கொண்டேன். என்னை மன்னித்து விடு" என்று மன்றாடினார், தணிகாசலம். அவர் கண்களில் கண்ணீர் மடைதிறந்த ஆற்று வெள்ளம்போல் பெருகிற்று.

வெகு நாள் செய்யாமலிருந்தப் பிராயச்சித்தத்தைச் செய்து முடித்து விட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது ரகுபதிக்கு. அமைதி பரவிய தடாகத்தில் கல்லை எறிந்தவுடன் சுழல் சுழலாக அலைகள் கிளம்பி மீண்டும் அமைதி ஏற்படுவதைப்போல் சஞ்சலம் நிரம்பிய அவன் உள்ளத்தில் சாந்தி பரவிற்று.

மத்திய கேந்திரம்

ஜெயமணி

ஈரான்—3.

சுல்தான் அகமது மிர்ஸா பட்டத்துக்கு வந்தபின் மறுபடியும் மஜ்லிஸ் அதாவது ஈரான் பார்லிமெண்டு வேலை செய்யத் தொடங்கியது என்றாலும் நாட்டில் அமைதி ஏற்படவில்லை. கட்சிப் பிரதிகட்சிகள் உண்டாயின. உள் நாட்டுப் பிரச்னைகளினால் மக்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாயினர். அந்த நாட்டின் சாபக்கேடாக இருந்து வரும் அரசியல் கொலைகளும் ஆரம்பமாயின.

ஈரான் சர்க்கார் இலாகாக்களின் நிர்வாகம் எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. எனவே உள் நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமாயின் சர்க்கார் நிர்வாகம் சீர்திருத்தப்பட வேண்டும் என்று பிரமுகர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். அவ்விதச் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்களைத் தருவிப்பது அவசியமென்றும் முடிவாயிற்று.

அதற்கிணங்க, ஈரான் நிதி நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காக ஷுஸ்டர் என்ற அமெரிக்க நிபுணர் நியமிக்கப்பட்டார். போலீஸ் இலாகாவைச் சீர்திருத்த ஸ்விட்ஜர்லாந்திலிருந்து நிபுணர்களைத் தருவிப்பதென்று தீர்மானித்தனர்.

ஈரான் நிதி விவகாரங்களை ஒழுங்கு செய்வதற்காக அமெரிக்க நிபுணர் நியமிக்கப்பட்டது ருஷ்யாவில் மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது. எனவே அவரை உடனே உத்தியோகத்திலிருந்து 'டிஸ்மிஸ்' செய்துவிட வேண்டும் என்று ருஷ்ய சர்க்கார் ஈரான் சர்க்காருக்குக் கட்டளை பிறப்பித்தனர். ஆனால் ஈரான் பார்லிமெண்டு ருஷ்யாவின் கட்டளையை அங்கீகரிக்க மறுத்து விட்டது.

அவ்வளவுதான்! ஈரானைப் பணிய வைப்பதற்காக ஆயிரக் கணக்கான ருஷ்யத் துருப்புகள் அந்த நாட்டின்மீது படையெடுத்துத் தலைநகரான தெஹ்ரானுக்குள் பிரவேசிக்க முயற்சித்தன. அவைகளை எதிர்த்து நின்றால் தேச மக்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்ற உத்தேசத்துடன் மைனர் மன்னருடைய ரீஜண்ட் ஈரான் பார்லிமெண்டை உடனே கலைத்தார்; ருஷ்யாவின் கோரிக்கைகளை ஒத்துக் கொள்வதாகவும் அறிவித்தார்.

அதற்கிணங்க, நிபுணர் ஷுஸ்டர் வேலையிலிருந்து விலக்கப்பட்டார். ஈரானின் நிதி விவகாரங்கள் பின்னர் பெல்ஜிய சுங்க அதிகாரிகளின் உதவியினால் நடைபெறலாயின.

ஷுஸ்டர் தம்முடைய நேரடியான அநுபவங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய "பாரசிகத்தின் போராட்டம்" என்ற நூலில், ஈரான் ஜனங்களின் வாழ்க்கையை எவ்வளவு தூரம் ருஷ்ய — பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் நரக வேதனையாக்கி வருகின்றன என்பதை விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

* * *

முதலாவது மகாயுத்தம் ஏற்படுவதற்கு முன் பல்வேறு பிரச்னைகள் ஈரான் மக்களைக் கதிகலங்க வைத்தன. போட்டிக் கட்சிகள், உறுதியற்ற நிதி நிலைமை, அரசியல் குழப்பம், பொருளாதாரப் பஞ்சம், வெளிநாடுகளினால் ஆபத்து முதலிய பல பிரச்னைகளால் ஈரானியர்கள் திக்குமுக்காடிக் கொண்டிருந்தனர்.

மைனர் மன்னர் மேஜராவதும் மகாயுத்தம் ஆரம்பமாவதும் சரியாக இருந்தது. அந்த யுத்தத்தில் ஈரான் நடுநிலைமையே வகித்து வரும் என்று மன்னர் சுல்தான் அகமது ஷா பார்லிமெண்டில் அறிவித்தார். ஆனால் அதை வெளிநாடுகள் லட்சியம் செய்யவில்லை.

ஏற்கனவே ஈரான் தேசத்தின் ஒரு பகுதியில் ருஷ்யர்களின் செல்வாக்கும், மற்

தேசியப் புரட்சிக்கு இலக்கான தெஹ்ரான் நகரில் ஒரு பகுதி



றொரு பகுதியில் பிரிட்டிஷாரின் செல்வாக்கும் இருந்து வந்தது. மேற்படி வல்லரசுகளைச் சேர்ந்த துருப்புகள் ஈரானின் கேந்திரப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். ஈரான் எண்ணெய்ச் செல்வம் பிரிட்டிஷ் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்தது.

முதலாவது மகாயுத்தத்தில் கலந்து கொண்ட நாடுகள் ஈரானைச் சுற்றிலும் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன. இங்கிலாந்தும் ருஷ்யாவும் ஒரு கட்சியில் இருந்தன. துருக்கியோ ஜெர்மனியின் நேசதேசமாக இருந்தது. இன்றைய ஈராக், அரேபியா தேசங்கள் அப்போது துருக்கி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவையாக இருந்தன.



சுல்தான் அகமது ஷா

ஈரானிலும் அதை அடுத்துள்ள மெஸொபடேமியாவிலும் பிரிட்டிஷ், ருஷ்ய, துருக்கித் துருப்புகள் போரிட்டன. அதனால் ஈரானுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதத்தையும் பொருள் நஷ்டத்தையும் அளவிட முடியாது. அதாவது எந்தெந்த தேசமோ அடித்துக் கொண்டிருக்க, அந்த யுத்தத்தினால் நிரபராதியான ஈரான் அல்லல்பட்டு அவதியுற நேர்ந்தது பெரும் அநீதியல்லவா? அந்த அநீதி மேற்படி யுத்தத்துடன் நிற்கவில்லை. அது இன்று வரையில் நிழல்போல் ஈரான் தேசத்தைத் தொடர்ந்து வருவதுதான் மிகவும் வருந்தத் தக்கதாகும்.

ஈரானைச் சேர்ந்த அஸர்பைஜான் மாகாணத்தில் பிரிட்டிஷ் துருப்புகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கும் ஓர் ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் சர்க்கார் தயாரித்து அதை ஒத்துக் கொள்ளும்படி 1918-ம் வருஷத்தில் ஈரான் சர்க்காரை வற்புறுத்தினர். ஆனால் அதற்கு இணங்க ஈரான் சர்க்கார் கண்டிப்பாக மறுத்து விட்டார்கள்.

முதலாவது மகா யுத்தத்தில் பிரிட்டன் வெற்றி யடைந்ததால், பிரிட்டனின் கோரிக்கைக்கு இணங்க மறுத்து விட்ட ஈரான் மந்திரி சபையை சுல்தான் அகமது ஷா 'டிஸ்மிஸ்' செய்தார். பிரிட்டனின் கோரிக்கைக்கு இணங்கும் புதிய மந்திரி சபையை நியமித்தார். அவர் இவ்வாறெல்லாம் செய்தது பிரிட்டனிடம் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான்! அதன் பலனாக 1919-ல் ஆங்கிலோ-ஈரான் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஈரான் சர்க்கார் நிர்வாகத்தைச் சீர்திருத்துவதற்குப் பிரிட்டன் நிபுணர்களை அனுப்புவதுடன், இருபது லட்சம் பவுன் கடன் கொடுத்தும் உதவ வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்து ஆகும்.

மேற்படி ஒப்பந்தம் ஈரான் மக்களிடையே மிகுந்த மனக் கொதிப்பை உண்டாக்கியது. ஈரானைப் பிரிட்டன் அடிமைப் படுத்துவதற்கு அந்த ஒப்பந்தம் சிறந்த கருவியாகும் என்று பலரும் கருதினர். ஈரானைத் தங்களுடைய ஏக போக ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள பிரிட்டன் சூழ்ச்சி செய்வதாக அமெரிக்கா, பிரான்ஸ், ருஷ்யா முதலிய வெளி நாடுகளிலும் சந்தேகம் உண்டாயிற்று.

ஈரானைப் பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டு விடப் போகிறார்கள் என்றும் வதந்திகள் உலாவின. அந்த வதந்திகளை உறுதிப் படுத்துவது போல பிரிட்டிஷ் சர்க்காரும் காரியங்களைச் செய்து வந்தனர். எனவே, மேற்படி விஷயங்களெல்லாம் ஈரான் மக்களின் ஆத்திரத்தை நாளுக்கு நாள் தூண்டிக் கொண்டிருந்தது. இறுதியாக அதன் விளைவு என்ன?

சுல்தான் அகமது ஷா வெளிநாடுகளுக்கு யாத்திரை சென்று திரும்பியதும் மந்திரி சபை வீழ்ச்சியுற்றது. புதிய மந்திரி சபை பிரிட்டன்—ஈரான் ஒப்பந்தத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டதால் ஷாவின் பாடு திண்டாட்டமாகியது. யாரைத் திருப்தி செய்வது என்று தெரியாமல் அவர் விழித்தார்.

ஈரானில் அவ்வாறு நாளுக்கு நாள் கொந்தளிப்பு அதிகமாகி வருகையில், ஈரானை அடுத்துத் திடீரென்று பயங்கரமான அரசியல் பூகம்பம் ஏற்பட்டது. அந்தப் பூகம்பம் உலகம் முழுவதையும் அதிர்ச்சியுறும்படி செய்தது.

அதாவது ஜார் சக்கரவர்த்தியையும் அவரது சர்க்காரையும் ருஷ்ய மக்கள் வீழ்த்தினர். பிறகு ஆயிரக்கணக்கான ருஷ்யப் புரட்சித் துருப்புகள் ஈரான்மீதும் படையெடுக்கலாயின. அந்தத் துருப்புகளால் தெஹ்ரான் நகருக்கு ஆபத்து ஏற்படும் போலிருந்தது. அந் நிலையில் ஈரானின் அதிர்ஷ்டவசமாகத் திடீரென்று போல்ஷிவிக் ருஷ்யாவின் கொள்கையில் எதிர்பாராத மாறுதல் ஏற்பட்டது.

புது வாழ்க்கை

பானு

தன் தாயாருக்கு எழுதியிருந்த அந்தக் கடிதத்தைத் தபால் பெட்டியில் போடு முன்பு கடைசியாக ஒரு முறை படித்துப் பார்த்தான் நாராயணன். அதில் இதைத்தான் எழுதியிருந்தான் அவன் :

“அம்மாவுக்கு நமஸ்காரம். தயவு செய்து இந்தக் கலியாண விஷயத்தில் என்னை அடிக்கடி தொந்தரவு செய்யாதே. என் பிடிவாதம் உனக்கு வருத்தத்தை உண்டுபண்ணும் என்று நான் உணர்ந்தாலும். எனக்காகத் தோன்றுகிறவரை நான் விவாகமே செய்து கொள்ளப் போவதில்லை. ஏற்கெனவே கலியாணமாகி, குழந்தை குட்டிகளோடு விளங்குகிற என்னுடைய சகோதரர்கள் இருக்கும்போது, நான் மாத்திரம் பிரும்மச்சாரியாகவே இருந்தால் குடியா முழுகிவிடும்?

உன் பிரியமுள்ள

நாராயணன்.

ஹாஸ்யமும், கண்டிப்பும் கலந்திருப்பதாக அவன் நினைத்த இக் கடிதத்தின் வாக்கியங்கள் அவனுக்கு மனப் பாடமாகி யிருந்தன. விவாகத்தின் அவசியத்தை அவன் தாய் வற்புறுத்தும் சமயங்களிலெல்லாம், — கார்ப்பரேஷன் டாக்டர் எல்லா வியாதிகளுக்கும் கொடுக்கிற ஒரே மருந்துத் தண்ணீரைப் போல— இதையே திருப்பித் திருப்பி எழுதிவிடுவான் நாராயணன்.

கடிதத்தைத் தபால் பெட்டியில் சேர்த்த பிறகு அவன் மவுண்ட் ரோடு பஸ் நிற்குமிடத்தை நோக்கி நடந்தான். அவன் மனத்தை ஏதோ ஒரு உணர்ச்சி அழுத்திக் கொண்டிருந்தது. நகரத்தின் பேரிரைச்சல் கூட அவனுக்கு வேதனை கலந்த வெறுப்பை உண்டு பண்ணியது. நான்கு வருடங்களுக்கு முன்பு. கூடச் சென்னையில் இவ்வளவு 'நெருக்கடி' இருந்ததாகத் தோன்றவில்லை நாராயணனுக்கு. பூனாவிலிருந்து மீண்டும் அவன் இங்கே வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன. இடையேயுள்ள வருஷங்களில் நகரம் பிரமிக்கத் தக்க மாறுதல்களை அடைந்திருப்பதாக அவன் எண்ணினான். பஸ் கிடைப்பதற்கு நீண்ட நேரம் ஆகும் போல இருந்தது. பஸ் ஸ்டாப்பில் அவ்வளவு கூட்டம். அங்கு நின்று பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த சற்று நேரத்தில் ஒரு பெரிய ஆச்சரியம் ஏற்பட்டது அவனுக்கு. அதுவும் இரண்டு வினாடிகளில் — மின்னல் தோன்றி மறைவது போல்—அந்தக் காட்சியும் மறைந்தது.

'விர்'ரென்று வழுக்கிச் சென்ற அந்த 'ப்ளைமத்தில்' அவள்தான் இருந்தாள் என்பதை அவன் உள்ளம் ஊர்ஜிதம் செய்தது. அவள் ஒருத்திக்குத்தான் அந்த அழகிய முகம் உண்டு என்பது நாராயணனின் தீர்ப்பு. அவள் இங்கு எப்படி வந்தாள்! ஏன் வரக்கூடாது! நான் மீண்டும் இங்கு வரவில்லையா!

கேள்விகளும், எதிர்க் கேள்விகளும் அவன் மனக்குளத்தில் அலையடித்துச் சிதறின. அவனுடைய மானஸிகப் பிணைப்பின் அவஸ்தையினால் தானே நாராயணனுக்கு விவாகத்திலேயே சிறிதும் சிரத்தை ஏற்படாமலிருக்கிறது! அவன் மனம் கிளுகிளுத்தது. ஐந்து வருடங்களுக்கு முந்திய அந்த இன்ப நினைவுகளில் அவன் ஆழ்ந்து போனான்!

*

நாராயணன் அப்போதுதான் முதன் முதலில் ஆவடியிலுள்ள மிலிடரி அக்கௌண்ட்ஸ் காரியாலயத்தில் உத்தியோகம் மேற்கொண்டிருந்தான். அவன் எப்போதுமே அதிர்ஷ்டசாலி. திருச்சி கலாசாலையில் 'பி. எஸ். ஸியை' முடித்துக் கொண்டு வெளியேறியதுமே, உத்தியோகம் அவனுக்கென்றே காத்திருந்தது போல மிகவும் சுலபமான வகையில் சிரமமில்லாமல் கிடைத்து விட்டது.

நான்கு சகோதரர்களுடனும், இரண்டு சகோதரிகளுடனும் பிறந்த குடும்பத்தில் அவன்தான் கடைக்குட்டி; செல்லப்பிள்ளை. அவன் தகப்பனாருக்குத் திருச்சி ரயில்வே ஆடிட்டில் 'ஹெட் கிளார்க்' உத்தியோகம்.

'ஆவடி' ஆபீஸ் வாழ்க்கை அவனுக்குச் சற்று சிரமமாகவே இருந்தது. தினந்தோறும் சென்னையிலிருந்து கிளம்பி ஆவடிக்குச் சென்று விட்டு வருவது அலுப்பாகத்தான் இருந்தது அவனுக்கு. தங்க வசதியில்லாத இடத்தில் உத்தியோகம் கிடைத்தால் என்னதான் செய்வது!

நடுவில் ஒரு தடவை அவன் திருச்சி சென்று பெற்றோர்களைப் பார்த்த போது அவன் அம்மாவுக்கு அழுகையே வந்துவிட்டது. “குழந்தை துரும்பாய் இளைத்து விட்டானே, பார்த்தீர்களா!” என்று கணவனைப் பல தடவைகள் நச்சரித்துவிட்டாள். மேற்கொண்டு நாராயணன் சென்னை ஹோட்டல்களில் சாப்பிடுவது விபரீத பலன்களை உண்டாக்கிக் குடும்பத்திற்கே மாபெரும் கஷ்டத்தை ஏற்படுத்திவிடப் போகிறதே என்ற பயத்தில் அவன் தாயார் உடனடியாக ஜாகை வைக்கச் சொன்னாள். நாராயணனும் வீட்டு வேட்டையில் வெற்றி கண்டு வில்லிவாக்கத்தில் அழகிய சிறு பங்களா ஒன்றின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்து அம்மாவையும் அழைத்து வந்தான்.

அந்த இடம் அவனுக்கு மிகவும் வசதியாக இருந்தது. 'ஸ்வர்க்கம்' என்று அழகாகப் பெயரிடப்பட்ட அந்த பங்களாவின் சொந்தக்காரர் விஜயராகவனும் கண்யமான மனிதரே. அவருக்கு உத்தியோகம் என்று ஒன்றும் கிடையாது. கையில் பணம் இருந்தது. வசதியான வாழ்க்கை. அவர் இரண்டாந்தாரக்காரர். இளைய மனைவி மூலம் மூன்று சிறிய பையன்களும், மூத்த தாரத்தின் மூலம் இரண்டு பெண்களும்தான் அவருடைய சந்ததிகள். மூத்த பெண் மைதிலி சென்னையில் 'இண்டர்' படித்துக் கொண்டிருந்தாள். மற்றொரு பெண் சிறியவள்; தன் பாட்டியிடம் இருந்தாள் அவள்.

நாராயணன் பரம ரஸிகன். நல்ல அழகனும் கூட. அவன் குடும்பத்திலேயே யாரும் சோடை



இல்லை. ஆயினும் மகா சங்கோசி. சகோதரி, தாயார் இவர்களைத் தவிர வேறு பிற ஸ்திரீகளிடம் அவன் பழகி யறியான். காலேஜில் படிக்கும் போது கூட அவன் கட்டுப்பெட்டிதான். நாராயணனின் தாயார் அம்புஜம்மாள் கூட அவனுடைய கூச்சத்தைக் கண்டு பெருமையுடன் பரிகாசம் செய்வாள். இந்த நிலையில் காலேஜ் மாணவி ஒருத்தி இருக்கும் வீட்டிலேயே காலந்தள்ளுவது என்றால்......!

சுழித்து வரும் புதுப் புனலைப் போல, இளமை வெள்ளம் பாய்ந்தோடிய மைதிலியின் சௌந்தரியம் நாராயணனின் மனத்தில் இனம் தெரியாத ஒரு உணர்ச்சியை உண்டாக்கியது. கடலினும் பெரிய அவளுடைய விழிகளை அவன் கண்கள் சில சமயம் சந்திக்கும்போது அவன் திணறிப் போனான். அவளுடைய குரலைக் கேட்கும் போதெல்லாம் வீணையை மீட்டும்போது உண்டாகும் ஜீவஸ்வரங்களின் ஒலிதான் அவன் ஞாபகத்திற்கு வரும்.

ஒரு நாள் நாராயணன் காரியாலயத்திலிருந்து வந்ததும் விஜயராகவனுடன் லோகாபிராமமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அவனிடம் பேசிக் கொண்டிருப்பதில் அவருக்கும் ஒரு இன்பம். மைதிலிக்குப் பரீட்சை சமயம் அது. இங்கிலீஷ் பாடமொன்றில் ஏதோ சந்தேகம் வந்ததால் தகப்பனாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள மாடிக்கு வந்தாள். அவருக்கு அந்தப் பாடத்தைச் சரியாக விளக்கத் தெரியவில்லை. நாராயணன் பக்கம் திரும்பிச் சொன்னார். "இதெல்லாம் எங்கே ஸார் எனக்குப் புரிகிறது! அந்தக் காலத்திலே, நான் ஹைஸ்கூலில் படிக்கிற காலத்திலே......"

"இப்படிக் கொடுங்கோ; நான் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தக் கவிதையைப் படித்தான். அவனுக்கு நன்கு பரிச்சயமான கவிதை அது.

"ஜிஹாங்கீரின் யௌவன காலம். கட்டுக் கடங்காத வாலிபப் பருவத்தில் பேரழகி மெஹருன்னிஸாவை அவன் சந்திக்கும் கட்டம் பற்றிய கவிதை அது. மெஹருன்னிஸாவினுடைய புறா ஜிஹாங்கீரிடம் சிக்கிக் கொள்கிறது. அதைக் கேட்க அவள் வரும்போது அவன் உள்ளமும் அகப்பட்டுக் கொண்ட அந்தப் புறாவைப் போலவே துடிக்கிறது. இதை வெகு அழகாகக் கவிதையாக இயற்றியிருந்தான் கவி.

மைதிலியை ஏறெடுத்துப் பார்க்காமலேயே அதற்கு வியாக்கியானம் கூறினான் அவன். ஆங்கிலத்தில் அவனுக்கிருந்த பாண்டித்யம் தகப்பனார், பெண் இருவருக்குமே ஆச்சரியத்தை அளித்தது. காரியம் முடிந்ததும் — புறாவை மெஹருன்னிஸா கைகளில் ஜிஹாங்கீர் கொடுத்தது போலவே—நாராயணனும் புஸ்தகத்தை மைதிலியின் மலர்க் கரங்களில் அளித்தான்.

இந்தச் சம்பவம் அவர்கள் நேரிடையாகப் பேசிக்கொள்ளக் காரணமாயிற்று. பிறகு அடிக்கடி அவளுக்குப் பாடங்களில் சந்தேகங்கள் உண்டாயின. விஜயராகவன் தம் பெண் நாராயணனிடம் 'கலகல'ப்பாக இருப்பதைத் தடுக்கவில்லை.

நாராயணன் புது மனிதனாகிக் கொண்டிருந்தான். மைதிலியை அவன் வேடிக்கையாக 'மெஹருன்னிஸா' என்றே பரிகாசம் செய்ய ஆரம்பித்தான். விகல்பமின்றி அவளுடன் பழகப் பழக அவன் அவளைக் காதலிப்பதாக உணரத் தலைப்பட்டான்.

அந்த வருஷம் மைதிலி 'இண்டரின்' முதல் வருஷப் படிப்பை நாராயணனின் உதவி கொண்டுதான் சுலபமாகப் பாஸ் செய்தாள்.

அந்த வருஷமே விஜயராகவன் மைதிலிக்குக் கலியாணம் செய்ய வேண்டும் என்று நினைத்தார். நாராயணன் பேரிலும் அவருக்கு ஒரு 'கண்' இருந்தது. ஜாதகங்கள் பொருத்தமாய் இருந்தால் இருவருக்கும் 'முடிச்சுப் போட்டு விடலாம்' என்று நினைத்து, அம்புஜம்மாளிடம் அவன் ஜாதகத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டார், ஜாதகங்களும் பொருத்தமாகவே இருந்தன.

அம்புஜம்மாளுக்கும் இந்தச் சம்பந்தத்தில் ஆர்வமிருந்தது. 'தாயில்லாப் பெண்; லட்சணமானவள்' என்ற இரு காரணங்களும், நாராயணனுக்கும் இதில் பரிபூரண சம்மதம் இருக்கும் என்ற நினைவும் அவளை மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளச் செய்தது.

அன்றைய தினம் டவுனுக்குச் சினிமா பார்க்கச் சென்றிருந்த நாராயணன், 'மாட்னி ஷோ' முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பினான்.

ஷர் என்று காலேஜிலிருந்து வரும் மைதிலியை அவன் வழியில் சந்தித்தான். 'சேர்ந்தே போகலாமே' என்ற எண்ணத்தில் இருவரும் நிதானமாக அரட்டை யடித்துக்கொண்டு வீடு திரும்பினார்கள். விஜயராகவனுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் இந்த 'ஜோடி' உல்லாசமாகத் திரிவதைப் பார்த்து விட்டிருந்தார். அவருடைய பிள்ளைக்கு எப்படியாவது மைதிலியை முடித்து விட வேண்டும் என்று நினைத்திருந்தவர் அவர். தன் பிள்ளைக்குக் கொடுக்காமல், வேறு இடத்தில் சம்பந்தம் செய்வதைக் கண்டு அவர் மனம் பொருமினார். அந்த ஆத்திரத்தில் அவர் விஜயராகவனிடம் அபாண்டமான பழி ஒன்றைக் கிளப்பி விட்டார்.

"என்ன விஜயராகவா! பெண்ணுக்கு ரொம்பவும் செல்லம் கொடுப்பது ஆபத்துதான். நம்ம குலத்திலேயே இல்லாத வழக்கமாக இருக்கே. உனக்கு மாப்பிள்ளையாக வரப் போகிறான் என்பதற்காக முன் கூட்டியே அவளை இழுத்துக் கொண்டு ஊர் சுற்றுவது உனக்கு நியாயமாகத் தோன்றுகிறதா, என்ன? சரியாக விசாரிக்காமல் வேறு இடத்திலேதான் சம்பந்தம் பண்ணுகிறாய் என்றால் இப்படி மானம் போகிற காரியத்துக்கு வேறு உடந்தையாக இருக்கிறாயே!" என்றார்.

விஜயராகவனுக்கு என்னமோ போல இருந்தது. தன் பெண் ரொம்பவும் அதிகப் பிரசங்கித்தனமாக நடந்துகொண்டு அவருக்கு அவமானத்தை உண்டாக்கி விட்டதாகவே அவர் நினைத்தார். போதாக் குறைக்கு அவர் மனைவி வேறு தூபம் போட ஆரம்பித்தாள்.

அவளுக்கு மைதிலியை நாராயணனுக்குக் கொடுப்பதில் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. ஒன்றுக்கும் உதவாத தம்பி ஒருவன் அவளுக்கு உண்டு. அவனுக்கு மைதிலியைக் கொடுக்க முன்வரவில்லையே தன் கணவர் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்கான திட்டங்களையும் வகுத்திருந்தாள். சமயம் அதற்கு ஒத்தாசை செய்தது.

இதன் பலன்......

விஜயராகவனுக்கு ஒருநாள் மொட்டைக் கடிதம் வந்தது. நாராயணனுடைய குடும்பம் அவ்வளவு நல்லதல்ல வென்றும், அவன் தகப்பனுக்கு ஒரு தங்கை சிறு வயதிலேயே யாருடனோ ஓடிப் போய்விட்டதாகவும் அந்தக் கடிதம் சொல்லியது.

விஜயராகவனுக்கு இடி விழுந்தாற்போல இருந்தது. தீர விசாரிக்காமலேயே அவர் இந்த சம்பந்தத்தை முறித்துக்கொள்ளத் தீர்மானம் செய்து கொண்டார். நாராயணனிடம் அவர் வைத்திருந்த 'மதிப்பு' அடியோடு மாறியது. தன் பெண்ணின் வாழ்க்கையையே கெடுக்கத் துணிந்த மகாபாபி என்றெல்லாம் நினைக்கத் தலைப்பட்டார்.



கலியாணப் பேச்சு முறிந்து மனஸ்தாபம்தான் மிஞ்சியது. மைதிலி கண் கலங்கினாள்.

அம்புஜம்மாளுக்கு 'போதும்' என்றாகிவிட்டது. இந்தச் சமயத்தில்தான் நாராயணனுக்கும் தலைமைக் காரியாலயமான பூனாவுக்கு மாற்றல் உத்தரவு வந்தது. ஜாகையைக் கலைத்து விட்டு அவன் பூனா சென்று விட்டான்.

வாழ்க்கையில் ஏமாற்றத்தையே கண்டிராத நாராயணனுக்கு இந்த 'முறிவு' மிகவும் அதிர்ச்சியைக் கொடுத்தது. மைதிலியை அவன் மறக்கவே முடியவில்லை. அதற்குப் பிறகு 'கல்யாணம்' என்ற பேச்சை எடுத்தாலே அதை வெறுக்க ஆரம்பித்தான் அவன்.

★

நாராயணனுடைய சிந்தனைச் சங்கிலி அறுந்தது. ஸெண்ட்ரலுக்குப் போகும் பஸ் ஒன்றில் தாவினான் அவன். அவனுக்குப் படபடப்பு இன்னமும் அடங்கவில்லை. மைதிலியை மறுபடி ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒருகணம் பார்க்க நேர்ந்ததில் ஏதோ ஒரு விசேஷம் இருக்கத்தான் வேண்டும் என்று அவனுடைய உள்ளுணர்வு கூறியது.

இந்த ஐந்து வருஷங்களில் மைதிலியினுடைய வாழ்க்கையிலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. விஜயராகவன் கடைசியில் மைதிலியை டில்லியிலுள்ள—ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு இரண்டாம் தாரமாகவே கொடுத்தார். அவளுடைய விவாகப் பிராப்தம் அப்படித்தான் இருந்தது. விஜயராகவன் தன்னுடைய இளைய மனைவி, குழந்தைகளை அவள் பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டு டில்லியில் அவர் பெண்ணிடமே வசிக்கத் தலைப்பட்டார்.

மைதிலிக்குக் கலியாணமாகி விட்டது என்பதும் நாராயணனுக்குத் தெரியும். விவரங்கள் பூனாவிலுள்ள ஒரு நண்பன்—மைதிலிக்கு ஏதோ தூரத்து உறவு அவன்—நாராயணனுக்குத் தெரியப்படுத்தினான். அவளுக்கு இல்லறத்தில் சுகமே இருக்காது; தன்னுடைய நினைவில் வாழ்க்கையே கசந்து போயிருக்கும் என்ற நினைப்பில் காலத்தைக் கடத்தி வந்தான் அவன்.

ஸெண்ட்ரலில் இறங்கி ஸ்டேஷனிலுள்ள ஹிக்கின்பாதம்ஸ் புஸ்தகசாலையில் ஏதாவது புஸ்தகங்கள் வாங்கிச் செல்லலாம் என்ற எண்ணத்தோடு, அவன் ஸ்டேஷனில் நுழைந்தான். அப்போது யாரோ 'மிஸ்டர் நாராயணன்' என்று கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பினான்.

'ஷாக்' அடித்தாற்போலவே இருந்தது அவனுக்கு. ஆம்; மைதிலிதான் சர்வாலங்கார

பூஷிதையாக நின்று கொண்டிருந்தாள். நாராயணன் இருதயம் 'பட்பட்' என்று அடித்துக்கொண்டது. அருகில் நெருங்கியதும், இருவரும் குசலப்பிரச்னம் செய்து கொண்டனர். பேச்சின் இடையில் தன் கணவனுக்குப் பெங்களூருக்கு மாற்றலாகி விட்டதாகவும் அங்கேதான் இப்பொழுது புறப்பட்டுப் போவதாகவும் கூறினாள்.

நாராயணனுக்கு அவளுடைய பேச்சும் தோரணையும் ஆச்சரியத்தை உண்டு பண்ணின. சோகமே உருவெடுத்து வேதனைப்படுவாள் என்று அவன் கற்பனை செய்த மைதிலி எங்கே, இவள் எங்கே!

தாம்பத்யம் அவளுக்கு ஒரு குறைவையும் ஏற்படுத்தவில்லை என்பது நிதரிசனமாகத் தெரிந்தது. அவள் பூரிப்பும், அழகும் கொண்டே விளங்கினாள். அவள் கேட்டாள்: ''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்......!''

நாராயணனுக்கு வெட்கமாகக்கூட இருந்தது. அவனுக்குக் கலியாணமே ஆகவில்லை என்பதை அவள் அறிந்து கொண்டிருக்கவில்லை!

''நான் இன்னமும்......'' என்று இழுத்தான். மைதிலியின் முகபாவம் மாறியது.

''நான் கூட நினைத்தேன்......அப்படி ஏதாவது இருக்குமோ என்று......நல்ல வேளை; நானும் அப்பாவும் உங்கள் விலாசத்தைத் தான் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கிறோம். அப்பாவுக்கு இப்போது உங்கள்பேரில் இருந்த பழைய ஆத்திரம் எல்லாம் போய் விட்டது. உங்களைத் தம் மாப்பிள்ளையாக ஆக்கிக் கொள்ளவில்லையே என்று ஏக்கம்கூட. நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பது தெரிந்திருந்தால் என் கணவராவது, அப்பாவாவது எழுதியிருப்பார்கள். உங்கள் பெற்றோர் கூட திருச்சியில் இல்லையாமே இப்போது!'' என்றாள் மைதிலி.


''ஆமாம்; அப்பா ரிடையராகித் குடும்பத்தோடு கிராமத்திற்குச் சென்று விட்டார்.''

''உங்களைப் பார்த்தது ரொம்ப நல்லதாகி விட்டது. உங்களுக்கு 'மேஹருன்னிஸா'வை அறிமுகப் படுத்தி வைக்கவேண்டாமா!''

நாராயணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் யாரைக் குறிப்பிடுகிறாள்! அவனுடைய 'மேஹருன்னிஸா' தான் வேறு ஒருவருக்குச் சொந்தமாகி விட்டாளே!

எனினும் ''மேஹருன்னிஸாவா! அதுதான்...நீ...'' என்று இழுத்தான் அவன்.

''மிஸ்டர் நாராயணன், உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். குழந்தைக்குத் தகுந்தவாறு உண்டாகும் பருவகால உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, பிடிபடாத லட்சியங்களை வைத்துக் கொண்டு அவஸ்தையே படக்கூடாது. வாழ்க்கைப் புதிருக்கு விடையே கல்யாணத்திற்குப் பிறகுதான்



கிடைக்கிறது. அதற்கு முன்னர் ஏற்படும் உணர்ச்சிகள் எல்லாமே பொய்யானவை. நான்கூட உங்களைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் வாழ்க்கையே சூன்யமாகி விடும் என்று ஒரு காலத்தில் நினைத்தேன்.''

நாராயணனுக்கு ஒரு புறம் கோபம் வந்தது. ஆனால் அவள் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகத் தோன்றியது. இத்தனை வருஷங்களுக்குப் பிறகு 'அவள்' சொல்லித் தான் இந்த ஞானோதயம் உண்டாயிற்று. மைதிலியே சொன்னாள்:

''ஸெகண்ட் கிளாஸ் புக்கிங் ஆபீஸிற்கு உங்களுடைய 'மேஹருன்னிஸா' சென்றிருக்கிறாள். வந்ததும் அறிமுகப்படுத்துகிறேன். எனக்காக நீங்கள் அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லிக் 'கலகல' வென்று சிரித்தாள் மைதிலி.

அவனுக்கு ஒன்றுமே புரியாமல் குழப்பமாக இருந்தது. சில நிமிஷங்களில் மைதிலியை நோக்கி ஒய்யாரமாக ஒரு பெண் வந்து சேர்ந்தாள். நாராயணனை அவளுக்குத் தெரியவில்லை.

''நாராயணன்! இவள் தான் என் தங்கை குமுதா!—உங்கள் 'மேஹருன்னிஸா'! நான் கூட இவளை அப்படித்தான் கூப்பிடுகிறேன். உங்கள் ஜாதகமும் இவள் ஜாதகமும் கனகச்சிதமாகப் பொருந்தியிருப்பதாக அப்பா வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்'' என்றாள் மைதிலி.


பின்னர் தன் தங்கைப் பக்கம் திரும்பி, 'குமுதா! நாம் அடிக்கடி பேசிக் கொண்டிருப்போமே நாராயணன் என்று. அவர் தான் இவர்; உன்னுடைய......'' என்றாள்.

நாராயணனுக்கு எல்லாம் விளங்கியது. விஜயராகவனின் இளைய பெண் அவள் தான். தத்ரூபமாக மைதிலி மாதிரியே இருந்தாள். அவள் பாட்டியினிடம் படித்துக் கொண்டிருந்ததால் அவன் அவளைப் பார்த்ததே இல்லை.

இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு ஸெண்டிரல் ஸ்டேஷனை விட்டு வெளியேறிய போது நாராயணன் மனத்தில் உற்சாகம் துள்ளி விளையாடியது. அவன் உள்ளத்தில் பரிணமித்திருக்கும் சூன்யத்தை ஒரு பெண்தான் — குமுதாவைப் போன்ற ஒரு பெண்தான் — நிரப்ப முடியும் என்பதை எண்ணியபோது அவன் புளகாங்கிதமடைந்தான்.

அடுத்த கணமே அவன் தன் புது வாழ்க்கையைத் தொடங்குவதற்கு வேண்டிய திட்டங்களைப் பற்றி மனக் கோட்டை கட்டத் தொடங்கி விட்டான். தன் தாயாருடைய வேண்டுகோளையும் அவ்வளவு சீக்கிரம் நிறைவேற்றி வைக்கக் கூடும் என்பது கூட அவன் எதிர்பார்க்காததுதானே!

ஸெண்டிரல் ஸ்டேஷன் கடிகாரம் பலவித ஸ்வரங்களில் மங்களகரமாக மணியடித்து முழங்கியது.



போலீஸ் விளையாட்டு

சாமா



குண்டுமணி:—என்னை இன்ஸ்பெக்டராகப் போட்டதற்கு ரொம்ப 'தாங்ஸ்!' திருடனைக் கண்டு பிடிக்கிறேன்! நம்முடைய முதல் கேஸ் என்ன?

கான்ஸ்டபிள்கள்:— சங்கீதக் கேஸ் ஒன்று வந்திருக்கிறது.

பட்டு:—நான் ஒரு சங்கீத ரஸிகன். ஒரு பாட்டுக் கச்சேரிக்குப் போயிருந்தேன்... கச்சேரியில் பாகவதர் ஒரு ராகம் பாடினார். யாராலேயும் அது என்ன ராகம் என்று கண்டு பிடிக்க முடியவில்லை......!

இன்ஸ்:—பேஷ்! நல்ல கேஸ் ஐயா இது! சரி, வித்வானைக் கூப்பிட்டு ராகத்தைப் பாடச் சொல்லும், கண்டு பிடிப்போம்.

சங்கர்:—த த ரி ன ன...ஆ......

இன்ஸ்பெக்டர்:—இது என்ன சங்கடமான ராகமா இருக்கிறது? ஒரு வேளை சங்கடமர்த்தனியோ?

சங்கர்:—சபாஷ்! அதேதான்!

இன்ஸ்பெக்டர்:— யாருக்கும் புரியாமல் நீங்கள் ராகம் பாடிச் சங்கடப் படுத்தியதற்கு உங்களைக் கைதிகளுக்குச் சங்கீதம் போதிக்கும்படி ஜெயிலில் போடத் தீர்மானித்திருக்கிறோம். சரி. அடுத்த கேஸ், பக்காத் திருடனைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ரூபாய் மூவாயிரம் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்தோமே, அது என்ன ஆயிற்று?

கான்ஸ்டபிள்:— திருடன் எங்களைக் கண்டு பிடிக்க விடவில்லை.

இன்ஸ்பெக்டர்:— ஏன்?

கான்ஸ்:—அவனே இங்கு வந்து விட்டான்.

இன்ஸ்:—யாரப்பா நீ?

திருடன் (பட்டு):—நான்தான் அந்தத் திருடன். என்னை நானே கண்டு பிடித்து விட்டேன். அதனால் ரூபாய் மூவாயிரம் எனக்குச் சேர வேண்டும்.

இன்ஸ்:—இதில் சூதிருக்கிறது; உண்மையைச் சொல்!

திருடன்:— உண்மையில் நான் திருடன் அல்ல. ஒரு வீட்டுக்குக் குடிபோகப் பார்த்தேன். அந்த வீட்டுக்காரர் ரூபாய் மூவாயிரம் அட்வான்சாகக் கேட்டார். உங்கள் விளம்பரப்படி திருடனைக் கண்டு பிடித்து மூவாயிரத்தைப் பெற்றுக் கொண்டு அட்வான்ஸைக் கொடுக்க யத்தனித்தேன். முடியாமல் போனதால் என்னையே திருடனாகபாவித்து ரூபாய் மூவாயிரம் உங்களிடம் பெறலாம் என்றுதான் வந்தேன்.

இன்ஸ்:— பேஷ்! உங்கள் மூளையை மியூஸியத்தில்தான்......

திருடன்:—பேஷாய் வையுங்கள்! ஆனால் என்னை மட்டும் ஜெயிலில் வைக்காதீர்கள்!


இன்ஸ்:— கூப்பிடு, அந்த வீட்டுக்காரனை!

(ராமுவின் தகப்பனார் வருகிறார்.)

தகப்பனார்:— என்னடா அடம் செய்து கொண்டு இருக்கிறீர்கள்! உடனே இடத்தைக் காலி பண்ணி விட்டு வெளியில் போங்கள்.

ராமு:—அப்பா வீட்டுக்காரராக வந்து விளையாட்டில் சேர்ந்து விட்டாரடா!





குதிரை வியாபாரி

அக்ஷயம்

1. குன்னியூர்ச் சந்தை

வீர முத்துவுக்கு விளையாட்டுப் போல வயது பதினெட்டு ஆகிவிட்டது. அவனுக்குத் தாய் தந்தை கிடையாது. அம்மாவைப் பெற்ற பாட்டிதான் அவனைச் சிறு பிராயம் முதற்கொண்டு வளர்த்து வந்தாள். தாயில்லாக் குழந்தை என்பதற்காக அவள் அவனை மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாள். ஆகவே அவன் முழுச் சோம்பேறி யாகிவிட்டான்.

ஆனால் அவனுடைய அந்தப் பாட்டி பணக்காரப் பாட்டியாக இருந்தால், அவன் தன் வாழ்நாளைச் சோம்பேறியாகவே கழிக்கலாம். அவள்தான் ஏழையாயிற்றே! சம்பாதிக்கும் வயது வந்தவுடன் பாட்டி அவனை, 'எங்கேயாவது போய் நாலு காசு சம்பாதித்து வா. அப்பொழுதுதான் நாம் வயிறு கழுவ முடியும்' என்று நச்சரிக்கலானாள். பாவம், தள்ளாத வயது காலத்தில் அவள்தான் என்ன செய்வாள்? ஓடி ஆடி நடமாட முடிந்த வரையில் அவள் அவனை நாலுகாசு சம்பாதிக்கச் சொல்லித் தொந்தரவு செய்ததே இல்லை. பாட்டியின் தொந்தரவுக்குப் பயந்து வீரமுத்து வெளியே கிளம்பி விட்டால், அப்புறம் நாள் கணக்கில் வீட்டுப் பக்கம் தலை காட்டுவதே இல்லை. ஆனால் வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் கை நிறையப் பணம் கொண்டு வருவான். பாட்டி தன் பேரப் பிள்ளை பலே கெட்டிக்காரன் என்று வாயாரப் புகழ்ந்து வாழ்த்துவாள்.

கையில் இருக்கும் காசு எல்லாம் கரைந்த பின், பாட்டி பழையபடி நச்சரிக்க ஆரம்பித்து விடுவாள். வீரமுத்துவும் பழையபடி சம்பாதித்து வர வெளியே புறப்பட்டு விடுவான்.

அன்று பாட்டியின் கையில் அந்த வாரத்து ரேஷன் வாங்குவதற்குப் பணமே இல்லை. "ஏண்டா முழுச் சோம்பேறி! பணம் எல்லாம் தீர்ந்து விட்டதே! எங்கேயாவது போய் நாலு காசு சம்பாதித்து வரக் கூடாதோ?" என்று மறுபடியும் அதே பழைய பல்லவியைப் பாடத் தொடங்கினாள்.

வீரமுத்து உடனே எழுந்து நல்ல சில்க் ஜிப்பா ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டான். ஆரஞ்சுக் கலர் நீளத் துண்டு ஒன்றை எடுத்து அழகாக ஸேட்டுகளைப் போலத் தலைப்பாகை கட்டிக் கொண்டான். பிறகு தன் நறுக்கு மீசையைத் தடவி விட்டுக் கொண்டு கண்ணாடியிலே தன் உருவத்தைப் பார்த்தான். அவனுக்கே 'நாம் வீரமுத்துத்தானா?' என்று சந்தேகம் வந்துவிட்டது. யாரோ ஒரு பெரிய பணக்கார ஸேட்டுப் போல உருமாறிப் போயிருந்தான்.

அப்பொழுது கைக் காரியமாக வெளியே வந்த அவனுடைய பாட்டி,

"இதென்னடா பகல் வேஷம் மாதிரி?" என்று கேட்டான். "நீ தானே நாலு காசு சம்பாதித்துவரச் சொன்னாய்? அதற்காகத்தான்!" என்று சொல்லி விட்டு வீரமுத்து கையில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அன்றாடம் சாப்பாட்டுக்குத் திண்டாடும் வீரமுத்துவுக்கு இந்த வாழ்வு எதற்கு என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆயினும் அதுதான் அவனுடைய வாழ்க்கையின் பரம ரகசியம்.

வீரமுத்து பல நாட்கள் பல மைல்கள் இரவு பகலாக நடந்து குன்னியூர்ச் சந்தையை அடைந்தான்.

சந்தைக்கு ஏராளமான குதிரைகள் வந்திருந்தன. குதிரைகளில் தான் எத்தனை விதம்! கறுப்புக் குதிரை, சிவப்புக் குதிரை, வெள்ளைக் குதிரை என்று தினுசு தினுசாகக் குதிரைகள் வந்திருந்தன. ஒரு குதிரை இன்னொரு குதிரையைத் தூக்கி அடிக்கக் கூடியதாக இருந்தது. அவற்றையெல்லாம் பார்த்தவாறே ஸேட்டின் வேஷத்தில் வந்து கொண்டிருந்த வீரமுத்துவைப் பார்த்துக் குதிரைத் தரகர்கள் பலர் அவனைப் பெரிய புள்ளி என்று தீர்மானித்துச் சூழ்ந்து கொண்டனர்.

"ஸேட்ஜி! வாருங்கள்! பிரமாதமான குதிரை ஒன்று வந்திருக்கிறது. வந்து பாருங்கள்!" என்று ஒவ்வொரு தரகரும் அவனைக் கூப்பிட்டனர்.

வீரமுத்து தரகர்கள் காட்டிய ஒவ்வொரு குதிரையையும் பார்த்துக் கொண்டே வந்தான். நெற்றியில் வெள்ளைச் சுட்டியுடன் ஒரு குதிரை வாலை ஆட்டிக் கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. அவன் பார்த்த அத்தனை குதிரைகளிலும் அதுதான் அவனுடைய மனத்தைக் கவர்ந்தது. அதன் விலை ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று நினைத்தான் வீரமுத்து. அதன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த குதிரைக்காரனைப் பார்த்து, "ஏன் அப்பா! இந்தக் குதிரையினுடைய விலை எவ்வளவு?" என்று கேட்டான்.



"ஆயிரத்து ஐந்நூறு எசமான்!" என்றான் குதிரைக்காரன்.

"விலை சற்று அதிகந்தான். அதிருக்கட்டும். சுழி முதலியவைகள் எல்லாம் நல்லதாகத் தானே இருக்கின்றன? கெடுதலான சுழி ஒன்றும் இல்லையே?" என்று கேட்டான் வீரமுத்து.

"கெடுதலான சுழி ஒன்று கூடக் கிடையாது, எஜமான்! நீங்களே வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லிக் குதிரைக்காரன் ஒவ்வொரு சுழியாகக் காட்டி அதன் அருமை பெருமைகளை எல்லாம் சொல்லிக் கொண்டு வந்தான்.

வீரமுத்துவும் சுழிச் சுத்தம் எல்லாம் தெரிந்தவன் போலக் கவனித்துப் பார்த்து வந்தான். பிறகு, "ஏன் அப்பா! இந்தக் குதிரையின் மீது ஏறிக் கொஞ்சம் சவாரி செய்து பார்க்கலாமா?" என்று கேட்டான்.

கோபுவின் கேள்வி

சீனு சென்னையிலிருந்து ஒரு தடவை தன் கிராமத்துக்குப் போயிருந்தான். அங்கே அவனுக்குக் கோபு அறிமுகமானான். ஒரு நாள் கோபு பேச்சுவாக்கில் சீனுவைப் பார்த்து, "என் சீனு! உனக்கு எத்தனை தம்பிகள்! எத்தனை தங்கைகள்!" என்று கேட்டான்.

"எனக்கு எத்தனை தம்பிகள் எத்தனை தங்கைகள் இருந்தால் உனக்கு என்ன!" என்று சீனு 'சள்' என்று எரிந்து விழுந்தான்.

"சரி, தவறிப் போய்க் கேட்டுவிட்டேன். நீ சொல்லாவிட்டால் வேண்டாம். ஆனால் ஒரு விஷயம். உனக்கு எத்தனை தம்பிகள் என்று மனத்தில் மட்டுமாவது நினைத்துக் கொள்" என்றான் கோபு.

"நினைத்துக் கொண்டு விட்டேன்!"

"அந்த எண்ணை இரண்டு மடங்கு ஆக்கிக் கொள்."

"ஆக்கிக் கொண்டு விட்டேன்."

"அதை ஐந்தால் பெருக்கு."

"பெருக்கி விட்டேன்."

"பெருக்கிவிட்டாயா! உனக்கு எத்தனை தங்கைகள் உண்டோ, அவர்களையும் அத்துடன் சேர்த்துக் கூட்டிக்கொள்."

"கூட்டிக் கொண்டேன்."

"மொத்தம் வந்த விடை என்ன!"

"நாற்பத்து மூன்று."

"அப்படியானால் உனக்கு நாலு தம்பிகள்; மூன்று தங்கைகள். என்ன, நான் சொல்லுவது சரிதானே!"

"ஆமாம், நீ எப்படித் தெரிந்து கொண்டாய்!"

"எப்படித் தெரிந்தால் உனக்கு என்ன!"

"ஏய் கோபு, அந்த வித்தையை எனக்கும் சொல்லிக் கொடுடா!" என்று கெஞ்சினான் சீனு.

"அடுத்த வாரம் சொல்லுகிறேன், பொறுத்திரு!" என்று சொல்லி ஓடிவிட்டான் கோபு.

"கேட்பானேன், எஜமான்? தாராளமாக ஏறிச் சவாரி செய்து பாருங்கள்!" என்று சொல்லிக் குதிரைக்காரன் குதிரையைக் கொண்டு வந்து அவன் முன்னே நிறுத்தினான்.

வீரமுத்து ஒரே தாவலாகத் தாவிக் குதிரை மீது ஏறி உட்கார்ந்தான். பிறகு குதிரையைப் பெரு நடையாகத் தட்டி விட்டான். குதிரை 'டக், டக்' என்று குளம்புகள் ஒலிக்க வெகு அழகாக நடந்து சென்றது. கொஞ்ச தூரம் போனதும் வீரமுத்து குதிரையைத் திருப்பிக் கொண்டு வந்து, "ஆகா! நடை அபாரம்!" என்று சொல்லிப் புகழ்ந்தான்.

மறுபடியும் குதிரையை ஓட்டினான். இந்தத் தடவை குதிரை ஓடியது. கொஞ்ச தூரம் சென்றதும் குதிரையைத் திருப்பிக் கொண்டு வந்து, "என்ன சுகமாக ஓடுகிறது, தெரியுமா? சவாரி செய்தால் இந்தக் குதிரை மீது சவாரி செய்ய வேண்டும். ஏன் அப்பா, கொஞ்சம் விலையைக் குறைத்துக் கொள்ள மாட்டாயா?" என்று கேட்டான்.

"விலைக்கு என்ன? உங்களுக்குக் குதிரை பிடித்து விட்டால் இரண்டு ஒன்று முன்னே பின்னே பார்த்துக் கொள்ளலாம், எஜமான்!" என்றான் குதிரைக்காரன்.

குதிரையின் லகானை ஒரு தடவை வெட்டி இழுத்தான் வீரமுத்து. குதிரை வெகு லாகவமாகக் கழுத்தைத் திருப்பி இரண்டு முன்னங் கால்களையும் தூக்கி அந்தரத்தில் நின்றது. அடுத்த நிமிஷம், 'டடக், டடக், டடக்' என்று குளம்பொலிகள் கேட்கப் பெரு நடையாக நடந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் வேகமாக ஓடத் தொடங்கியது. அடுத்த சில கணங்களுக்கெல்லாம் நாலு கால் பாய்ச்சலில் ஓடத் தொடங்கி விட்டது. அது ஓடிய ஓட்டத்தில் புழுதி பறந்தது. அந்தப் புழுதியிலே குதிரையும் மறைந்து விட்டது. வீரமுத்து குதிரைக்காரனின் கண்ணிலே மண்ணைத் தூவி ஏமாற்றி விட்டு அங்கிருந்து அந்தக் கணமே கம்பி நீட்டி விட்டான்.

குதிரைக்காரன் 'குதிரை திரும்பி வந்து விடும், வந்துவிடும்' என்று எண்ணிக் குதிரை போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாழிகை ஆயிற்று; இரண்டு நாழிகை ஆயிற்று. மூன்று நாழிகையு மாயிற்று. போன குதிரை திரும்பி வந்தால் தானே? குதிரை போன வழியையே பார்த்துப் பார்த்துக் குதிரைக்காரனின் கண்கள் தான் பூத்துப் போயின.

அந்தக் குதிரைக்காரனுக்கு அந்தக் குதிரை ஒன்று மட்டும்தான் ஆஸ்தியாக இருந்தது. அது பறிபோனதை நினைத்ததும் அவனுக்குத் தன் மனமே வெடித்துச் சுக்கு நூறாகிவிடும்போல

விருந்தது. என்ன செய்வான், பாவம்! வாடிய முகத்துடன் வீடு திரும்புவதைத் தவிர வேறு வழி ஏது?

வீரமுத்து முழுச் சோம்பேறிதான். இருந்தாலும் பலே கைகாரப் பேர்வழி. அவன் கையில் ஒரு பொருள் போய் விட்டால் அது போனதுதான். அப்புறம் அது திரும்பி வருவதே இல்லை. குதிரையை வாயு வேகமனோ வேகமாக விரட்டிக் கொண்டு வீட்டை அடைந்தான் வீரமுத்து.

குதிரையில் வந்து இறங்கிய வீரமுத்துவைக் கண்டு அவனுடைய பாட்டி ஒரு கணம் அதிசயமுற்றாள். "என், வீரமுத்து? உனக்கு ஏது குதிரை?" என்று கேட்டாள்.

"பகல் வேஷம் போட்டுக் கொண்டேன் அல்லவா? அதற்குக் கிடைத்த பரிசு பாட்டி!" என்றான் வீரமுத்து மிகவும் மகிழ்ச்சி ததும்ப.

பாட்டிக்கு அவன் சொல்லுவது புதிராகவே இருந்தது. "சரி, ஏதாவது பணம் கொண்டு வந்திருக்கிறாயா? எடு!" என்றாள் பாட்டி.

"இன்று பணம் கொண்டு வரவில்லை, பாட்டி! இன்னும் இரண்டே நாளில் இதை விற்றுப் பணமாக்கி விடுகிறேன். அப்புறம் நம் சாப்பாட்டுக்கு ஒரு வருஷத்துக்குக் கவலையே இல்லை" என்றான் வீரமுத்து.

"இன்றைக்குச் சோறு தின்ன அரிசி வேண்டுமே! அதற்கு என்ன செய்வது?" என்றாள் பாட்டி.

பக்கத்து வீட்டில் இரண்டுநாளைக்கு இரண்டொரு ரூபாய் கைமாற்றாக வாங்கிக் கொள்ளு. இன்னும் இரண்டே நாளில் வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் கொடுத்து விடலாம்" என்றான் வீரமுத்து.

"சரி" என்று சொல்லுவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? அவள் அடுத்த வீட்டை நோக்கிப் பணம் புரட்டிக் கொண்டு வருவதற்காகப் போய் விட்டாள். (தொடரும்)



அன்று அந்தக் கடை புதிதாகத் திறக்கப்பட்டது. கடைக்காரன் தன் கடைக்கு நல்ல பிரசித்தி ஏற்பட வேண்டும் என்பதற்காகச் சின்னப் பையன்களுக்கெல்லாம் பலூன்கள் வழங்கிக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்த விச்சுப் பயலுக்கு இந்தக் காட்சியைப் பார்த்ததும் தானும் பலூன் வாங்கிக் கொண்டால் என்ன என்று தோன்றியது. காசு இல்லாமல் பலூன் கிடைக்கிறது என்றால் யாருக்குத்தான் ஆசையாயிருக்காது?

விச்சு விடுவிடு என்று போய், பையன்கள் வரிசையாகப் பலூன் வாங்கிக் கொள்ளுவதற்கு நின்ற 'க்யூ'வில் நின்றான்.

சுமார் அரைமணி நேரம் கால்கடுக்க நின்றான் விச்சு. அப்பாடி! ஒரு மாதிரி அவன் 'சான்ஸ்' வந்தது.

கடைக்காரன் விச்சுவின் கையில் ஒரு பலூனைக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டதும் விச்சு நகராமல், கடைக்காரனைப் பார்த்து, "எனக்கு இன்னொரு பலூன் வேண்டும்!" என்றான்.



கடைக்காரன் கண்டிப்பான குரலில், "அது எப்படி முடியும், அம்பி? ஒரு பையனுக்கு ஒரு பலூன்தானே நாங்கள் கொடுக்கிறோம்? வீட்டில் உனக்குத் தம்பி இருக்கிறானா......?" என்று கேட்டான்.

உடனே விச்சுவின் முகம் வாடிவிட்டது. "இல்லை!" என்று சன சுரத்தில் தயக்கத்துடன் பதில் சொன்னவன் சட்டென்று யோசனை செய்து "ஸார், என் அக்காளுக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவனுக்கு ஒரு பலூன் கொடுங்களேன்!" என்றான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த கடைக்காரன், சிரித்துக்கொண்டே இன்னொரு பலூனைக் கொடுத்தான். —விஜயம்.

இன்ஸ்பெக்டர் ராய்



4 ஊர் வாய்

இன்ஸ்பெக்டர் ராய் தினேஷின் பார்வையில் தோய்ந்திருந்த பாவத்தைப் புரிந்துகொள்ள முயல்பவர் போல ஒரு தடவை ஏற இறங்க அவனைப் பார்த்தார். தினேஷுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, சட்டென்று தன் தலையைக் குனிந்து கொண்டு விட்டான்.

பிறகு சிறிது நேரம்வரை அங்கே மௌனம் நிலவியிருந்தது. யாருக்கும் என்ன பேசுவதென்றே புரியவில்லை. கடைசியில் தினேஷ் அங்கே நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்து, "தாங்க் யூ, ஸார்!" என்று இன்ஸ்பெக்டர் ராய்க்குத் தன் வந்தனத்தைத் தெரிவித்தான்.

"போய் வாருங்கள், அண்ணா!" என்று பின்னாலிருந்து வந்த குரல் விடை கொடுத்தனுப்பியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் கதவு நன்றாகச் சாத்தித் தாளிடப்பட்டது. நாற்புறமும் கும்மிருட்டுச் சூழ்ந்தது. இன்ஸ்பெக்டர் நடுத்தெருவிலே தன் கால் போனபோக்கில் நடந்து கொண்டிருந்தார். ஆனால் அவருடைய உள்ளம், தன் உள்ளக் கிடக்கையிலே தூங்கிக் கொண்டிருந்த ஆனந்தமயமான இன்ப வாழ்க்கையின் நினைவிலே ஈடுபட்டுத் தன்னை மறந்தது.

குளிர்ந்த காற்று 'ஜில்' என்று வீசிக்கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ராய் சிந்தனையில் சூடேறிவிட்ட தம் மூளையைச் சமனப்படுத்திக் குளிரச் செய்து கொள்வதற் காகத்தானோ என்னவோ, தலையில் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றிக் கை இடுக்கிலே வைத்துக் கொண்டு நடந்தார்.

ஆனால் கற்பனைக்கெட்டாத ஆனந்தத்தைப் பின்னால் விட்டு விட்டு வந்தவர்போல அவர் அடிக்கடி பின்புறம் திரும்பித் திரும்பி தினேஷின் வீட்டையே பார்த்துக் கொண்டு நடந்தார். அப்பொழுது அந்த வழியே

வந்துகொண்டிருந்த ஒரு போலீஸ்காரன் டிபுடி சூபரின்டென்டாகிய அவரைப் பார்த்ததும் சட்டென்று நின்று பூட்ஸ் கால் சத்தமிட 'சலாம்' போட்டுவிட்டு 'அட்டென்ஷ'னில் நின்றான். அவனைப் பார்த்த பின்னர்தான் அவருக்குத் தன் பதவியும் சுய உணர்வும் திரும்பி வந்தன.

சிந்தனையிலே லயித்திருந்த அவர் ஒரு விதமாகத் தம் சிந்தனைக்கு மனத்துள் முடிவு கட்டிக் கொண்டார். ஆகவே, அந்தப் போலீஸ்காரனைக் கூப்பிட்டு ஒரு வாடகை வண்டி கொண்டுவருமாறு உத்தரவிட்டார். சிறிது நேரத்துக் கெல்லாம் வண்டி வந்தது. அவர் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு நேராகக் கலெக்டர் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

இரவு ஒரு மணி சுமாருக்கு அவர் கலெக்டரை எழுப்பினார். பிறகு அவருடன் வெகு நேரம் வரை லோகாபிராமமாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்.

மணி இரண்டு அடித்ததும் அவர் கலெக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு தம் வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய முகம் தனிச் சோபையுடனும் கவர்ச்சியுடனும் காணப்பட்டது. இவ்வளவு இன்பகரமாக இராப் பொழுதை அவர் தம் வாழ்நாளிலேயே கழித்ததில்லை.

மறுநாள் ஊர் முழுவதும் எங்கு பார்த்தாலும் வதந்தி என்னும் தந்தி பரவியிருந்தது.

தினேஷ் டாகுரைப் பிடிப்பதாகத்தான் இருந்தார்களாம். ஆனால் இன்ஸ்பெக்டர் பிரமோதராய் கலெக்டரைச் சந்தித்து அவரைப் பிடித்தால் 'நான் ராஜீநாமாச் செய்து விடுவேன்' என்று பயமுறுத்தி வாரண்டை ரத்து செய்யுமாறு சொல்லி விட்டாராம். அங்கே பரவிய வதந்திகளிலே இது ஒன்று.


தினேஷ் நேற்று இராத்திரி இன்ஸ்பெக்டர் ஐயாவைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து, தான் சத்தியாக்கிரஹத்துக்கு ஒரு முழுக்குப் போட்டு விடுவதாக வாக்களித்து விட்டாராம். அதனால்தான் வாரண்டை ரத்து செய்து விட்டார்களாம்.—இது இன்னொரு வதந்தி.

தினேஷின் தாயார் ரொம்பச் சொல்லி மன்றாடிக் கேட்டுக் கொண்டு வாரண்டை ரத்து செய்யுமாறு செய்தாளாம்.—மூன்றாவதாகக் கம்பி இல்லாத் தந்தி மூலம் பரவிய வதந்தி இது.

இந்தத் தந்திகள் எல்லாம் காலையிலேயே ஊர் முழுவதும் ஒரு மூலை முடுக்கு விடாமல் பரவிவிட்டன. பொழுது ஏற ஏற வதந்தியின் விஷயங்களும் விஷம்போல் ஏறின. மத்தியானத்துக்குள், 'இன்ஸ்பெக்டர் ராஜீநாமாக் கடிதத்தை எப்படிக் கிழித்தார்? அவரும் கமலாம்பாளும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டு எப்படிக் கரும்புத் தின்றார்கள்? தினேஷ் என்ன வார்த்தைகள் சொல்லிச் சத்தியாக்கிரஹத்தைக் கைவிட்டான்?' என்பது போன்ற வதந்திகள்



உற்பத்தியைக் குறையுங்கள்!



தம்பி:—என்னடா எழுதியிருக்கிறது? படித்துச் சொல்லு!

அண்ணு:—அது நமக்கு இல்லையடா! நம்ம அப்பாவுக்கு!

ஊர் முழுவதும் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கத் தொடங்கிவிட்டன.

சாயந்திரத்துக்குள் ஒவ்வொரு விஷயத்தையும் ஆதார பூர்வமாக அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து ஒலி பரப்புபவர்கள் ஒவ்வொரு தெருவின் மூலை முடுக்குகளிலும் உண்டாகி விட்டார்கள் என்றால் ஊர் வாய்க்கு உள்ள பெருமையையும் மகிமையையும் என்னவென்று சொல்லுவது?

இந்த வதந்தித் தந்திகளிலே இவ்வளவு தூரம் உண்மை இருந்தது என்னவோ உண்மைதான். அதாவது நீனேஷைப் பிடிக்க மறுநாள் யாரும் வரவில்லை. என்ன காரணத்தினால் இப்படி நடந்தது என்னும் விஷயத்தை ஆராய்வதோ ஆராயாமல் இருப்பதோ அவரவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்ததுதானே? அவர்களுடைய அந்த ஏகபோக உரிமையைப் பறிக்க வேறு யாருக்குத்தான் உரிமை உண்டு?

நீனேஷ் இரவுப் பொழுதை ஆனந்தமாகப் போக்கினான். பொழுது விடிந்ததும் சற்றுச் சீக்கிரமாகவே எழுந்திருந்தான். ஏனென்றால் அவனுக்கு இன்ஸ்பெக்டர் பிரமோதராயின் வார்த்தைகளிலே நம்பிக்கை விழவில்லை. ஆகவே, போலீஸார் தன்னைக் கைது செய்ய எப்பொழுது வருவார்களோ என்று ஆவலுடன் எதிர்பார்க்கலானான். மணி எட்டு அடித்தது; ஒன்பது அடித்தது. பத்து, பதினொன்று, பன்னிரண்டும் கூட அடித்துவிட்டது. ஆனால் யாரையுமே காணோம். அப்புறம் அவனே நேரில் கோர்ட்டுக்குச் சென்றான். ஆனால் அங்கேயும் வாரண்ட் இல்லை. ஆகவே கடைசியில் ஏமாற்றமடைந்து நம்பிக்கை இழந்து கோர்ட்டு வாசலில் வந்து நின்றான். சத்தியாக்கிரஹ சிரோமணி என்னும் முறையில் முதன் முதலாகக் கைது செய்யப்பட்டுச் சிறை செல்லும் பெருமை அவனுக்குக் கிட்டவில்லை. அதை நினைத்துப் பாவம், அவன் மனம் உடைந்து போனான்.

அதற்குப்பிறகுதான் அவன் ஊரிலே உலாவிய வதந்தியைப் பற்றிக் கேள்விப்பட்டான். முதலில் அவன் அவற்றையெல்லாம் காது கொடுத்துக் கேட்கவில்லை. ஆனால் மூன்று மூன்றரை மணிக்குக் கிளப்புக்குக் காப்பி சாப்பிடுவதற்காகப் போனான். அங்கேயும் அதே பேச்சாக இருப்பதை அவன் காது கொடுத்துக் கேட்டான்.

“எங்கள் அம்மாவும் டிபுடி ஸுபரின்டெண்டுக்கெதிரே உட்கார்ந்து கொண்டு கரும்பு தின்றிருந்தாளானால், என்னையும் தான் யாரும் பிடிக்கமாட்டார்கள். இதில் என்ன விசித்திரம்?” என்று கேட்டான் ஒருவன் மிகவும் குத்தலாக.

இந்த வார்த்தைகள் நீனேஷின் காதுகளில் விழுந்தன. அவன் துணுக்குற்றான். ‘இதில் என்னளவு உண்மையாவது இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால்...’ என்ற சந்தேகம் அவன் உள்ளத்திலே எழுந்தது.

இன்ஸ்பெக்டர் இதுவரை அவன் வீட்டு வாசற்படியிலே காலடி எடுத்து வைத்ததில்லை. அப்படியிருக்கும் பொழுது நேற்று மட்டும் எதற்காக வந்தார்? இதற்கு முன்பு இருவருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லையென்றால், இவ்வளவு துணிச்சலுடன் தாராளமாக அவனுடைய தாயாருடன் அவருக்குப் பேசத் துணிவு எங்கிருந்து உண்டாகும்? இப்படியெல்லாம் பேச அவருக்கு உரிமைதான் ஏது? இன்ஸ்பெக்டர் சிரிக்கும் பொழுதெல்லாம் அவனுடைய அம்மா முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தாளே, ஏன்? ‘நான் போலீஸில் இருக்கும் வரையில் உன்னை யாரும் தொடமாட்டார்கள்’ என்று எனக்கு இன்ஸ்பெக்டர் ஆறுதல் மொழி சொன்னாரே, அதற்கு என்ன அர்த்தம்? அட கடவுளே! அவர் அத்துடன் நின்றாலாவது தேவலையே!

அவனைப் பார்த்து ‘என் குழந்தாய்!’ என்று பரிவுடன் வேறு கூப்பிட்டாரே! அவருடைய அந்தக் காயம்பட்ட கை விரல்......

கொந்தளித்துக் கொண்டிருந்த நீனாவின் உள்ளத்தில் சட்டென்று ஒரு ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. அவனுடைய அம்மாவுக்காகத்தான் இன்ஸ்பெக்டர் அவனைச் சிறை செய்யாமல் விட்டிருக்கிறார். கலெக்டரிடம் சென்று வாரண்டை ரத்து செய்யச் சொல்லியிருக்கிறார். இல்லாவிட்டால் அவருக்கு அவனிடம் என்ன அக்கறையோ இல்லையோ?—அவனுடைய கண்களெதிரே மையிருட்டுப் பரவிவிட்டது. அவனுடைய அம்மா!...யாருடைய பிள்ளை அவன்?......நீனா உணர்ச்சி வசப்பட்டவன், நேர்மையானவன்; நீதி நெறி தவறாதவன். அவன் தன்னைப் பிறவிச் சத்தியாக்கிரஹி என்றே எண்ணி வந்தான். ஆனால் அவனுடைய அம்மா......

‘ஹே கடவுளே!’ எனக்கு இதெல்லாம் என்ன தெரியும்......?’ என்று அவன் மனத்துள் என்ன என்னவெல்லாமோ எண்ணி முணு முணுத்தான்.

முதல் நாள் இரவு நடந்த சம்பவம் நீனாவுக்கு வர வர அவனுக்கு நம்பிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகலாயிற்று. அவன் தலை சுழன்றது. ரத்தம் கொதித்தது. தலைவலி என்று சாக்குச் சொல்லி விட்டு அவன் வீட்டுக்குப் போவதற்காகக் கிளம்பினான். ஆனால் வீட்டுக்குப் போக மனம் துணிந்தால்தானே? இப்படிப்பட்ட தாயார் இருக்கும் வீட்டுக்கா அவன் திரும்பிப் போகவேண்டும்? அட கிரஹசாரமே!......

காயம்பட்ட கைவிரல் அவன் கண்களெதிரிலேயே காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அவன் உள்ளக் கடல் கொந்தளித்தது. புயல் எழும்பிற்று; கும்மிருட்டும் கவிந்தது. ஸபர்மதியின் பாலத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டு விட்டால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. “அம்மா! நீ எதற்காகப் பால் கொடுத்து என்னை வளர்த்தாய்? என்னைப் பட்டினி போட்டு அப்பொழுதே என் கொன்று போட்டு விடவில்லை? ‘படி, படி’ என்று என் பிராணனை வாங்கிப் படிக்கச் சொன்னாயே, எதற்காக? அதுமட்டுமின்றி எனக்குக் கல்யாணம் வேறு செய்து வைத்துத் தொலைத்தாயே, என்? என்னிடம் இல்லாத நல்ல பழக்கங்களையெல்லாம் வெகு சிரமப்பட்டு உண்டு பண்ண முயன்



"ஒரு கச்சேரிக்கு நீங்கள் வந்து மிருதங்கம் வாசிக்கவேண்டும். என்ன 'ரேட்' கேட்கிறீர்கள்?"

"முந்நூறு ரூபாயும் அரைப் படி ரவையும் கொடுத்து விடுங்கள். வாசிக்கிறேன்!"

"சரி, முந்நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன். ரவையைக் கால் படியாகக் குறைத்துக் கொள்ள முடியுமா?"

ரூபே, இம்மாதிரி வீண் பிரயாசைகளெல்லாம் எதற்காக எடுத்துக் கொண்டாய்?

அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி அலைகளே, அவனைப் பிடித்துத் தள்ளி வீட்டுக்கு இட்டுச் சென்றன. வீட்டுக்குச் சென்று மனைவியையும் குழந்தையையும் ஒரு முறை பார்த்து விட்டு, நேரே ஸபர்மதி ஆசிரமத்துக்குச் சென்று காந்திஜியின் காலடிகளில் விழுந்து மனத்துக்கு ஆறுதல் தேடிக் கொள்ளுவது என்று அவன் முடிவு கட்டி விட்டான். அவன் வீட்டுக்குப் போனபொழுது கமலாம்பாள் தன் இரு கால்களையும் நீட்டி, அதில் குழந்தையைப் போட்டுக்கொண்டு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். களங்கமே உருவான அவளுடைய மடியில் படுத்துக் கொண்டு தன் பிள்ளையும் களங்க முறுவலைக் கண்ட நினைவுக்கு மனத்தை என்னவோ செய்தது. இருந்தாலும் அவனால் வாய் திறந்து அவளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்ல முடியவில்லை. அவன் என்ன செய்வான், பாவம்! பேசாமல் 'விடு விடு' என்று தன் அறைக்குள் ஓடிச் சென்று இரு கைகளாலும் தலையை இறுகப் பிடித்துக் கொண்டு படுக்கையில் போய் விழுந்தான்.

அவன் கண்களெதிரே மறுபடியும் இன்ஸ்பெக்டரின் காயம்பட்ட கைவிரல் காட்சி அளித்தது. அது அவன் கண்களை விட்டு இத்தண்டை அத்தண்டை நகர்ந்தால்தானே? அவன் மனத்தைப் புண்படுத்துவதற்கென்றே சொல்லிவைத்தாற்போல அது அவன் கண்களில் நின்றுகொண்டிருந்தது போலும்! "கரும்புத் துண்டாம், கரும்புத் துண்டு! அட கடவுளே, இனி நான் எப்படி உயிர் வாழ்வது? வெளியில் தலை காட்டுவதுதான் எப்படி? இனி யார் முகத்தில் நான் விழிக்க முடியும்?"—இந்தச் சிந்தனையில் விழித்த நினைவுக்குத் தன்னையும் மீறிக் கொண்டு அழுகை வந்து விட்டது. அவனுக்கு மனம் ஒரு நிலை கொண்டால் தானே? அவன் ஒரு தொப்பியை அணிந்து கொண்டு வெளியே வந்தான். தாயாரைக் கண்டதும் அவனுக்குக் கோபம் எல்லையைக் கடந்து விட்டது.

அவன் கைக்குள் அகப்பட்ட விஷயமாக மட்டும் இருந்தால்......? அடடா! என்ன அபசாரம்! என்ன அபசாரம்! அவள் அவனைப் பெற்று எடுத்து வளர்த்த தாய் அல்லவா? தாயிற் சிறந்தொரு கோவில் இல்லை என்பார்களே! தாயைக் கோவிலில் வைத்துக் கும்பிடுவது அல்லவா நியாயம்! அப்படியிருக்கும் பொழுது...... தாயாக இருந்தால் கோயிலில் வைத்துக் கும்பிடவேண்டியதுதான். ஆனால், அவள் ஒரு தாயா? அவள் கோயிலில் வைத்துக் கும்பிடத் தகுந்தவள் தானா? யார் சொன்னது? ...... அவன் யாருக்குப் பிறந்த பிள்ளையோ?...... 'என் குழந்தாய்!' என்று இன்ஸ்பெக்டர் நாய் அவனைக் கூப்பிட்டாரே, எந்த முகாந்தரத்தை வைத்துக் கொண்டு அவர் அப்படிக் கூப்பிட்டார்?......அட கடவுளே!—அவன் பித்தனைப் போலப் பலவாறு பிதற்றினான்; உளறினான்; முறு முறுத்தான். அடுத்த நிமிஷம் உள்ளங்காலிலிருந்து உச்சந் தலை வரை அவன் உடல் ஒரே ஆட்டமாக ஆடியது.

அவனுடைய மூளையிலே மறுபடியும் பலத்த புயல் எழுந்தது. அவன் வெகு வேகமாக வாசற்புறம் வந்தான். ஆனால் எங்கே போவது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. ஆசிரமத்தில் உள்ளவர்கள் அத்தனை பேரும் இந்தச் சமயம் ஏதாவது வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். ஆகவே, அவனுக்கு அங்கே போவது சரியாகப்படவில்லை. அப்படியானால் எங்கே போவது? அவன் கால் நடையாகவே 'கோசரப்' பின் பக்கம் புறப்பட்டான். நடக்க முடிந்தவரை

வில் நடந்தான், நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான். இருட்டி விட்டது; அப்பொழுதும் அவன் நடப்பதை நிறுத்த வில்லை. எவ்வித உத்தேசமும் இன்றி இப்படி அவன் எங்கேதான் சென்று கொண்டிருந்தானோ? அவ்வளவு நடந்தும், அவனுடைய உள்ளத்திலே மூண்டிருந்த அவமானத் தீ தணியவில்லை. தெருவில் தலைகாட்ட முடியாத அவமானம் அல்லவா அவனுக்கு ஏற்பட்டுவிட்டது! அந்தத் தீ வளர்ந்ததே தவிரக் குறைய வில்லை.

தன் தலையிலே மாபெரும் களங்கம் கட்டி விடப்பட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. தன் உள்ளத்திலே எழும் ஆசைகளுக்கும் பலவீனங்களுக்கும் மூல காரணத்தை அன்றுதான் அவனால் கண்டுபிடிக்க முடிந்தது. தன் ரத்தத்திலே மாசு தோய்ந்திருப்பதன் காரணமாகத்தான் இந்தமாதிரி ஆசைகளும் பலவீனங்களும் ஏற்படுகின்றன என்று அவன் மனத்தில் முடிவு கட்டிவிட்டான். நேற்றுவரை தன் சுத்த ரத்தத்திலே அவன் பெருமைகொண்டிருந்தான். அது தெய்வாம்சம் பொருந்தியது என்று கூட எண்ணி மகிழ்ந்தான். ஆனால் இன்றோ அதைக் காட்டிலும் தாழ்வானது வேறு ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான். இதை விடக் கீழே போக இனி வேறு என்ன வேண்டும்?

அவன் வாழ்க்கையே மண்ணாகி விட்டது. தன் ஆத்மபலத்தின் உதவியைக் கொண்டு காந்திஜிக்கு ஊழியம் செய்ய வேண்டும். சத்தியாக்கிரஹப் படைக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிட்டும்படி பணி செய்ய வேண்டும். பாரத நாட்டுக்கு அதன் பழைய பெருமையைத் தேடிக் கொடுக்க வேண்டும். சுதந்திர நாடாக உலகத்தில் தலை தூக்கி நிற்கும்படி பாரதநாட்டைச் செய்துவிட வேண்டும். பாரத நாட்டுக்கு ஈடு இணையாக வேறு நாடே இல்லை என்னும்படி செய்துவிட வேண்டும் என்றெல்லாம் அவன் உள்ளத்திலே திட்டம் போட்டு வைத்திருந்தான்.

இதையெல்லாம் நினைத்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. உடனே அவன் 'கடகட' வென பேய்போலச் சிரித்தான். (தொடரும்)



மிஸ்டர் வக்ரபாதம் சென்னையில் பிரபல வக்கீல். மாம்பலத்தில் அவர் புதிய வீடு ஒன்று கட்டிக் குடியேறினுர். அந்தப் புதிய வீட்டுக்கு நாளும் கிழமையும் பார்த்துக் கொண்டு புறப்பட்டார்.

அன்று சாமான்களெல்லாம் பழைய வீட்டிலிருந்து லாரியில் புதிய வீட்டுக்கு வந்து சேர்ந்தன. வந்த சாமான்களை யெல்லாம் எங்கே வைப்பது என்பதை வேலைக்காரர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் அவர் மனைவி ஸ்ரீமதி வக்ரபாதம். ஆனல் நடுநடுவில் ஸ்ரீமான் வக்ரபாதம் வந்து சாமான்களை இடம் மாற்றி வைக்கச் சொன்னுர். இவ்வாறு ஸ்ரீமதி வக்ரபாதம் ஒரு இடத்தில் சாமான்களை வைக்கச் சொல்லுவதும் அதை ஸ்ரீமான் வக்ரபாதம் இடம் மாற்றி வைக்கச் சொல்லுவதுமாயிருந்தால் எப்படி ஒழுங்காக அடுக்கி வைக்க முடியும்! ஸ்ரீமதி வக்ரபாதத்துக்கு அவர்மீது வந்த கோபத்துக்கு அளவில்லை.

"இந்தாருங்கள். இப்படி எட்டிக்குப் போட்டியாக வந்து சாமான்களை வைக்கச் சொன்னுல் எப்படி நாம் சாமான்களை அழகாக அடுக்கிவிட முடியும்! போதும், இரண்டுபேரும் சங்கடப்படவேண்டாம். என் அண்ணுபிள்ளை ஸ்ரீதரனை 'போன்' பண்ணிப் பத்து மணிக்கு வரச் சொல்லி விட்டேன். அவன் நல்ல ரஸிகன். நம் வீட்டுச் சாமான்களை எங்கெங்கே வைத்தால் நன்ருயிருக்கும் என்று சொல்லுவான்" என்ருள் ஸ்ரீமதி வக்ரபாதம் கோபத்துடன். ஸ்ரீமான் வக்ரபாதமும் வேண்டா வெறுப்போடு, "சரி, வரட்டுமே!" என்ருர்.

சரியாகப் பத்து மணிக்கு ஸ்ரீதரன் காரில் வந்து இறங்கினுன். ஸ்ரீமதி வக்ரபாதம் அவனை ஆசார உபசாரம் செய்து வரவேற்ருள்.

வரும்போதே ஸ்ரீதரன், "என்ன அத்தை! இதுதான் புதிதாகக் கட்டின வீடோ! சகிக்கலையே!" என்று கூறிக்கொண்டே வந்தான். இது ஸ்ரீமான் வக்ரபாதத்தின் காதில் விழுந்ததும் அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. வராதா என்ன! ஏகப்பட்ட பணம் போட்டுக் கட்டின வீட்டை ஒரு நிமிஷத்தில் நன்ருகவில்லை யென்று முகத்தில் அடித்தாற்போல் சொன்னுல் கோபம் வராமல் என்ன செய்யும்! வந்த கோபத்தை ஸ்ரீமான் வக்ரபாதம் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

ஸ்ரீமதி வக்ரபாதம் பெருமையுடன், "இதோ பார், ஸ்ரீதர்! இதுதான் அவருடைய ஆபீஸ் ரூம். எப்படி யிருக்கிறது!" என்று கேட்டாள்.

"அத்தை! அது என்ன நாற்காலி! பத்தாம் பசலி நாற்காலியை இந்த அறையில் போட்டிருக்கிறதே! இதை முதலில் தூரத் தூக்கி எறியச் சொல்லு" என்ருன் 'ஸ்ரீடிக்' ஸ்ரீதரன்.

"என்ன ஸ்ரீதர்! அதைப் போய்ப் பத்தாம் பசலி நாற்காலி என்று சொல்லி விட்டாயே! அது எங்கள் தாத்தா திவான் சமஸ்தானத்தில் திவானுக யிருக்கும்போது மகாராஜா பிரியப்பட்டுக் கொடுத்ததல்லவா!" என்ருர் ஸ்ரீமான் வக்ரபாதம் கோபத்துடன்.

"என்னதான் இருந்தாலும் இப்படி ஓட்டை நாற்காலியை இங்கே போட்டிருப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை". என்ருன் கம்பீரமாக. அவ்வளவுதான்; ஸ்ரீமான் வக்ரபாதம் கோபத்துடன் அங்கிருந்து வெளியேசென்று விட்டார்.

சிறிது நேரம் கழித்து வாசலில் ஹார்ன் சத்தம் விடாமல் கேட்டது. தனது காரின் சத்தந்தான் என்பதை யறிந்து ஸ்ரீதரன் வாசலுக்கு ஓடோடி வந்தான்.

ஸ்ரீதரன் வருவதைக் கண்டு, "ஏன் ஸ்ரீதர்! இந்தப் பாடாவதிக் காரை எங்கிருந்து வாங்கினுய்!" என்று கேட்டார்.

"இல்லை, இது நல்ல கார் தானே!..."

"நல்ல காரா! இதோ பார்! இந்த ஹார்ன் சத்தம் காது கொண்டு கேட்க முடியவில்லையே! இதைக் கழற்றித் தூர எறிய வேண்டும்" என்று சொல்லி அவன் பதில் சொல்வதற்குள்ளேயே அதைக் கழற்றித் தூர வீசி யெறிந்தார்.

ஸ்ரீதரன் அப்படியே திகைத்துப் போய் நின்ருன். அவன் மனத்தில் பொருமல் உண்டாயிற்று. இன்னும் சிறிது தாமதித்தால் கோபத்தில் அவர் காரிலுள்ள ஒவ்வொரு பொருளையும் கழற்றி எறிந்து விடுவார் போல் தோன்றியது. உடனே அவன் ஓடிப்போய்க் காரில் உட்கார்ந்து 'ஸ்டார்ட்' செய்தான்.

"இதோ பார்! இந்தக் கண்ணுடி என்னத்துக்கு!... இதையும்..." என்று வக்ரபாதம் சொல்லி முடிப்பதற்குள் ஸ்ரீதரன் காரை 'விர்' என்று விட்டுக் கொண்டு போய் விட்டான்.

வக்ரபாதம் வெற்றிப் புன்னகையுடன் கார் போவதையே பார்த்துக் கொண்டு நின்ருர். அச்சமயத்தில் அவரது மனைவி வந்து, "ஸ்ரீதரன் எங்கே! இன்னும் அவன் பூரா வீட்டையும் பார்க்க வில்லையே!..." என்ருள்.

உடனே அவர் "அதோ பார்!" என்று கூற்த் தூரத்தில் வாயு வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் காரைச் சுட்டிக் காட்டிக் 'கலகல' வென்று சிரித்தார்.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

319. அப்படியே தழுவிக் கொண்டான்!

அதிகாயன் முதலிய மக்கள் இறந்து போனது பற்றி ராவணன் என்றுமில்லாத துயரத்தில் மூழ்கி இருந்தான்.

இந்திரஜித்துக்கும் தம்பிமார்கள் போய் விட்டார்களே என்று மனம் இடிந்து விட்டது.

'எல்லாவற்றுக்கும் ராவணன் தானே காரணம்?' என்று எண்ணிய மாத்திரத்தில் அடங்காத கோபம் வந்துவிட்டது தந்தையின் மேலேயே.

ஆயினும் ராவணனுடைய துயரத்தை அறிந்த மாத்திரத்தில் இந்திரஜித்தின் மனம் இளகி விட்டது. தந்தையின் மேல் அவனுக்குப் பேரிரக்கமே உண்டாய் விட்டது.

'சரி, இருக்கட்டும். இதோ போய் அந்த லக்ஷ்மணனைக் கொன்று விட்டு மறு காரியம் பார்க்கிறேன். கொல்லாவிட்டால் இந்த இலங்கைக்குத் திரும்புவதில்லை' என்று சபதம் செய்து விட்டுப் போர்க்களத்துக்குப் புறப்பட்டான்; அளவில்லாத படைகளுடன் புறப்பட்டான்.

* * *

போர்க்களத்தை அடைந்ததும் லக்ஷ்மணனோடும் வானர சேனையோடும் எவ்வளவோ கடூரமான யுத்தம் செய்தான். பகல் முழுதும் போர் நடந்தது.

மாலை நேரம் வந்ததும் சுற்று முற்றும் பார்த்தான். தன்னுடைய படைகள் எல்லாம் மாண்டு கிடந்தன. அனேகர் களத்தை விட்டு ஓடியும் போய்விட்டார்கள். இந்திரஜித்துக்கு மனம் கசந்துவிட்டது.

'சரி, வேறு யுக்தி பண்ண வேண்டியதுதான்' என்று பாசறைக்குப் போனான். பிரம்மாஸ்திரம் என்ற அஸ்திரத்தை உபயோகிக்க வேண்டியது தான் என்று தீர்மானித்து விட்டான்.

பிரம்மாஸ்திரம் என்றால் அது விஷப் புகையை எடுத்துச் சுற்றி வரக் கூடிய ஒரு கருவி. (ஆஸ்திரேலியா ஜனங்கள் உபயோகிக்கும் 'பூமராங்' போன்ற ஒரு கருவி.)

நடு ராத்திரி ஆய்விட்டது. யுத்த களத்தில் வானர சேனை எல்லாம் படுத்து உறங்கிக் கொண்டிருந்தன. அப்படியே ராம லக்ஷ்மணர்களும் உறங்கிக்கொண்டிருந்தார்கள்.

அந்த வேளையில் பிரம்மாஸ்திரமானது போர்க்களத்தின் மேலாகச் சுற்றி வந்து விஷப் புகையை வீசியது. விஷப் புகை காரணமாக உறங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லாருக்கும் சுவாசமே நின்றுவிட்டது. உயிர் போனவர்கள் மாதிரி ஆகிவிட்டார்கள்.

இதை அறிந்த இந்திரஜித்து "சரி, சரி, நம்முடைய சபதம் நிறைவேறியது. லக்ஷ்மணன் ஒழிந்தான்" என்று பெருமிதங் கொண்டவனாய் இலங்கை நகரத்துக்குப் போய்த் தன் அரண்மனையில் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கிவிட்டான்.

* * *

இனி நாம் போர்க்களத்துக்குப் போக வேண்டியதுதான்:

போர்ப் படைகள் சம்பந்தமான நிர்வாகம் பற்றி அயலூருக்குப் போயிருந்தார்கள் விபீஷணனும் அனுமனும், வெகு நேரங் கழித்து, நடு ராத்திரிக்கு மேல் போர்க்களத்துக்குத் திரும்பினார்கள்.

வானர சேனைகளும் ராம லக்ஷ்மணர்களும் உயிரற்ற நிலையில் கிடப்பதைப் பார்த்தார்கள். இருவரும்

திகைத்துப் போய் மிக்க துயரத்தில் ஆழ்ந்து விட்டார்கள். ஒன்றும் எண்ணத் தோன்றவில்லை.

விபீஷணனுக்கு மாத்திரம் இது உயிர்போன காரியம் என்று எண்ண இடமில்லை. ஏதோ விஷ வாயு காரணமாக ஏற்பட்ட மயக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று பட்டது.

“இது விஷயமாக ஜாம்பவானிடத்தில் கேட்க வேண்டும். ஜாம்பவான் எல்லாரையும் விட வயதில் மூத்தவன். அனுபவமும் உள்ளவன்” என்று அனுமனிடம் சொல்லி ஜாம்பவான் இருந்த இடத்துக்கு விபீஷணனும் அனுமனும் போனார்கள். விஷயத்தைச் சொன்னார்கள்.

ஜாம்பவான் சொன்னான்: “சரி, சரி, இருக்கட்டும். அதோ மருந்து மலை இருக்கிறது. அதில் ஒரு மூலிகை ஏதேஷ்டமாய் இருக்கிறது. அந்த மூலிகையை உடனே கொண்டுவர வேண்டும்.”

ஜாம்பவான் சொன்ன மாத்திரத்தில் அப்படியே ஓட்டம் எடுத்தான் அனுமன். மருந்து மலையை அடைந்தான். மூலிகைகளைப் பத்தாள் சுமை இருக்கும்படியாக ஒரே கட்டாய்க் கட்டிக்கொண்டு வந்து விட்டான். ஏதோ மலையையே தூக்கிக் கொண்டு வந்த மாதிரி இருந்தது.

மூலிகையை அப்படியே போர்க்களத்துக்குக் கொண்டுபோய் நெருப்பு மூட்டிப்புகை எழும்படி செய்தார்கள்.

எழுந்த புகையானது வானர சேனைகள் ராம லக்ஷ்மணர் இவர்களுடைய உடலுக்குள் பிரவேசித்ததும் விஷப்புகையின் வேகம் மடங்கி விட்டது. உறக்கத்திலிருந்து எழுந்த மாதிரி வானர சேனைகள் எழுந்தனர். லக்ஷ்மணன் எழுந்தான். கடைசியாக ராமனும் எழுந்தான்.

எழுந்த மாத்திரத்தில் ராமன் சுற்று முற்றும் பார்த்தான். எல்லாருடைய முகத்திலும் என்றும் காணாத ஒரு சோகத்தையும் சோர்வையும் கண்டான்.

விபீஷணனைப் பார்த்து “ஏன் இந்தச் சோகமும் சோர்வும்?” என்று கேட்டான். விபீஷணன் அதற்குப் பதில் சொன்னான்:

“இந்திரஜித்து பிரம்மாஸ்திரத்தை உபயோகப் படுத்தினான். அதன் விஷம் காரணமாக உயிரற்ற நிலைக்கு வந்து விட்டார்கள் எல்லாரும். ஜாம்பவான் சொன்னதின்மேல் மருந்து மலைக்குப் போய் இந்த மூலிகையைக் கொண்டு வந்தான் அனுமன். அனுமனால்தான் வானர சேனைகள், தம்பி லக்ஷ்மணன், நீ ஆகிய எல்லாரும் உயிர்த்து எழுந்தீர்கள்” என்று உணர்ச்சியோடு சொல்லி முடித்தான் விபீஷணன்.

அனுமனது அரிய பேருதவியை எண்ணின மாத்திரத்தில் அப்படியே உருகி விட்டான் ராமன்.

சூழ நின்ற முனிவர்களும் மங்கள வாழ்த்துச் சொல்லி ஒரே முழக்கமாய் ஆரவாரம் செய்தார்கள்.

மனசில் நின்ற பெருந் துயரம் எல்லாம் நீங்கியவனாய்க் கண்ணீர் ததும்பியவனாய் ராமன் அனுமனைத் தழுவிக் கொண்டான்.

சந்தம்

தான தன்னன
தான தன்னன

ஆய காலையில்,
அமரர் ஆர்த்தெழத்,
தாயின் அன்பனைத்
தழுவி னன்தனி
நாய கன், துயர்
நகர்ந்து போயறத்
தூய காதல்நீர்
துளங்கு கண்ணினன்.

[ஆய காலையில்: அனுமனைப் பற்றி விபீஷணன் சொல்லி முடித்ததும்; அமரர் ஆர்த்தெழ: முனிவர்கள் முதலிய பெரியோர் வாழ்த்தொலி முழங்க; தாயின் அன்பனை: தாய்போன்ற அன்புடைய அனுமனை; தழுவினன் தனி நாயகன்: கட்டி அணைத்துக் கொண்டான் ராமன்; துயர் நகர்ந்துபோய் அற: மனசிற் பெரும் பாரமாய் நின்ற துயரமெல்லாம் மெள்ள மெள்ள நீங்கி இல்லாமல் போக; தூய காதல் நீர் துளங்கு கண்ணினன்: உண்மையான அன்பிலிருந்து கசிந்த கண்ணீர்த் துளிகள் நிறைந்து பிரகாசிக்கும் கண்ணை உடையவனான—ராமன்]

அனுமனுடைய அன்பை எண்ணின மாத்திரத்தில் ராமனது உள்ளம், தாங்க முடியாமல் உருகிவிட்டது.

மண் கூஜா



எஸ்.வி.எஸ்

"மனிதனைப் போன்ற ஒரு அற்பப் பிறவிக்கு எந்த விஷயமும் அற்ப மல்ல" என்று ஒரு பிரசித்தி பெற்ற ஆங்கில ஆசிரியர் கூறினார். இதன் பொருள் அன்று தான் எனக்கு விளங்கிற்று.

ஆமாம்; அற்ப மண் கூஜா சம்பந்தப் பட்ட விஷயம்தான். ஆனால் அது எவ்வளவு பெரிய புயலைக் கிளப்பி விட்டது? மூன்று ஜீவன்களுடைய உணர்ச்சிகளையல்லவா திக்குமுக்காட வைத்து விட்டது! அற்ப விஷயங்களுக்கெல்லாம் இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு புத்தி மழுங்கிப் போகும் இந்த மனிதன் உண்மையிலேயே மிகவும் அற்பமானவன் என்பது அப்போதுதான் எனக்குத் தெளிவாயிற்று.

இதை இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுகிறேன்.

அன்று அருணாசலம் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்ததும் நேரே மாடியிலிருந்த தன் அறைக்குச் சென்றான். அங்கே தன் 'கோட்', 'சட்டை' எல்லாவற்றையும் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டிக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தான். அவன் எதிர்பார்த்த பொருளை அங்கே காணவில்லை.

அன்று காலைதான் தெருவில் விற்றுக் கொண்டு போன மண் கூஜாக்களில் ஒன்றைக் கோடையை உத்தேசித்து வாங்கினான். உடனே தன் மனைவி கற்பகத்தைக் கூப்பிட்டு, "நீ தினம் மத்தியான வேளையில் இந்தக் கூஜாவில் வடிக்கட்டின தண்ணீரை விட்டு மாடியில் என் அறையில் வைத்து விடு. எனக்கும் சௌகரியமாக இருக்கும்; உன்னையும் அடிக்கடி தண்ணீர் கொண்டுவரச் சொல்லித் தொந்தரவுசெய்யநேராது!" என்றான்.

"ஆகட்டும்" என்றாள்.

அதை நினைவு படுத்திக் கொண்டுதான் இப்போது அருணாசலம் மண்கூஜா இருக்கிறதா, தண்ணீர் கொண்டு வந்து வைத்திருக்கிறாளா என்று பார்த்தான்; காணவில்லை. 'சரி. அவளுக்கு வேறு வேலை ஏதாகிலும் இருந்திருக்கும், பாவம்! மறந்திருப்பாள்!' என்று நினைத்துக் கொண்டு மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

வீட்டு வேலை செய்யும் சின்னம்மா அங்கே வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும், அருணாசலம் "சின்னம்மா, இனி மேலே நீ காலையிலே வேலை செய்து விட்டு வீட்டுக்குப் போகும் போது, வீட்டில் ஒரு மண் கூஜா வாங்கி வைத்திருக்கிறேன், அது நிறையத் தண்ணீர் ஊற்றி மாடியில் என் அறையில் வைத்து விட்டுப் போ. நாள் தவறாமல் இதைச் செய்துவிட்டுப் போ! மறந்து விடாதே!" என்றான் அருணாசலம்.

இதைக் கேட்டாள் செங்கமலத் தாச்சி. அவள்தான் அருணாசலத்தின் முன்னறி தெய்வமாகிய தாய். அவளுக்குஅருணாசலம் உயிருக்கும் மேலே என்று சொல்ல வேண்டும். ஆம், நல்ல இளமைப் பருவத்திலே கணவனை இழந்த ஆச்சி தன் ஒரே மகனை மிக அருமையாக வளர்த்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

மகனுக்கு அடுத்தபடி அவள் மிகவும் பக்தி சிரத்தையுடன் செய்து வந்த காரியம் அனுஷ்டானம். இளம் பிராயத்திலேயே வைதவ்யக் கோலம் அடைந்து விட்டதால், நீண்ட நாள் மிக்க ஆசார அனுஷ்டானங்களுடன் வாழ்ந்து வாழ்ந்து, இப்போது அந்த ஆசார அனுஷ்டானங்களில் ஒரு சிறு குறை நேர்ந்தாலும் ஆச்சியால் பொறுக்க முடிவதில்லை. காலையில் ஆற்றில் அமுங்கிக் குளித்து விட்டு 'அரகர மகாதேவா!' என்று சொல்லி நெற்றியில் திருநீறு இட்டுக் கொண்டு துல்லியமான வெள்ளைச் சேலையை உடுத்துக் கொண்டு



'நவச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!' என்று அனுஷ்டானத்துக்கு உட்கார்ந்து விட்டாளானால், அவ்வளவு தான். நேரம் போவது தெரியாது. பசி இண்டுவது தெரியாது. உலகம் எக்கேடு கெட்டாலும் தெரியாது! அல்லது உலகம் எவ்வளவு முன்னேறினாலும் தெரியாது!

இப்படிப்பட்ட கடும் ஆசார அனுஷ்டானங்களுள்ள செங்கமலத் தாச்சிக்கு மற்றவர்கள் காரியம் எதுவும் மனசுக்கு ருசிக்காது. திருப்தியளிக்காது. நெடுங்காலம் தானே பொங்கித் தன் மகனுக்குப் போட்டு வாழ்ந்தவளாதலால் அவளுக்குத் தன் காரியம் தான் உயர்வானதாகவும், ஆசார சீலம் நிரம்பியதாகவும் தோன்றும். மற்றவர்கள் எவ்வளவு சிரத்தையுடன் எந்தக் காரியம் செய்தாலும் பிடிக்காது. அத்துடன் குற்றம் குறை சொல்லுவாள். அதுவும் அருணாசலத்துக்குக் கல்யாணமாகி மருமகள் வீட்டுக்கு வந்த பிறகு, கற்பகத்தைக் குறை கூறாத நாளே கிடையாது என்று ஆகிவிட்டது.

எந்தப் பெண் பிள்ளைதான் ஓயாமல், குற்றம் குறை சொல்லிக் கொண்டிருந்தால் கேட்டுக் கொண்டு சகிப்பாள்? அதனால் அவள் பொறுக்க முடியாது போகும் சமயங்களில் தன் கணவனிடம் மாமியார்க்காரி படுத்துவதைப் பற்றிக் கூறுவாள். பாவம், அருணாசலம். அம்மாவுக்குப் பயந்த பிள்ளை அவன். "ஆத்தாளுக்கு அடங்கித்தான் போகணும், கற்பகம். அவள் நாலு வார்த்தை சொல்லிட்டா கேட்டுக்கத்தான் வேணும். நான் என்ன பண்ண முடியும். சொல்லு. பார்ப்போம்!" என்பான். இதை எந்தப் பெண் பிள்ளைதான் கேட்டுக் கொண்டு தன் கணவனை வெறுக்காமல், தன் கணவனின் கையாலாகாத் தனத்தைக் கண்டு கசப்புறாமலிருக்க முடியும்?

ஆனால் அருணாசலம், பெற்ற தாயிடமும் தான் கட்டிக் கொண்ட மனைவியிடமும் தன் உள்ளத்திலிருக்கும் அத்தனை அன்பையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, தான் எந்த வழி போவது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான். ஆம், மண் கூஜாவில் கற்பகம் தண்ணீர் கொண்டு வைக்காததற்கு வேறு யாராகிலுமிருந்தால் வீடு இரண்டு பட்டிருக்கும். ஆனால் அருணாசலம் அப்படிப் பட்டவனல்ல. அவன் தன் மனைவியின்பால் கொண்டிருந்த அன்பு, கொஞ்ச நஞ்சமன்று. "பாவம், கற்பகம்! இன்றைக்கு ஆத்தாள் ஏதாகிலும் உருப்படாத வேலையை வைத்திருப்பாள். அதில் இதை மறந்து விட்டாள் போலும்!" என்று நினைத்துக் கொண்டு சின்னம்மாளிடம் தண்ணீர் கொண்டு வந்து வைக்குமாறு சொன்னான்.

இதைக் கேட்டுக்கொண்டே அங்கே வந்த செங்கமலத்தாச்சி, "பார்த்தாயா, கற்பகம்! உன்னைக் கட்டிக் கொண்டதில் என் பிள்ளைக்கு என்ன சுகம்? குடிக்கத் தண்ணிகூடக் கொண்டுபோய் வைக்க உனக்கு தெரியில்லே. தன் சாதி, மதம் எல்லாவற்றையும் உன்னாலே விட்டுத் துறந்து சின்னம்மா கொண்டுவந்து வைக்கும் தண்ணீரைக் குடிக்கக்கூடத் துணிந்து விட்டான். உன்னைக் கட்டிக் கொண்டதில் நம் சாதிக்கு அடுக்காத இன்னும் எத்தனைக் காரியங்கள் செய்ய வேண்டுமோ? நான் இருக்கிற வரைக்கும் அதெல்லாம் நேராதபடி என்னாலான வரைக்கும் பார்த்துக் கொள்ளுகிறேன். அருணாசலம், கூஜாவில் சின்னம்மா தண்ணி கொண்டு வந்து வைக்கவேண்டாம். நானே தினம் காலையிலே உன் அறையிலே கொண்டு வந்து வைத்து விடுகிறேன்" என்றாள்.

கையில் வாரியல் கட்டை (துடைப்பத்தை)ப் பிடித்த வண்ணம் சித்திரப் பதுமை போல் நின்று விட்டாள் சின்னம்மாள்.



செங்கமலத் தாச்சியின் இந்த மொழிகள் கற்பகத்தின் காதில் ஈட்டிகள் போல் பாய்ந்தன. அவள் கண்களில் நீர் பொல பொல வென்று வந்து விட்டது. அருணாசலத்தைப் பார்த்து, "ஏதோ ஒரு நாள் நீங்கள் சொன்ன காரியத்தைச் செய்ய வில்லையென்றால் அதற்கு இப்படியா என்னைப் பழி வாங்குவது? உங்கள் காரியங்களைச் சின்னம்மாள் தான்செய்கிறாளா, என்ன? இந்தக் காரியம் அவளிடம் சொல்லப்போய், உங்கள் ஆத்தாளிடம் இந்த வார்த்தைகள் எல்லாம் கேட்க வேண்டியதாயிற்று. உங்கள் குலத்தைக் கெடுக்க வந்தேனும்......" என்று 'ஓ' வென்று விம்மி விம்மி அழுது விட்டாள்.

தான் ஏதோ நல்ல எண்ணத்துடன் செய்ய வந்த காரியம் இவ்வளவு பெரிய ரகளையாகப் போய்விடும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை அருணாசலம். ஒன்று வெட்டப் பூதம் கிளம்பியது. அவன் மனசு சொல்ல முடியாத வேதனைக்கு உள்ளாகியது.



இரண்டு நாட்கள் சென்றன. ஆனால் மண் கூஜாவில் தண்ணீர் மட்டும் மாடிக்கு வரவில்லை.

அருணாசலம் என்ன செய்வது என்று பார்த்தான். கடைசியில் சின்னம்மாளைக் கூப்பிட்டு, ரகசியமாகக் கூஜாவில் தண்ணீர் கொண்டுவந்து வைக்கச் சொன்னான்.

சின்னம்மாளும் கூஜாவைக் கழுவித் தண்ணீர் மொண்டு எடுத்துக் கொண்டு மாடிப்படி ஏறினாள். இதைப் பார்த்து விட்டாள் ஆச்சி.

"சின்னம்மா?" என்றாள் ஆச்சி.

"ஏன் அம்மா?" என்றாள் சின்னம்மாள்.

"உன்னை யார் தண்ணீர் கொண்டு போகச் சொன்னது?" என்று கேட்டாள் செங்கமலத்தாச்சி.

"ஐயா தான்!"

இதற்குள் கற்பகம் அங்கே வந்தாள். "நீ கொண்டுபோய் வைப்பதற்கு என்ன?" என்று கேட்டாள் செங்கமலத்தாச்சி.

"நீங்கள் நிதம் கொண்டுபோய் வைப்பதாகச் சொன்னீர்களே என்று நான் சும்மா இருந்துவிட்டேன்."

"மாமியாரும் மருமகளும் போட்டி போட்டுக் கொள்வதில் நான்தான் செத்துக் கொண்டிருக்கிறேன். சின்னம்மா கொண்டு வந்து வைத்தால் அவள் கீழ்ச் சாதிக்காரி என்று தடுத்து விடுகிறீர்கள். கடைசியில் நான் என்னதான் பண்ணுவது?" என்றான் அருணாசலம்.

"கட்டிக் கொண்ட பெண்டாட்டியை அடக்கி உன் வழிக்குக் கொண்டுவரத் தெரியவில்லை. நீ என்ன ஆண்பிள்ளை? எது எப்படியானாலும் சின்னம்மா கொண்டுவந்து வைக்கும் தண்ணீரை நீ குடிக்கக்கூடாது!" என்றாள் ஆச்சி.

அருணாசலத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "எனக்கு யாருமே தண்ணீர் கொண்டுவந்து வைக்கவேண்டாம்" என்று சொல்லிக்கொண்டு மண்கூஜாவை வாங்கிப் படீர் என்று தரையில் எறிந்தான். கூஜா சுக்கு நூறாக உடைந்தது. தண்ணீர் நாலா புறமும் பரவியது!

மாசம் பிறந்தது. சம்பளம் வாங்கி, வீட்டு வாடகை, பால் கணக்கு, மளிகைக் கணக்கு எல்லாம் தீர்த்து விட்டுச் சின்னம்மாளின் சம்பளம் ஐந்து ரூபாயையும் அவளிடம் கொடுத்து விட்டான்.

மறுநாள் காலையில் அருணாசலம் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது, தூரத்தில் சின்னம்மா வருவது போல் தோன்றியது. நேரமாக ஆக, அவள் நெருங்கி வந்து கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு மண்கூஜா இருந்தது. "யார் கூஜா வாங்கி வரச் சொன்னது?" என்று தான் கேட்பதுபோல் தோன்றியது.

"யாரும் வாங்கி வரச் சொல்லவில்லைங்க. நானேதான் வாங்கி வந்தேனுங்க. என்னாலே தானே, உங்களுக்குள் இவ்வளவு சண்டை ரகளை நடந்து, அந்தக் கூஜாவை உடைச்சீங்க. அதற்குப் பதில் நானே வாங்கி வந்து விட்டேனுங்க!"

இதைக் கேட்டதும், இவள் எவ்வளவு உயர்ந்தவள்! எவ்வளவு உயரிய பண்பு! ஆகா, மனிதனின் உயர்ந்த பண்பை எடுத்துக் காட்ட அற்ப மண்கூஜா கூடப் போதும் போலிருக்கிறதே—என்று நினைத்துக்கொண்டான். எல்லாம் மன மயக்கம்!

இதற்குள் தூரத்தில் சின்னம்மாள் போல் தோன்றியவள், சின்னம்மா அல்ல. வேறு—ஒருத்தி. அவள் கையில் கூஜாவுடன் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த அருணாசலத்தைக் கடந்து போனாள். அருணாசலம் பிரமை பிடித்து நின்றான்.

அதற்குள் எதிர் வீட்டுக்காரர், "என்ன வோய் அருணாசலம், காலையிலே தூக்கம் கலைஞ்சு காப்பி ஆச்சா?" என்று கேட்டார்.

"காப்பி ஆச்சு! இன்னும் தூக்கம் சரியாகக் கலையவில்லை. சற்று இரும், உள்ளே போய்விட்டு வரேன்" என்று உள்ளே நுழைந்தான்.

வீட்டுக் கொல்லைப் புறத்தில் சின்னம்மா பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தாள். அவளைக் கூப்பிட்டு, கையில் காலணாவைக் கொடுத்து, "சாயங்காலம் வரும் போது நல்ல கூஜாவாக ஒன்று வாங்கி வா!" என்று சொல்லி யனுப்பினான்.

ஆமாம், இப்போதெல்லாம் அருணாசலம் கூஜாவில் தண்ணீர் விட்டு, தானே தன் அறையில் கொண்டு போய் வைத்துக் கொள்வதாகக் கேள்விப் படுகிறோம்.

கை வண்டிக்காரன்

சா. கி

"ஏம்மா சோறு இருக்கா!" என்று கைவண்டி இழுத்துவந்த கந்தசாமி கேட்டான்.

"அட, போய்யா" என்று வெகு விறைப்பாகச் சொல்லிவிட்டுக் கூடைக்காரி அங்கம்மா வந்து கொண்டிருந்தாள். அவள் நடையையும், வாரி முடித்த கூந்தலையும் பார்த்து ரஸித்துக் கொண்டு வந்தவனுக்கு இந்த உலகத்தில் கை வண்டி இழுக்கும் நினைவு இல்லை. அவன் மானசீக உலகில் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தான். சற்று நேரம் பொறுத்து மீண்டும், "இந்தாம்மா" என்றான்.

"சும்மா தெரு வழியே போக முடியலையோ! என்னமோ கட்டின பொஞ்சாதி மாதிரி பேசறயே!" என்றாள் அங்கம்மா.

இப்படித் தூக்கி எறிந்த மாதிரி அவள் வெட்டிப் பேசவே கந்தசாமி அயர்ந்து போனான். இரண்டு மூன்று நாட்களாக அவன் வழி மறித்துச் சோறு கேட்டும் அவள் லட்சியம் செய்யக் காணோம். "இந்தாம்மா, சோறு இருக்கு, இல்லையின்னு சொன்னா முத்து உதிர்ந்திடுமோ!" என்றான்.

"முத்தும் பவளமும் பொறுக்க வந்தவங்களா நீங்கள்! அட, வாங்கய்யா வாங்க!" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பூவரச மரத்தடியில் சோற்றுக் கூடையை இறக்கி வைத்தாள் அங்கம்மா.

"அப்படி வாம்மா வழிக்கு" என்று சொல்லிக் கொண்டே கந்தசாமி கை வண்டியை ஒதுப்புறமாக இழுத்து நிறுத்தினான். அந்த மரத்தடியில் இரண்டு மூன்று கூடைக்காரிகள் சோறு விற்றுக் கொண்டும், குழாயடியில் பாத்திரங்கள் அலம்பிக் கொண்டும் இருந்தார்கள்.

அந்த இடத்தில் தான் நாலு வீட்டுச் சாப்பாட்டின் கதம்பமும் விலையாகிக் கொண்டிருந்தது. கை வண்டிக்காரக் கந்தசாமியைப் போல எத்தனையோ உழைப்பாளிகள் நாக்குக்கு ருசியாக வித விதமாகச் சாப்பிடும் ஹோட்டல்பிறை அது. அதுவும் சின்னஞ் சிறிசுகள் அள்ளிக் கொடுக்க நேர்ந்தால் பசிக்காவா செய்யும்! கை வண்டிக்காரக் கந்தசாமி உரிமையுடன் தான் அவளிடம் சாதம் விலைக்குக் கேட்டான்.

அவளோ அலுப்போடு "பார்க்கிறேன்" என்றாள். அவளுக்கு ஒரு வயசு வந்த ஆண் மகனிடம் பேசக் கூச்சம். அத்துடன் தன்னை அவன் ஏமாற்றி விடக் கூடாதே என்ற பயம் வேறு.

"ஏம்மா உன் பேரு!" என்றான் கந்தசாமி.

"கத்தரிக்காய்! சும்மா சாப்பிட்டு விட்டுப் போ. அதுவும் எங்க பாட்டிச் சொல்லிச் சேன்னு போடறேன்!"

"பாட்டி சொல்லிச்சா! நேத்தே கேட்கணுமின்னு நினைச்சேன். பாட்டிக்கு என்னிடம் எவ்வளவு பிரியம் தெரியுமா! எங்க கந்தசாமி வரணும் அவன் திங்கணும் என்று சொல்லிப் பத்திரமா எனக்கு வைச்சிருக்கும். நீ என்னடான்னா சுத்த மூடடா இருக்கே!"

"இந்தா, இந்தா! சாக்கிறதையாப் பேசு, ஐயா! திங்கிறது வெலைச்சோறு, வாய் மட்டும் சர்க்கரைக் கட்டியா வருதோ!"

"இல்லேம்மா! உங்க பாட்டிக்கு உடம்பை என்ன செய்யுது!" என்று சம்பிரதாயமாகப் பேச்சை ஆரம்பித்தான் கந்தசாமி. அங்கம்மாவினுடைய பாட்டியின் முக்கிய வாடிக்கைக்காரர்களில் முதன்மை ஸ்தானம் பெற்றவன் கந்தசாமி. விசேஷக் கறி வகைகள் அவனுக்கென்று தனியாகக் கொடுப்பாள் கிழவி. கந்தசாமியும் பாட்டியின் உபசாரத்துக்குத் தகுந்த சன்மானம் கொடுப்பது உண்டு. மூன் பணமாகக்கூட நாலு இரண்டு அவன் கொடுத்து விடுவான். இதையெல்லாம், பேத்தியிடம் பாட்டி சொல்லியிருந்தால் அங்கம்மா அவனைக் கோபித்துக் கொண்டிருக்க முடியாது.

அங்கம்மாவுக்கு இருந்த துணிச்சல் போய் அவனை அறியாமலே நாணம் பிறந்து விட்டது. அவள் இதுவரை யாரிடமும் பேச அஞ்சியவள் அல்ல. இன்று அவளுக்குப் பேச்சு தர்மசங்கடமாக இருந்தது. பாட்டியின் உடல் நிலையைச் சொல்வதற்குள் வியர்த்து விட்டது. நாக்குக் குழறிற்று. கந்தசாமிக்கு ஒரு டிபன் செட்டு பாத்திரத்தில் சோறும் குழம்பும் வெஞ்சனங்களும் எடுத்து வைத்தாள்.

"உங்க பாட்டிக்கு உடம்புக்குச் சரியில்லை என்ற விவரம் தெரிந்தா நானே வந்து பார்த்திருப்பேன்!" என்றான் கந்தசாமி பரிவோடு.

"பாட்டியும் சொல்லிச்சு" என்றாள் அங்கம்மா தலை குனிந்தபடி.

"நாளைக்கு வாரேன். உன் வீடு எங்கே!"

"தென்னூரிலே, பருப்புக்காரன் தெரு."

"ஓகோ, இன்னிக்கே அந்தப் பக்கம் வண்டி வரும். வந்து கேட்டாத் தெரியுமில்லே!"

"தெரியும்!"

கந்தசாமிக்கு அன்று சோறு சோறாக இல்லை. தேவாமிர்தமாக இருந்தது. ரஸமும் குழம்பும் என்றைக்கும் கிடைத்ததைவிட அன்று ருசி அலாதி. திருப்தியாகச் சாப்பிட்டவன், அருகில் இருந்த குழாயடிக்குப் போனான். கை சுத்தம் செய்தவன், வந்து வண்டியில் உட்கார்ந்ததும் ஏதோ நினைப்பு வந்தவன்போல "அடடே, வெத்திலை பாக்கு மறந்து போச்சே!" என்றான்.

"இதோ இருக்குதே!" என்று வெற்றிலையை எடுத்துக் கொடுத்தாள் அங்கம்மா.

"பாட்டியைவிடப் பேத்திப் பொண்ணு கெட்டிக்காரிதான். உம் பேரு!" என்று கேட்டான் கந்தசாமி.

"பேரு எதுக்காம்!"

"அட, நாளைக்கு நீ வர நேரமாச்சின்னாலும் அந்தப் பொண்ணு.........எங்கே அம்மான்னு பக்கத்திலே யாரையாவது கேட்கலாமே!"

"எங்க பாட்டி பேருதான் எனக்கும்!"

"உன் பேரும் அங்கம்மாதானா! அம்மாவைப் பெத்த பாட்டியா! ஐயாவைப் பெத்த பாட்டியா!"

"எங்கம்மாவைப் பெத்த பாட்டி அது!"

"உனக்கு அம்மா இல்லையா!"

"இல்லை."

"பாட்டிக்கு உடம்பு சரியானதும் நீ சோறு கொண்டு வரமாட்டே!" என்று கேட்டான்.

"ஊஹூம்" என்றான் அங்கம்மா. சுவாரஸ்யமாக வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொண்டு கந்தசாமி கண்ணை மூடி வண்டியில் முடங்கி விட்டான். மேலே வேப்ப மரத்து நிழலும் காற்றும் அவனுக்குத் தாலாட்டின. அங்கம்மா மிச்சமிருந்த சோற்றை மற்றவர்களுக்கு விற்றுக் காசாக்கிக் கொண்டு புறப்பட்டாள்.

2

மறு நாள் வழக்கத்திற்கு விரோதமாக வெகு சீக்கிரத்தில் வந்து சேர்ந்தான் கந்தசாமி. வழிமேல் விழி வைத்து என்பார்களே அப்படி அவள் வரும் திக்கையே நோக்கிக் கொண்டிருந்தான். கூடைக்காரிகளெல்லாம் டிபன் செட்டுகளைத் திறந்து வியாபாரக் கடையை ஆரம்பித்து விட்டார்கள். கந்தசாமிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. அங்கம்மாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

தலையிலே பாரம் அழுத்த, அது நடையில் பிரதிபலிக்கும் விதமாக அங்கம்மா ஆடி ஆடி நடந்து வந்தான். அவளை அறியாமலேயே எழுந்து போய்க் கூடையை இறக்கினான். அவளும் பெருமூச்சு விட்டாள். ஒன்றும் பேச ஓடாமல் "நேத்து வெத்திலைப் பையைக் கொடுத்திட்டுப் போயிட்டயே!" என்று பேச்சை ஆரம்பித்தான் கந்தசாமி. அவள் அவன் பேச்சைக் கேளாதவள் போல பல பாத்திரங்களில் இருக்கின்ற சோறு பதார்த்தங்களை ஒரு பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டிருந்தான். வலுக்கட்டாயமாகப் பேசியும் பழக்கமில்லை, இருந்தாலும் பேச வேண்டுமென்ற ஆவல் இருந்தது.

"பாட்டிக்கு எப்படி இருக்கிறது!"

"தேவலை!"

"நேத்து நான் வர முடியலை! இன்னிக்காவது வந்து பாட்டியைப் பார்க்கணும்" என்றான் கந்தசாமி. அவள் அவனுக்குரிய சாப்பாட்டை எடுத்து வைத்தான். அவன் சாப்பிட ஆரம்பித்ததும் சாப்பிட முடியவில்லை. பசி மந்தமடைந்து விட்டதாகப் பட்டது. உள்ளம் நிறைந்து உவகை கொண்டது. அவனுக்கே புரியாத ஆனந்தம் பெருக்கெடுத்தது.

"இன்னம் கொஞ்சம் சோறு வேண்டுமா!" என்று கேட்டான் அங்கம்மா.

"போதும்."

அவனுக்கு வேறு பதில் சொல்ல முடியவில்லை. இருப்பிடையடைந்தவனாக எழுந்து, கை சுத்தம் செய்யப் போனான். அந்த இடத்து வியாபாரம் மும்முர நிலையை அடைந்து கொண்டிருந்தது. யாரும் இவர்கள் பேச்சையோ முக பாவத்தையோ கவனிக்கச் சந்தர்ப்பமில்லை.

வண்டியில் இருந்த வெற்றிலைப் பையை எடுத்து வந்தான். அதிலே வாசனைப் பாக்கும் இளந் தளிர் வெற்றிலையும் இருப்பதைக் கடைக் கண்ணால் கண்டாள் அங்கம்மா. அதிலுள்ள வெற்றிலையைப் போல அவள் வாங்கிப் போட்டதில்லை. அவன் போட்டுக் கொண்டு அவளிடம் கொடுத்தான்.

"வெற்றிலை நிறைய இருக்குதே!"


"கொண்டு போய்ப் பாட்டிக்குக் கொடு" என்று சொல்லிக் கொண்டே குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டு, பையை அவள் மடியில் வீசினான். வண்டியை இழுக்க ஆரம்பித்த போது "இது என்ன தர்ம சத்திரமா!" என்று கேட்டாள் அங்கம்மா.

"இந்தாம்மா இனும் சோறு போட்டதாக எண்ணாதே! நேற்று நீ கொடுத்த வெத்திலைக்குப் பதில் வெத்திலை இருக்கு!" என்றான் கந்தசாமி.

"சோத்துக்குக் காசு!" என்று கேட்டாள் அங்கம்மா.

"பையைப் பாரு, பையை!" என்றான். அவள் வெற்றிலைப் பையைப் பார்த்தான். அதிலே இரண்டு நாளும் சாப்பிட்டதற்குரிய காசு எட்டணா கிடந்தது. வெட்கத்தோடு சிரித்துக் கொண்டான் அங்கம்மா. இந்த அசட்டுச் சிரிப்பில் அவள் அழகு அதிக அழகாக அவன் கண்ணில் காட்சி யளித்தது.

"புறப்பட்டாச்சா!" என்றாள். கேட்டு விட்டு ஏன் கேட்டோமென்று தன்னையே



இராப் பாராக்காரன்:—நான் ராத்திரி பாரா பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு சொப்பனம் கண்டு எழுந்தேன்.

இரண்டாவது பாராக்காரன்:—என்ன சொப்பனம்?

முதல் பாராக்காரன்:—நான் கண் விழித்துக் கொண்டு பாரா பார்ப்பது போலத்தான்......

நொந்து கொண்டவள் மாதிரி நாக்கைக் கடித்துக் கொண்டாள், அங்கம்மா.

"ஏன்!" என்று கேட்டான் கந்தசாமி.

"எங்க பாட்டி அந்தத் தம்பி கிட்டே கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு வான்னு சொல்லிச்சு, மருந்து வாங்கணும்."

"பணமா! நாளைக்குத் தர்றேன்னு சொல்லு" என்று சொல்லிக் கை வண்டியை இழுத்துக் கொண்டு நடந்தான் கந்தசாமி.

3

கை வண்டிக்காரக் கந்தசாமிக்கு அங்கே அங்கம்மாவின் வீடு தெரியாமல் வண்டியை மலபாரி மக் கடைப் பக்கமாக நிறுத்திக் கொண்டு அங்கே நின்ற இரண்டொருவரிடம் கேட்டான்.

"என்னப்பா கேட்கிறே!" என்று இடக்காக கேட்டான் ஒரு பேர்வழி. அவன் கேள்வியை யடுத்துக் கல கலவென்று சிரிப்பொலி வந்தது.

"அதுதான்! ஐயா சாப்பாட்டுக் கூடை சுமக்கிறாங்களே அங்கம்மா, அவுங்க வீடு எது!"

"எந்த அங்கம்மா!"

"அட, சொல்ல விருப்பமிருந்தா சொல்லு. இல்லேன்னா சும்மா இரு ஐயா! பரிகாசமா செய்யறே!" என்று சற்றுக் கோபமாகச் சொன்னான் கந்தசாமி.

"குட்டி அங்கம்மாவா!" என்றான் ஒரு மீசைக்காரன், 'குட்டி'யில் ஒரு அழுத்தம் கொடுத்து நீட்டி முழக்கியபடி.

அடுத்த விநாடி பிசாசு பிடித்தமாதிரி அவன் குரல்வளையைப் பிடித்து விட்டான் கந்தசாமி. இதை எதிர்பாராத மற்றவர்கள் அவனை அடிக்க ஆரம்பிக்கவே சாக்கு மூட்டைகளை அநாயாசமாகத் தூக்கி எறிந்து பழகியவனாதலால் ஒவ்வொரு பயலையும் செந்தூக்காகத் தூக்கித் திக்குக்கு ஒருவனாக வீசி யெறிந்தான். நாலைந்து சோதாக்களும் தடி தடியாக இருந்தும் கந்தசாமியின் வஜ்ரம் பாய்ந்த உடல் வலிமைக்கு முன்னால், சோளத்தட்டை யாகிவிட்டனர். இந்தக் கலாட்டா நடந்து கூட்டமும் கூடி விடவே போலீஸ் வந்து தகவல் விசாரிக்க, போலீஸ் கண்காணிப்பு ஏற்கெனவே உள்ள அந்த நால்வரில் இருவர் பின் வாங்கினார்கள். கந்தசாமி நடந்ததைப் போலீஸ்காரனிடம் சொல்ல, போலீஸ்காரன் அவர்களைக் கண்டித்தான். நால்வரும் மன்னிப்புக் கேட்டார்கள்.

தனக்காக ஒரு பாரத யுத்தமே நடந்து விட்டதை ஒரு மூலையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அங்கம்மாவுக்கு ஒரு புறம் பயமும், ஒரு புறம் சந்தோஷமும் மாறி மாறி அவள் இதயத்துள் ஒளிந்து வெளிப் பட்டன. போலீஸ்காரன் "இனிமேல் இந்தத் தெருவில் எந்தக் கலாட்டா நடந்தாலும் உங்கள் நால்வரையும் பாதிக்கும். ஜாக்கிரதை!" என்று எச்சரித்து, அவ்வளவு பலத்தோடு நால்வரையும் மண் கவ்வ வைத்த கந்தசாமியின் தோளில் தட்டி, "பேஷ், தம்பி! உன்மாதிரி வீரம் இருக்கணும். காலிப் பயல்களுக்கு பயந்து சாகாமல் தெருவோடு போய்விடுகிறவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. அந்தப் பெண் யாரு உனக்கு!" என்று கேட்டான், தனிமையாக அழைத்துக் கொண்டு போய். அவன் உறவு முறை சொல்லத் தயங்கியபோது சுவர் ஓரத்தில் நின்ற அங்கம்மா சொன்னாள்:

"அது எங்க மச்சான்."

"சபாஷ், பாண்டியா! அதுதான் அத்தனை ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது உனக்கு! ஏதாவது கெடுதல் வந்தால் இந்த 12ம் நம்பரிடம் வந்து சொல்லு!" என்று தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தான் போலீஸ்காரன். கூட்டம் கலைந்ததும் கை வண்டியை இழுத்துக் கொண்டு கந்தசாமி "உங்க வீட்டுக்கு வறதுக்கு முன்னாலேயே கலாட்டா வந்திட்டுது" என்று வேடிக்கையாகப் பேச்சை ஆரம்பித்தான். அவள் தன் தலையிலுள்ள கூடையை வண்டியில் வைத்துவிட்டு அவன் பக்கத்தில் கூடவே நடந்து வந்தாள்.

சிறு குடிசையின் முன் வண்டி போய் நின்றதும் கிழவியே வெளியே வந்து விட்டாள். "யாரு, தம்பி கந்தசாமியா! வா, அப்பா!" என்று அன்போடு அவனை வரவேற்றாள்.

"பாட்டி, உடம்பு தேவலையா! என்னமோ எங்க பாட்டிமாதிரி சோறு போட்டே; வளர்ந்திட்டேன். பணம் கேட்டாயாம் நீ! உன்னைப் பார்க்க நேத்தே வரணும்னு நினைச்சேன்!" என்று கந்தசாமி அன்போடு சொன்னான்.

"பணம் இருக்கட்டும், தம்பி! நானும் உன்னை அஞ்சாறு வருஷமா பார்க்கிறேன். உம்மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு. எனக்கும் தள்ளாடிப் போச்சு. இனிமே கூடை தூக்கி நடக்கிறது முடியாத காரியம். இந்த மாசம் முடியப் பணம் வரணுமென்னு வயசு வந்த பேத்தியைப் போகச் சொன்னேன். அடுத்த மாசம் முதல் அவ, சோறு தூக்கி நாஞ் சாப்பிடறதா, இல்லாவிட்டால், என்ன செய்யறதுன்னு தெரியலே. நீ என்ன நினைக்கறே!"

"உம்!"

"உன் மனசைக் கேட்போமென்னு தான், இங்கே வரச் சொன்னேன். பணம் எனக்கு வேண்டாம். உன்னை எப்படி வரச் சொல்றதுன்னு தோணலே. அதனாலே..." என்று பாட்டி தயங்கித் தயங்கிக் கந்தசாமியின் முடிவை எதிர்பார்த்தாள்.

"சரி, பாட்டி! நானும் தனியா இருக்கிறது தெரியும். எனக்கு யாரு இருக்கிறது இந்த உலகத்திலே! உன் பேத்தியைக் கண்டதும் உன்னைப் பார்க்கணுமின்னே நினைச்சேன்!"

"அப்போ பருத்தி புடவையாக் காச்ச கதையாகிப் போச்சு. ஏ, குட்டி அங்கம்மா, இங்கே வா!" என்றாள் பாட்டி.

அங்கம்மா இவ்வளவு பேச்சையும் கேட்டுக் கொண்டு இருந்தவள் வெளியே வரவில்லை. உள்ளே இருந்தபடியே "ஏன்!" என்றாள்.

"அட வா, இப்படி!" என்று சொல்லிப் பாட்டி உள்ளே போய் அவளை வெளியே இழுத்து வந்து "உன் சம்மதம் என்ன!" என்று கேட்க, அங்கம்மா தோளில் முகத்தை இடித்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

அவன் ஆசையில் மண் விழுந்த மாதிரி கடைசியில் அவன் சொன்ன விஷயம் இருக்

தது. "நாலு பவுனில் ஒரு சங்கிலியாவது போடணும். இரண்டு பவுனில் நாலு வளையலும் போடணும்!" என்றாள் அங்கம்மா. பாட்டி, எவ்வளவோ புத்தி சொல்லியும் பேத்தி தன் பிடிவாதத்தை விடவில்லை.

"புதுப் பெண்ணுக்கு நகைக் கிறுக்கு இருக்கத்தான் செய்யும், பாட்டி! என்னாலே முடியும் முடியாதுன்னு ஒரு வாரத்திலே சொல்லட்டுமா!" என்று எழுந்தான் கந்தசாமி.

கந்தசாமிக்கு அந்த நிமிஷம் முதல் நாலு பவுன் சங்கிலி, இரண்டு பவுனில் நாலு வளையல் — இதுவே நினைவாகப் போய்விட்டது.

அங்கம்மாவுக்குப் பெண் இனத்து முக்கிய ஆசையான நகைமீது மையல் இருந்ததில் வியப்பொன்றுமில்லை. அவள் கலியாணத்திற்கு முன் நகை போட்டுக் கொண்டால்தான் முடியும். அப்புறம் ஆறின கஞ்சி பழங்கஞ்சி யென்ற அனுபவத்தைச் சுற்றியுள்ளவர்கள் வாழ்க்கையில் நிதர்சனமாகக் கண்டவள். நகைக்கு ஆசைப்பட்டு நல்ல மாப்பிள்ளையை விட்டு விடக் கிழவி விரும்பவில்லை. ஆனால் பேத்தியின் பிடிவாதமும் நியாயமாகப்பட்டது.

கந்தசாமி தன் உழைப்பின் ஊதியத்தைத் தன் செலவுக்குப் போக எஞ்சியதைக் கடைக்காரர் ஒருவரிடம் கொடுத்து வைத்திருந்தான். ஐந்து வருஷ உழைப்பில் முந்நூறு ரூபாய்க்குப் மேலாக மீதமில்லை. முந்நூறு ரூபாய்க்குப் பவுன் வாங்குவதா, துணி மணி வாங்குவதா! கலியாணம் செய்வதென்பது பணத்தைப் பொறுத்தது. பணம் மனசுக்கும் அப்பால் நின்றதென்பதை உணர்ந்தான்.

ஒரு வாரம் தன் சக்திக்கு அதிகமா உழைத்தும் அவனால் அதிகமாகச் சம்பாதிக்க முடிந்தது ஐந்து ரூபாய்தான். இப்படி அவன் சம்பாதித்தால் இன்னும் நாலு வருஷம் சம்பாதிக்க வேண்டும். அதன் பின்பு திருமணத்தைப்பற்றி யோசிக்க வேண்டும். இந்தச் சமயம் டவுனில் மூட்டை யிழுத்துக்கொண்டு போகும்போது புதிதாக அறிமுகமான கான்ஸ்டபிள் 12-ம் நம்பர் அவனைப் பார்த்துப் புன்முறுவலுடன் பீட் கொடுப்பதும் சமயா சமயங்களில் நிறுத்திப் பேசுவதும் வழக்கமாகி விட்டன.

தன் சக்திக்கு அதிகமான பாரத்தை அவன் இழுத்துச் செல்லும்போது "ஏனப்பா இப்படிப் பணத்தாசை!" என்பான் போலீஸ்காரன்.

"கஷ்டப்பட்டாத்தானே சுகம்!" என்று கேட்பான் கந்தசாமி.

"பாரவண்டியை விடப் பல்லாயிர மடங்கு கனமானது குடும்பபாரம்" என்று விளையாட்டாகச் சொல்லுவான் போலீஸ்காரன்.

சிரித்துக்கொண்டே போய்விடுவான் கை வண்டிக்காரக் கந்தசாமி.

இன்னும் ஒரு நாள் போய்விட்டால் அவன் உண்டு இல்லையெனச் சொல்ல வேண்டும். குறிப்பிட்ட தினம் வந்தது. கந்தசாமி அடையாளம் காண முடியாதபடி அவ்வளவு நாகரிகமாக உடையணிந்திருந்தான். தலையும் சீவித் துல்லிய வெள்ளைத் துணிமணிகள் அணிந்து மாப்பிள்ளைக் களை துலங்க வந்தான். கிழவிக்கும் குமரிக்கும் உயிர் வந்தது.



கனகம் :—உங்கள் மாட்டுப் பெண் சொல்வதையெல்லாம் நீங்கள் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள் என்று தான் சொல்கிறேன்.

பாட்டி :—நீ சொல்லுகிறதே காதில் விழவில்லை. கொஞ்சம் இரைந்து பலமாகச் சொல்லு.

"என்ன தம்பி, நகையும் நட்டும் இல்லாட்டியும் போவுது. நானே நீ சம்பாதிச்சா நகை செய்து போடாமல் இருக்கப்போகிறாயா!" என்றாள் கிழவி.

"அது என்னத்துக்குப் பாட்டி, இதோ பாரு!" என்று சட்டை ஜேபியிலிருந்து எடுத்தான். சிவப்புக் காகிதத்துக்குள் மினு மினுவென தகதகாயமாய்ச் சங்கிலி மின்னிற்று. இரண்டு ஜோடி வளைகள் மின்னின. அங்கம்மாவின் வாயெல்லாம் பல்! அவள் வாழ்வின் மனோரதம் கைகூடிவிட்டது. அவளுடைய கழுத்திலே பொன் மயமான நகைகள்! அவள் புன்னகை பூத்தாள். அன்பும் ஆசையும் கலந்த பார்வையால் அவன் மனசைக் குளிர்வித்தாள்.

"இதைக் கொடு பாட்டி, பேத்திப் பெண்ணிடம்!" என்று கூறிக் கந்தசாமி பாட்டியிடம் இன்னொரு பொட்டணத்தைக் கொடுத்தான்.

பாட்டி வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு "இந்தா அங்கம்மா, உன் மனம்போல நடந்தாச்சு!" என்று கொடுத்தாள். வெட்கமும் சந்தோஷமும் பொங்க அங்கம்மா கையிலே வளையலைப் போட்டுக் கொண்டிருந்தபோது, வெளியே இருந்து அதட்டலான குரல் வந்தது.

"யாரது!" என்ற குரல் கேட்டதும் கந்தசாமி அங்கே நின்றவன் ஒரு மூலையில் பதுங்கினான். வெளியே எட்டிப் பார்த்தபோது ஒரு போலீஸ்காரன் நின்றுகொண்டிருந்தான். அவன் சும்மா நிற்கவில்லை. ஓங்கிய குரலில் "ஏ! கிழவி, இங்கே ஒரு திருட்டுப் பயல் வந்தானே, எங்கேயவன்!" என்று கத்தினான்.

திருடன் என்ற சொல் கேட்டதும் வளைகள் கழன்று விழுந்தன. நடுங்கி விட்டாள் புதுப் பெண். கிழவிக்கு மூச்சு வாங்கிற்று. பேந்தப் பேந்த விழித்தாள்.

"எத்தனை நாளாக அந்தத் திருட்டுப் பயல் இங்கே வருகிறான்!" என்று சொல்லிக் கொண்டே கான்ஸ்டபிள் நுழையவும் கிழவிக்

குக் கண் பிதுங்கி விட்டது. செயலற்று நின்ருன் ; குடிசைக்குள் கந்தசாமியைத் தேடி ஞன். கந்தசாமி அவன் கண்ணில் படுவதற்கு முன், போலீஸ்காரன் கண்ணில் பட்டான். "திருட்டு நாயே...யார்...அடடே நீ...நீ நம்ம கந்தசாமியா !" என்று ஓங்கிய கையை ஒடுக்கிஞன் போலீஸ்காரன்.

"ஆமாம். நீங்களா !" என்ருன் கந்தசாமி.

"இந்த வளையலும் செயினும் எங்கே திருடினே ! நேற்று பெரிய கடையில் 'பிக்பாக்கெட்' அடித்ததை இன்றே கில்ட்டு போட்டு இங்கே கொண்டு வந்து விட்டாயோ ! திருட்டுப் பயலே !"

"இது நான் திருடவில்லை, செயின் என்னுடையது !"

"சரி, வளையல் திருடியது உண்மை தானே!"

"ஆமாம்."

அங்கம்மா அந்தப் போலீஸ்காரன்தான் முன் அடிதடியைத் தீர்த்து வைத்தவன் என்று அடையாளம் கண்டு கொண்டாள். "ஐயா, அவர் எனக்காகத்தான் திருடி இருக்க வேண்டும். நான் அவரைத் திருடும்படி தூண்டி விட்டேன்" என்று கெஞ்சி அழுதாள்.



ஒருவர் :—என்னங்க ! நீங்களும் சுப்பையாவும் அண்ணன் தம்பி போலப் பழகினீங்க, இப்ப திடீர்னு சண்டை போட்டுக் கிட்டீங்களே ! ஏன் அப்படி ?

மற்றவர் :—நாங்க சிநேகிதம்னு நினைச்சுக்கிட்டு இருந்த வரையிலும் ரொம்ப அன்யோன்யமாகத்தான் இருந்தோம். எப்போ அண்ணன் தம்பி என்கிற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டதோ அப்பவே எங்களுக்குள்ளே சண்டை எங்களைக் கேட்காமலே வந்துவிட்டது.

கான்ஸ்டபிள் "பேஷ் ! இரண்டு பேரும் ஜெயிலுக்குப் போகலாம்" என்ருன். கிழவி, கான்ஸ்டபிளின் கையைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதாள்.

"தம்பி, நீ திருட்டுப் பொருளை வைத்திருந்ததே குற்றம். ஏதோ உன்னை எச்சரிக்கை செய்து விட்டு விடும்படி சொல்லுகிறேன். நீ இந்த மாதிரி செய்ததை என்னல் நம்பமுடியவில்லை" என்ருன் போலீஸ்காரன்.

"இல்லை எசமான். இந்தப் பொண்ணு கேட்ட நகை ஆசையிலே திருடக் கூட..."

"சரி வளையலோடு ஸ்டேஷனுக்கு வந்து மன்னிப்புக் கேளு. "அப்பாலே நானும் சொல்லறேன்" என்ருன் கான்ஸ்டபிள்.

"எப்படியாவது விடுதலை செய்திடணும், நீங்க நல்லா இருக்கணும்" என்று கிழவி அழ மாட்டாத குறையாகக் கேட்கக் கான்ஸ்டபிள் கந்தசாமியை பலாத்காரமாக ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ருன்.

5

"இன்னிக்காவது உள்ளதைச் சொல்லி விடு" என்று அங்கம்மா தன் புருஷனைத் தினம் தினம் நச்சரித்து வந்தாள்.

"அட, சொன்ஞல் நம்பிக்கை இல்லையா ! நிஜந்தான் ! அவரு எம்மேலே ஏற்பட்ட நல்லெண்ணத்தாலே......"

"எங்கேயாவது போலீஸ்காரர். அகப்பட்ட திருடனைத் தண்டிக்காமல் விடுவாரா ! நீ பொய் சொல்றே !" என்ருள் அங்கம்மா.

"பொய்யா ! அவரைத்தான் கேளேன் !"

"கேட்டாச்சு......!"

"என்ன சொன்ஞரு !"

"உள்ளத்தைச் சொல்லாமல் என்னையும் எங்க பாட்டியையும் ஏமாத்திப் போட்டாயே!"

"உள்ளது என்ன ! என்னிடம் பணம் மூந்நூறுக்கு மேலே இல்லை. இந்தச் சங்கிலிதான் செய்ய முடிஞ்சுது. உன்னோட கண்டிஷனைப் போலீஸ்காரரிடம் சொன்னேன். அவரு எட்டணுவுக்கு இரண்டு ஜோடி பித்தளை வளையல் வாங்கு. அதற்குக் கில்ட்டு அடி நான் வந்து சரிசெய்திடறேன்னு யுக்தி சொன்ஞரு."

"அட, நிஜத் திருடன் மாதிரியே நடிச்சயே ! கெட்டியா பாட்டி இவர் வேலையை !" என்ருள் அங்கம்மா.

"கேட்டுக் கிடக்கு. உன் பிடிவாதத்தை அப்படி அடக்கலையாணு நீயும் வசப்பட மாட்டே. இப்போ போன பழங்கதையை ஏன் பேசறே!" என்ருள் பாட்டி.

"பழங் கதையா !"

"ஆமா. எங்கிட்ட சொல்லாம, என் அனுமதி இல்லாம தம்பி இதைச் செய்யுமா! சொல்லித்தான் செய்தது" என்று சாவகாசமாகச் சொன்னபோது அங்கம்மாவுக்குத் தலை சுற்றியது. கந்தசாமி அவள் கீழே விழாமல் நெஞ்சிலே சாத்திக் கொண்டபோது மயக்கம் தெளிந்து பழைய நிலையை யடைந்தாள்.



"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி பூஜை செய்யப்பட்டது
ஆயுள் பூராவும் பலன் தரக்கூடிய
வெள்ளி ரக்ஷை ரூ. 43-12-0

தற்போது அனுப்ப வேண்டியது ரூ. 5-12-0. ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் கோரும் கோரிக்கைகளை எழுதி தற்போது ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். கீழே கொடுத்துள்ளபடி நம்மிடம் ரக்ஷை வாங்கியபிறகு 108 நாளைக்குள் நன்மையான பலன்களை அனுபவித்து பாக்கி ரூ. 38-0-0 அனுப்பவும். தற்போது கேட்கும் ரூ. 5-12-0 ரக்ஷை வெள்ளி கவரிங்குக்கும் தபால் ரிஜிஸ்டர் செலவுக்கும், விளம்பர செலவிற்குமாக மேலே கண்ட தொகை கேட்கப்படுகிறது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை அணிவதால் ஏற்படும் நன்மைகள்

1. சுகசரீரிகளாயும், எப்போதும் போஜனாதிகளில் குறைவின்றியும் இருப்பார்கள்.
2. குடும்ப ஒற்றுமை, குடும்ப அபிவிருத்தி தனதான்யாதிகள் வாக்குப் பலிதம். குடும்ப நிர்வாக திருப்தி.
3. சகோதரம் ஒற்றுமை, சகோதரமில்லாதவர்களுக்கு சகோதரம் ஏற்படும். பிரிந்த சகோதரர் கூடுவர்.
4. மாதுர் அபிவிருத்தி, வாகன அபிவிருத்தி, பூமி கட்டட அபிவிருத்தி ஏற்படும்.
5. புத்திரர்களுக்கு ரோக நிவர்த்தி, மலடு உடையவர்களாயிருந்தாலும், புத்திரம் ஏற்படும்.
6. சத்ருக்கள் பங்க மடைவார்கள். தீராத ரோகமும் தீரும். ருணம் நிவர்த்தி.
7. வாலிபர்களுக்கு நல்ல குணவதி லபிப்பார்கள். மற்றவர்களுக்கு ஸ்திரீ நேசமும், ஸ்திரீயின் சொருஷையும் கிடைக்கும். பால்யப் பெண்கள் அணிவதால் சத் புருஷனை அடைவார்கள். மற்றவர் அணிவதால் கணவன் ஒற்றுமை. பிரிந்த கணவனை அடைவார்கள்.
8. ஸ்திரீகள் அணிவதால் மாங்கல்ய தீர்க்கமும் புருஷர் அணிவதால் ஆயுள் தீர்க்கமும்.
9. வாலிபர் அணிந்தால் பிதுருவின் பிரீதியை அடைவார். விசேஷ பாக்யமும், லக்ஷ்மி கடாக்ஷமும் ஏற்படும்.
10. கல்வி பயிலுபவர்கள் அணிந்தால் கல்வியில் தேர்ச்சியும், படித்தவர்கள் அணிந்தால் உத்தியோகமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு கிருஷிகம் மேன்மைபடும். வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி ஏற்படும்.
11. அவரவர்கள் செய்யும் தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.
12. நல்ல போக போக்யமும் லாபத்தை உத்தேசித்து பண விரயமும் ஏற்படும்.

N. B:—அதர்மர்களும், நாஸ்திகர்களும் விசேஷ பலன்களை எதிர்பார்க்க முடியாது. 2. ரக்ஷை ஆர்டர் செய்பவர் ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். 3. வி. பி. பி.யில் அனுப்ப சாத்தியப்படாது. 4. வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகைக்கு பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும்.

•

கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

அயல் நாட்டு உணவுப் பண்டங்கள் இறக்குமதியினின்றும் விடுதலை பெற

களஞ்சியத்திலுள்ள வண்டு, புழு, பூச்சிகளாலும், குரங்கு மற்றும் இதர கொடிய விலங்குகளாலும் நம் உணவு தானியங்களில் பத்து சத விதம் நாசமாக்கப்படுகின்றன. அத்தகைய நாச வேலைக்கு இனி இடம் கொடுக்காதீர்கள்.

தானியக் கலப்பற்ற உணவாகச் சாப்பிடும் வழக்கத்தை மேற்கொள்ளாததால் மேலும் பத்து சத விதம் நம் உணவுப் பொருள்கள் அழிக்கப்படுகின்றது.


ஒவ்வொரு திங்கட்கிழமையும்
தானியக் கலப்பற்ற உணவாகச் சாப்பிடுவது என தீர்மானித்துக் கொள்ளுங்கள்

சகல நாசத்தையும் தடுத்துதவுங்கள்

AC 219

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392



நாளுக்கு நாள் அதிக
அழகான, தெளிவுள்ள
சருமத்திற்கு



ரெக்ஸோனாவிலுள்ள
கேடில் உங்கள் சரு
மத்திற்கு புது ஆரோக்
கியத்தையும் எழிலை
யும் தரும்.

ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே

ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிட்., க்காக இந்தியாவில் தயாரித்தவை. RP. 71-172-55 TM